

நாட
689

379

# பேசும் ஓவியம்

MADURAI UNIVERSITY LIBRARY
25 MAY 1971
MADURAI.

தில்லை வில்லாளன்

தீட்டியது
நாவலர் புத்தக நிலையம்,
48, மேல மாசி வீதி, மதுரை-1.

Book supplied by the University
central Co-op Stores, Madurai

பிரேமா
பிரசுரம்
சென்னை-24

பதிப்புரிமை வாய்ந்தது விலை ரூ. 1—25

பிரேமா பிரசுரம்—64
முதற் பதிப்பு: ஏப்ரல், 1957
பதிப்புரிமை வாய்ந்தது.

58547

அச்சிட்டோர்:
பிரேமா ஆர்ட் பிரிண்டர்ஸ்,
சென்னை—24.

## நாடகத்தில் வரும் பாத்திரங்கள்

மன்னன் மகேந்திர பூபதி
மந்திரி குலசேகரன்
ராஜகுரு கோவிந்தானந்தர்
ஓவியன் குமணன்
முருகப்பர்
பலதேவன்
நல்லப்பன்
கடல் நாட்டு கருணாகரன்
பூசாரி பூரணலிங்கம்
மரகதவல்லி
மோகினி தேவி
குமுதா
முல்லை
தங்கம்
மன்னர்கள், மலைநாட்டார், வேலைக்காரர்கள், பக்தர்கள்—மற்றும் பலர்.

இடம் : மலை நாடு, கடல் நாடு.

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI.

## காட்சி 1

**இடம் : சாலை, காலம் : பகல், இருப்போர் : மலைநாட்டு மக்களில் இருவர்.**

*[சாலையோரமுள்ள அலங்காரச் சுவர்களிலெல்லாம் பேரழகி மோகினியின் படங்கள் மாட்டப்பட்டிருக்கின்றன. எந்தப் பக்கம் பார்த்தாலும் அவளின் படங்களே நிறைந்திருக்கின்றன. ஒவ்வொரு படமும் ஒவ்வொரு வகையானதோற்றத்தில் காட்சியளிக்கிறது. அந்த வழி செல்லும் அவர்கள், படங்களையெல்லாம் ஒரு முறை பார்த்துவிட்டு, சுற்றுமுற்றும் ஒரு முறை தங்கள் கண்களால் துழாவிவிட்டு, கொஞ்சம் மெதுவான குரலில் பேசுகிறார்கள்.]*

மலை நாட்டான் :—தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பார் ஆண்டவன் என்று ராஜகுருவிலிருந்து, குளத்தடி குப்புசாஸ்திரிகள் வரையிலே கூறுகிறார்கள்-ஆனால் தூணிலும் துரும்பிலும் இருப்பது யார் தெரியுமா ?—பார்த்தாயா ?

மற்றொருவன் :—இதோ; இவள் தான்—தெரியாதா, எனக்கு !

மலை நாட்டான் :—தெரிந்து நாம் என்ன செய்ய முடியும் ? ஆட வந்தா அரண்மனைக்கு—இன்னைக்கு ஆட்டிவைக்கிறா!

மற்றொருவன் :—ஆரம்பத்தில் மன்னனின் மண்டபத்திலே ஆடினா, அப்புறம் மன்னன் மனதிலே ஆட ஆரம்பிச்சுட்டா.

மலை நாட்டான் :—அவள் ஆட்டும், பாட்டும்-அகப்பட்டு விழிப்பது நாமல்லவா ? மன்னன் மக்களை மறந்து பல ஆண்டுகளாச்சே !

மற்ருருவன் :—மன்னனை அப்படி மயக்கிவிட்டாள் அந்த மாயக்காரி.

மலே நாட்டான் :—மாயக்காரியு மில்லே—மந்திரக்காரியு மில்லே-சுழல் கண்காரி-அந்தக் கண் சுற்றுகிற சுற்றிலே, மலே நாடே சுற்றுது.

மற்ருருவன் :—மலே நாட்டுக்கே—அவளின் நாக்கு தான் சட்டசபை-சுட்டு விரல்தானே சட்டம்!

மலே நாட்டான் :—சட்டமோ, சங்கடமோ-அது கிடக்கட்டும் —அவள் படத்தை ஏன் இப்படிக் கண்ட இடங்களிலெல்லாம் மாட்டி வைக்கணும்?

மற்ருருவன் :—அவள்தானே மலேநாட்டின் தெய்வத் தாய்.

மலே நாட்டான் :—ஆமாம், மலே நாட்டையே தீய்க்கவந்த பெரும்பேய்-இந்த அரண்மனே ஆபாசத்தை ஊர், நாடெல்லாம் காட்டி ஏன் இப்படி இந்த நாட்டின் மானத்தையே மன்னன் காற்றில் பறக்க விடுகிருனே—தெரியவில்லே.

மற்ருருவன் :—பகலிலே பார்த்துப் பேசு—இரவிலே அதுவும் பேசாதேன்னு பெரியவங்க சொல்லியிருக்காங்க— அதுவும் ராஜாங்க விஷயமின்னு வாயையே திறக்காதே! எல்லாம் சக்தியாலே அண்ணேன்—அந்த இந்திரன் கெட்டதும் பொண்ணுலே, இந்த சந்திரன் கெட்டதும் பொண்ணுலே!

## காட்சி 2

**இடம் :** மோகினி தேவியின் தனி மாளிகை, **காலம் :** பகல், **இருப்போர் :** மன்னன் மகேந்திரன், நாட்டியக்காரி மோகினி தேவி.

[மோகினி தேவி, ஒரு தங்கக் கட்டிலில் சாய்ந்தபடியிருக்கிருள். அந்தத் தோற்றம் அருகிலுள்ள நிலேக் கண்ணுடிகளிலெல்லாம் பிரதிபலிக்கிறது. கண்ணுடித் தோற்றத்தையே நிஜத்தோற்றமென மன்னன் மகேந்திரன் மயங்குகிருன். அவைகளின் அருகிலெல்லாம் போய் ஏமாறுகிருன்-கடைசியாகத் திரும்புகிருன்—கட்டிலில் கிடந்த மோகினி கலகலவெனச் சிரித்தபடி எழுந்து அமர்கிருள். மன்னன் அவள் அருகில் நெருங்கி அமர்கிருன்.]

மகேந்திரன் :—மோகினி, உன் மோகன உருவம் இல்லாத இடம் இல்லே!

மோகினி :—இல்லாத இடம் இல்லையா? ஏன் இப்படிப் பொய் பேசுகிறீர்கள்.

மகேந்திரன் :—பொய்யா? மலை நாட்டிலே, இன்று குருடர் தவிர மற்றுள்ளோர் அனைவரின் கண்களிலும் உன் உருவம் காட்சி தந்துகொண்டிருக்கிறது.

மோகினி :—இருந்து என்ன செய்யட்டும், சுவாமி! (பெருமூச்சுவிடுகிருள்)

மகேந்திரன் :—ஏன் மோகினி, உன் விருப்பத்தை நிறைவேற்றி விட்டேன் என்று கூறினவுடன், குதூகலமாகப் பேசி, கொத்து கொத்தாக முத்தங்களை வீசிடுவாய் என்று எண்ணி, அன்புப் பரிசுபெற வேகவேகமாக வந்தேன். நீயோ சோகமாகப் பேசி, என் ஆர்வத் துடிப்பை அடக்குகிருய்.

மோகினி :—என் படம் மலைநாடு முழுவதும் இருந்தாலும், எந்த இடத்தில் இருக்க வேண்டுமோ அந்த இடத்தில் இல்லையே—நான் எப்படிக் குதூகலமாக இருக்க முடியும்?

மகேந்திரன் :—எங்கே இல்லை-இப்பொழுதே சொல், மாட்டச் சொல்கிறேன்.

மோகினி :—தங்கள் மனதில்!

மகேந்திரன் :—மோகினி, என்னை இன்னமுமா புரிந்து கொள்ளவில்லை—என் மனதில் உன் படம் பதிந்து பல ஆண்டுகளாகி விட்டனவே—இனிமேலா புதிதாக மாட்டப்பட வேண்டும்? அட பைத்தியமே!

[மகேந்திரன் மோகினியை ஆர்வத்தோடு அணைக்கிருன்—அவள், அவன் பிடியை விடுவித்துக்கொண்டு செல்லக் கோபத்தோடு பேசுகிருள்.]

மோகினி :—போங்கள் எனக்கு எல்லாம் தெரியும்—என்னிடம் பசப்பு வார்த்தைகள் வீசுவீர்கள்!

மகேந்திரன் :—பசப்பு வார்த்தைகளா?

மோகினி :—பின், என்னிடம் பாசமிருந்திருந்தால் ஏன் அவளிடம் அடிக்கடி செல்கிறீர்கள்?

மகேந்திரன் :—அப்பாடா! நேற்றுதான் மரகதவல்லியின் அரண்மனைக்குப் போனேன்—அதைச் சொல்கிருயா? மூன்று திங்களாக உன் அரண்மனையிலேயே அடைந்து கிடக்கிறேனே—அதை மறந்து விட்டாயா? அவளுக்கு உடல் நலம் கெட்டு வருகிறது. அதனுலே போய்ப் பார்த்து வந்தேன்-வைத்தியரை அனுப்ப ஏற்பாடு செய்துவிட்டு வந்தேன்.

மோகினி :—அவள் உடலுக்கு என்ன வந்துவிட்டது?

மகேந்திரன் :—அவள் இருமுகிறாள் அடிக்கடி—அது தாங்காமல் சமயத்தில் திக்குமுக்காடி விடுகிறாள்.

மோகினி :—கண்ணாளா, காசநோயா யிருக்கும்—அதனால் தான் அங்கு அடிக்கடிப் போகவேண்டா மென்கிறேன்.

## காட்சி 3

**இடம் :** அரசி மரகதவல்லியின் தனி மாளிகை, **காலம் :** மாலை, **இருப்போர் :** அரசி மரகதவல்லி, தோழி தங்கம்.

[மரகதவல்லி, படுக்கையில் கிடக்கிறாள், இருமுகிறாள்; தன் கணவன் மகேந்திரன் மோகினியிடம் மயங்கிக் கிடப்பதை எண்ணியெண்ணி மனநோய் முற்றியே இந்நிலை யுற்றிருக்கிறாள்.]

மரகதவல்லி :—கட்டிய கணவனாயிற்றே—அவர் என்னை உதாசீனப்படுத்துகிறார் என்றால் எப்படியடி தாங்கமுடியும்? மோகினி இப்படி அவர் மனதைப் பறித்துக்கொண்டாளே—எப்படியடி என் மனம் ஆறும்?

தங்கம் :—ஆண்டவன்தான் கண் திறந்து பார்க்கணும்.

மரகதவல்லி :—இது எந்தத் தெய்வத்திற்கும் அடுக்காது—மணந்தவள் நானிருக்க, மணாளர் ஆட வந்தவளோட எப்பொழுதும் கூடிக்கிடப்பதை யார்தான் சகிக்கமுடியும்?

தங்கம் :—எனக்கென்னமோம்மா, ஒரு நம்பிக்கை யிருக்கிறது—நமது ராஜகுரு கோவிந்தானந்தரின் அருள் கிடைத்தால் எப்படியும் மன்னர் மனம் மாறுவார் என்று எண்ணுகிறேன்.

மரகதவல்லி :—அவரால் மட்டும் எப்படியடி முடியும்?

தங்கம் :—பிரிந்துபோன தேவி சீதாபிராட்டியைத் திரும்பித் தேடிக்கொடுத்த அனுமனின் அருள் பெற்றவர்—நம் ராஜ குருவின் சக்தி அபாரமம்மா—அவர் அருள் கிட்டிவிட்டால் நடவாதது ஏது அம்மா?

மரகதவல்லி :—அப்படியானால், நாமும் ராஜகுரு தந்த ஆண்டவன் அனுமனை பூஜை செய்வோம். அனுமன் படம் பெரிதாகத் தீட்ட நாளையே உத்தரவிட வேண்டும்.

தங்கம் :—அப்படியே செய்வோம் தாயே.

## காட்சி 4

**இடம்** :—ஓவியச் சாலை, **காலம்** : மாலை, **இருப்போர்** : ஓவியன் குமணன், முத்துவியாபாரி முருகப்பரின் மகள் குமுதா.

[ஓவியச் சாலையில், ஒரு அழகிய பெண் ஓவியத்திற்கு முன்னால் குமணன் நிற்கிறான். பக்கத்திலிருந்த தீட்டு கோலையும், வர்ணத்தட்டையும் எடுத்துத் தீட்டப்போகிறான்-கலகலவென சிரிக்கிறது ஓவியம்.]

குமணன் :—சிரித்தால் போதாது, என் உயிரோவியமே—பேசவேண்டும்.

[ஓவியம் போலவே நின்று கொண்டிருந்த குமுதா, இறங்கி அவனருகில் வருகிறாள்.]

குமுதா :—ஓவியம் பேசுமோ?

குமணன் :—இந்த ஓவியம் என் இதய ஓவியம்—பேசும்—பேசும்—மிக நன்றாகப் பேசும்.

குமுதா :—ஆகா, அப்படியா?

குமணன் :—மலைநாடு கண்டு மலைக்கிற அளவு பேசும். பேச்சுக் கலைக் கல்லூரிக்கு என் ஓவியமல்லவோ ஆசிரியர்.

குமுதா :—அந்த ஆசிரியருக்குப் பேராசிரியர் யார் தெரியுமோ?

குமணன் :—தெரியவில்லையே!

குமுதா :—தெரியாதா? சொல்லட்டுமா?

குமணன் :—சொன்னால்தானே தெரிந்துகொள்ளமுடியும்.

குமுதா :—அந்தப் பேராசிரியர் இந்த ஊர்தான்.

குமணன் :—இந்த ஊரா—அவர் யாரோ?

குமுதா :—அவர் ஒரு ஊமை.

குமணன் :—ஊமை எப்படிப் பேசக் கற்றுக்கொடுக்க முடியும்?

குமுதா :—வாய்தான் பேசாது—அவர் கரம் பேசும்.

குமணன் :—பேசும் கரம் பெற்றவர் பெயர் யாதோ?

குமுதா :—அவர் பெரிய மாயாவி.

குமணன் :—என்ன குமுதா, பெயரைக் கேட்டால், அவரின் பெருமையைச் சொல்கிறாய்—அவர் மாயாவி யென்றால், வானத்தை விரட்டி, மேகத்தை மிரட்டி, மழையைக் கூட்டி

வருவாரா? அல்லது இடியைப் பிடித்து, மின்னலை அதட்டி, காற்றை மடக்கி, கடும் புயலை ஏவிவிடுவாரா ?

குமுதா :—ராஜகுரு கோவிந்தானந்தர் வாக்குப்படி, மழை வர, பஜனையல்லவா செய்ய வேண்டும்? இந்த மாயாவி புது ரகம் !

குமணன் :—எந்த ரகம்? நேரங்கடத்தாமல் சொல் குமுதா.

குமுதா :—இந்த மாயாவி நினைத்தால் மாளிகை கட்டுவார். ஒரு கணத்தில் குப்பை மேடாக்கிவிடுவார் அதையே !-மன்னனாக்குவார் ஒருவனை - மீண்டும் அவனை மாடோட்டும் சின்னவனாக்குவார்! பூந்தோட்டம் உண்டாக்குவார்-அதை யழித்து புலி வாழும் குகையைக் காட்டுவார்! தாவும் மானை ஓடவிடுவார், பாயும் சிறுத்தையை ஏவிவிடுவார், அவர் எதையும் ஆக்குவார், எதையும் அழிப்பார்!

குமணன் :—அவர் எந்த ஆண்டவனுடைய சக்தியாலே, மாயங்களைச் செய்கிறார் ?

குமுதா :—அதுவா, சொல்லட்டுமா ?

குமணன் :—சொல்லேன், சீக்கிரமாக.

குமுதா :—கருப்பு, சிகப்பு......

குமணன் :—கருப்பு, சிகப்பா...... ?

குமுதா :—பச்சை, நீலம், மஞ்சள், வெள்ளை.

[குமுதா, அருகிலிருந்த வண்ணந் தீட்டும், வண்ணத் தட்டை எடுத்துக் காட்டுகிறாள். குமணன் சிரிக்கிறான்.]

குமணன் :—பூ...சிற்றுளி சிங்காரமும், அமிர்தமும் பெற்ற இந்தச் சாதாரண மாயாவிதானா, உன் பேராசிரியர் ?

குமுதா :—ஆமாம் !

குமணன் :—அப்படியானால், அந்த மாயாவி செய்துள்ள ஜாலவேடிக்கைகளைப் பார்ப்போமா ?

குமுதா :—ஓ......

(குமணன் ஓவியச் சாலையிலுள்ள படங்களையெல்லாம் காட்டிக்கொண்டே வருகிறான். சிவன், விஷ்ணு, முருகன், விநாயகர் இவர்களின் படங்களாகவே காட்சியளிக்கின்றன. இலட்சுமி, சரஸ்வதி போன்ற பெண் தெய்வங்களின் படங்களும் அழகழகாக, விதவிதமாக எழுதப்பட்டுள்ளன. இவைகளை யெல்லாம் குமுதாவிற்குக் குமணன் காட்டிக்

கொண்டே வருகிறான். குமுதா நெடுநேரம் பார்த்தாகி விட்டது என்பதை உணர்த்துவதுபோல உடலை வளைத்து சோம்பல் முறிக்கிறாள்.)

குமணன் :—சிவன் சித்திரத்தைப் பார்த்தாயா? தாண்டவ மாடுங் கோலத்திலேயே எழுதியிருந்தேனே-உனக்குப் பிடித்திருக்க வேண்டுமே!

குமுதா :—ஆண்டவனுடும் தாண்டவமாயிற்றே! அதுவும் இவர் எழுதியதாயிற்றே!

குமணன் :—முருகன் எப்படி?

குமுதா :—வள்ளி, தெய்வயானையர் மிக அழகாக இருக்கின்றனர்.

குமணன் :—குமுதாவின் சாயல் இல்லாத பெண் உருவமே இங்கு இருக்காதே!

குமுதா :—அ...அ...போதும், உங்கள் குறும்புத்தனத்தை ஆரம்பித்துவிடாதீர்கள்!

குமணன் :—அது சரி, கண்ணன் லீலைகளையெல்லாம் எழுதி வைத்திருக்கிறேனே, அதைப்பற்றி யொன்றுமே சொல்லவில்லையே?

குமுதா :—சொல்ல என்ன இருக்கிறது?

குமணன் :—(வீண் வம்பு வளர்க்க வேண்டுமென்ற பாவனையில்) அப்படியானல் ஒன்றுமே நன்ருக இல்லை யென்கிருயா ?

குமுதா:—அப்படி யார் சொன்னது ?

குமணன் :—நீதானே இப்பொழுது கூறினுய். சொல்ல என்ன இருக்கிறது என்று-அப்படியானல் புகழ்ந்துசொல்ல என்ன இருக்கிறது என்று தானே அர்த்தம்?

குமுதா :—(சிரித்துக்கொண்டே) படமெழுகமட்டும்தான் உங்களுக்குத் தெரிகிறது—பாடம் நிறையப் படிக்கவேண்டும்!

குமணன் :—ஏன்?

குமுதா :—நுறை சொல்ல என்ன இருக்கிறது என்று கூறினல் அதை எப்படி மாற்றிவிட்டீர்கள்! இந்த ஓவியங்களைப் பற்றித்தானே நான் தீர்ப்பு சொல்லவேண்டும்?

குமணன் :—ஆமாம்.

குமுதா :—தெய்வலோகத்தை இங்கு நிர்மாணித்து விட்டீர்கள்—கொஞ்ச நேரம் பூலோகம் செல்லலாம் வாருங்கள்

குமணன் :—பூலோகத்தில் முதலில் காட்டிலிருந்து நாட்டிற்குப் போவோமா? இதோ பார், நீர்த்துறையின் ஓரத்தில் ஆண் மான் நின்றுகொண்டிருக்கிறது. பெண் மான் நீர் அருந்துகிறது.

குமுதா :—ஆகா, எவ்வளவு அழகாக இருக்கிறது!

குமணன் :—அழகுமட்டுமல்ல குமுதா—இதில் அர்த்தமும் இருக்கிறது. சொல்லப்போனால், இந்த ஓவியத்திற்குப் பின்னாலே ஒரு காவியமே இருக்கிறது.

குமுதா :—அந்தக் காவியக் கருத்தை எனக்குச் சொல்லக் கூடாதா?

குமணன் :—காட்டிலே ஆண் மானும், பெண் மானும் ஓடியாடுகிறது. பெண் மானுக்குக் களைப்பு வந்துவிடுகிறது—நீர் எங்கு தேடினாலும் கிடைக்கவில்லை.

குமுதா :—பிறகு......

குமணன்: பிறகு, ஏதோ, ஒரு மூலையில் ஒரு சிறு குட்டையில், கொஞ்சம் நீரிருந்தது.

குமுதா: அந்த நீரை இரண்டு மான்களும் குடித்தன.

குமணன்: அதுதானில்லை-பெண் மான் முதலில் ஆண் மானைக் குடிக்கச்சொன்னது—ஆண் மான், பெண்மானைக் குடிக்கச் சொன்னது.

குமுதா: ஏன்?

குமணன்: அதுதான் காதல் ரகசியம்!

[குமுதா முகம் சிவக்கிறது.)

குமுதா :—ஆரம்பமாகிவிட்டதா உங்கள் குறும்பு வேலை!

குமணன் :—குறும்பல்ல, குமுதா; அந்த மானின் கதை முழுவதும் கேட்டால், கரும்பின் சுவை கிடைக்கும்!

குமுதா :—கதையை வளர்த்தாமல், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

குமணன் :—நிரம்ப அவசரமா?

குமுதா:—அப்பா, பனியில் அதிகநேரம் இருந்தால் உடம்புக்கு ஆகாது என்று புறப்படும் பொழுதே சொன்னார். இப்பொழுது தேடிக்கொண்டே வந்தாலும் வந்து விடுவார். சீக்கிரம் மானின் கதையை முடியுங்கள்.

குமணன் :—இருந்த தண்ணீரோ மிகவும் குறைவு-அதுவும் அந்தக் குட்டை சேறு நிரம்பிக் கிடக்கிறது. தெளிந்த நீரை பெண்

மான் குடிக்கட்டுமென்று ஆண் மான் நினைத்தது. ஏனெனில், முதலில் குடிக்கப் போகிறபொழுது கால்பட்டு, நீர்கலங்கிக் கெட்டுவிடும். ஆகவே, முதலில் தான் குடிக்காமல் பெண் மானைக் குடிக்கச் சொன்னது.

குமுதா :—இதிலென்ன காதல் ரகசியம் புதைந்து கிடக்கிற தாம்!

குமணன் :— புதை பொருளாராய்ச்சிக்கு இன்னும் நாளிருக்கிறது.

குமுதா :—அந்நாள் எந்நாளோ ?

குமணன் :—அந்நாள் நம் வாழ்வின் பொன்னுள்—தங்கத் திருநாள்—அன்று உன்னை என் அன்பு மனைவியே என்றழைப் பேன்—என் ஆசை மணாளரே என்று நீ அழைப்பாய். அந்நன்னு ளைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

[வெட்கத்தால் அவள் முகம் மேலும் சிவக்கிறது.]

குமணன் :—வா, மேலும் படங்களைக் காட்டுகிறேன்.

குமுதா ;—இப்பொழுதும் காட்டிலிருக்கிறோமா, நாட்டிற்கு வந்துவிட்டோமா ?

குமணன் :—நாட்டிற்கு—அதுவும் மலைநாட்டிற்கே வந்து விட்டோம். இதோ பார்.

[குரங்கின் படத்தைக் காட்டுகிருன். குமுதா விபரம் தெரியாமல் விழிக்கிருள்.]

குமுதா : இதென்ன நாட்டுக்குள்ளே காடா, குரங்கைக் காட்டுகிறீர்களே !

குமணன் : குரங்கல்ல, குமுதா—நம் குலகுரு போற்றும் மகான் அனுமார்—இவரை மனதில் நினைத்தால் ஆகாத காரிய மெல்லாம் ஆகும்—உண்மை பரவும், ஒழுக்கம் நிலவும். நாமும் இவரைத்தான் வழிபடவேண்டும்.

குமுதா :—நம் அரிய காதல் ஈடேற—இந்த அகோர தேவனையா வழிபடவேண்டும் ?

குமணன் :—அபச்சாரம், அபச்சாரம்-குமுதா, அனுமனை அகோரம் என்று சொல்லாதே! நான் எழுதியிருப்பது வேண்டு மென்றுல் அகோரமாக இருக்கிறதென்று கூறு! அரசகுரு கோவிந்தானந்தர் கொண்டுவந்த புதிய கடவுள் ! ராமதூதர் ! அவரையா அகோரமென்று கூறுவது? பஜனை செய்வோம், தினமும், அனுமனை நாமும்......

## காட்சி 5

இடம் : சாலை, காலம் : காலை, இருப்போர் : மலை நாட்டு மக்கள்.

[ஒரு பஜனைக் கூட்டம் நகர்கிறது—எல்லோரும் அனுமார் துதி பாடுகிறார்கள். எல்லோரும் உடம் பெங்கும் நாமம் தீட்டியிருக்கிறார்கள். அதில் ஒருவன் குரங்கு மாதிரி குல்லாய் அணிந்து குதிக்கிறான். மழையில்லாததால் எங்கும் அனுமார் பஜனை நடக்கிறது.]

பஜனை செய்வோம் நாமே
அனுமனைத் தினமும்—
தாரையை இழந்த தலைவனுக்கு
துணை, கோதண்டபாணியைக் கூட்டி வந்தாய்
சீதையை இழந்த தேவனுக்கு
இன்பச் சேதியைக் கொண்டுவந்தாய்
கடலைத் தாண்டினாய்
இலங்கையைத் தீயிக்கு இரையாக்கினாய்
சஞ்சீவி மூலிகை தேடினாய்
பர்வதத்தையே தூக்கினாய்
ராமர் பாதம் தாங்கினாய்
எங்கள் துயர் நீங்கிட
எங்கும் மழை பெய்திட
செய்திடுவாய், மாருதி மகானே !

[இத்தகைய கருத்துக்களை உள்ளடக்கிய பாடலைப் பாடிய படியே குரங்காட்டம் ஆடிக்கொண்டு பஜனைக் கூட்டம் நகர்கிறது.]

## காட்சி 6

இடம் : குரு கோவிந்தானந்தர் மாளிகை, காலம் : பகல், இருப்போர் : குரு கோவிந்தானந்தர், மந்திரி குலசேகரன்.

கோவிந்தானந்தர் :—(தனிமையில்) மலைநாட்டின் மதகுரு நான்—இந்நாட்டு மக்கள் என் வாக்கே வேதவாக்கு என்று எண்ணிக் கிடக்கிறார்கள்—என் அன்றாட நடவடிக்கைகளே, சாஸ்திரம் விதிக்கும் சமுதாய சம்பிரதாயங்கள் என்று நம்புகிறார்கள்.-

மலைநாட்டு மூலை முடுக்கெல்லாம் ஆலயங்கள்—அங்கு பூஜை மணி ஒலித்துக் கொண்டிருக்கிறது—வேத ஒலி கேட்டபடியிருக்கிறது-தீபாராதனைக் காட்சி நடந்தபடியிருக்கிறது—கோயில்களிலே ஆறுகால பூஜை, தேர், திருவிழா எல்லாம் விமரிசையாக நடைபெறுகின்றன—புரோகித குலத்தவர் எங்கும் விருந்தருந்துகின்றனர். எங்கும் பெருமையோடு வாழ்கின்றனர். மலைநாட்டில் முடிதரித்தவன் மன்னன் மகேந்திரனுனாலும், சடாமுடியர் சந்ததியிலே வந்த என் பிடியில்தான் மக்களிருக்கிறார்கள். மணிமுடி தரித்த சென்னிவளைந்து, செங்கோல் பிடிக்கும் கரம்கூப்பி, என் முன் நிற்கவேண்டும்—அப்பொழுதுதானே அரசகுரு நான்—மகேந்திரன் அப்படியில்லையே—என்னை அவமதிப்பதில்லை—ஆனால் அவன் போக்கிலல்லவா, எல்லாம் நடைபெறுகின்றன......ராஜகுரு நான்—ராஜனோ, குருவின் யோசனையைக் கேட்பதில்லை. ராஜகாரியங்களுக்கோ, குருவின், ஆசிமொழி பெறுவதில்லை—ஆம், இனி மலைநாட்டின் காரியங்கள் எதற்கும் என் ஆசி பெற்றே தீரவேண்டும் என்ற நிலை பிறக்கவேண்டும்.

இதென்ன பிரமாதம்......குரு கோவிந்தானந்தர் நினைத்தால் முடியாதா......மூவேழுலோகங்களுக்குமே, முப்புரியினர் தானே முடிசூடா மன்னர்கள்...மலை நாட்டில் எது முடியாது... பார்க்கிறேன்.

[மந்திரி குலசேகரன் உள்ளே வருகிறான்—குருவைப் பணிகிறான்.[

குலசேகரன் :—குருதேவரே, வணக்கம்.

கோவிந்தானந்தர் :—குருவுக்கு, வணக்கம் மந்திரியார் செய்கிறார்-ஆனால் மன்னர் மதிப்பதில்லை.

குலசேகரன் :—தவறு. குருதேவரே—மன்னர், மதகுருவிடம் மட்டற்ற பக்திகொண்டவர்.

கோவிந்தானந்தர் : பேச்சில்.

குலசேகரன் :—செயலிலும் காட்ட என்றும் சித்தம் சுவாமி.

கோவிந்தானந்தர் :—அப்படியானால், நாட்டு நடவடிக்கைகள் ஒவ்வொன்றிற்கும், அரசரின் அனுமதி ஒப்பமிடுவதுபோல், அரசகுருவின் ஆசி ஒப்பமும் பெறுதல் வேண்டுமென்று ஆக்கச் சொல்லும்-பார்ப்போம்.

குலசேகரன் :—பார்ப்பதென்ன குருதேவரே, நாளை, மலைநாட்டு மக்களின் சட்டமே யாக்கி வைக்கிறேன்—அதன் பிறகு வந்தே தங்களைப் பார்க்கிறேன்.

கோவிந்தானந்தர் :—அவசரமில்லே குலசேகரரே-அமரும—வந்த காரியம் பற்றிப் பேசுவோம்.

குலசேகரன் : இல்லே—குரு மகான் குறை தீர்க்கப்பட்ட பிறகுதான் மறுவேலே—வருகிறேன்.

[குலசேகரன் வெளியேறுகிருன். குருதேவர் வெற்றிப் புன்னகை புரிகிருர்.]

## காட்சி 7

**இடம்**: மன்னன் தனி மாளிகை, **காலம்**: பகல், **இருப்போர்**: மன்னன் மகேந்திரன், மந்திரி குலசேகரன்.

[மகேந்திரன், மண்டபத்தின் நீண்ட தாழ்வாரத்தில் இங்கும் அங்கும் நடந்தபடியிருக்கிருன். குலசேகரன் அவன் கூடவே நடந்தபடி பேசுகிருன்.]

மகேந்திரன் :—இம்மாநிலத்தின் மன்னன் நான்-என் ஒப்பம், எதற்கும் தேவைப்படுகிறது—ஆனுல்......

குலசேகரன் :—அவர் மதகுரு. ஆகவேதான் அவர் ஒப்பமும் பெற்றே எதுவும் நடைபெற வேண்டும் என்று உத்திர விடுங்கள் என்கிறேன்.

மகேந்திரன் :—மன்னனும். குருவும் சமமானவரோ? நானே அரசன்! அவர் ஆண்டி!

குலசேகரன் :—மன்னிக்க வேண்டும். அவர் ஆண்டியானுலும், மக்களே ஆட்டுவிக்கிருரே!

மகேந்திரன் :—என்னிடம் அதிகாரம் இருக்கிறது. குலசேகரா!

குலசேகரன் :—அவரிடம் அற்புதம் இருக்கிறது, அரசே!

மகேந்திரன் :—என் கையில் செங்கோல்!

குலசேகரன் :—அவர் கையில் யோக தண்டு!

மகேந்திரன் :—என்னிடம் ஆட்சிக்குழு!

குலசேகரன் :—அவரிடம் சூழ்ச்சித்திறன்!

மகேந்திரன் :—கோட்டைகள் எனக்கு!

குலசேகரன் :—கோவில்கள், அவருக்கு!

மகேந்திரன் :—சட்டங்கள் நம் பக்கம்!

குலசேகரன் :—வேதங்கள் அவர் பக்கம்!

மகேந்திரன் :—பரிவாரங்கள் பல உண்டு என்னிடம்.

குலசேகரன் :—பக்தர்கள் கோடி கோடி அவருக்கு !

மகேந்திரன் :—குலசேகரரே, என்னைப் பணிபவருக்கு பதவி தருவேன்; எதிர்க்கத் துணிபவருக்கு, சிறைவாசம் தான்.

குலசேகரன் :—அவருக்கும் அத்தகைய வசதியிருக்கிறது.

மகேந்திரன் :—எப்படி ?

குலசேகரன் :—குருவின் தாள் தொழுபவருக்கு இந்திர லோகம், சந்திரலோகம், பிரமலோகம், வைகுந்தம், கைலாசம் இப்படிப் பல லோகங்களில் இடம் உண்டு. அங்கு வைர சிம் மாசனம், வரையாது வழங்கும் காமதேனு, கேட்டதைக் கொடுக்கும் கற்பகத்தரு—நினைத்தால் ஆட ரம்பை, பாடத் திலோத்தமை, சுகந் தர ஊர்வசிகள் உண்டு. குருவின் கோபத் திற்காளாவோர், கொடும் நரகத்தில் தள்ளப்படுவார்கள். அங்கு நெருப்புக்குண்டம் உண்டு—முள் பிப்பாய் இருக்கிறது.

மகேந்திரன் :—ஏன் இந்த வீணான விளக்கவுரை ?

குலசேகரன் :—இவை அத்தனையையும் மக்கள் நம்பு கிறார்களே !

மகேந்திரன் :—அப்படியானால், குருவின் விருப்பத்தை நிறைவேற்றித்தானாக வேண்டுமென்கிறீர் ?

குலசேகரன் :—ஆம், மன்னவா, இனி நாட்டின் நடப்பு களுக்கெல்லாம், நம் குருவின் ஆசியும் பெறவேண்டும். வரி விதிப்பானாலும், நிதியளிப்பானாலும், இழவானாலும், விழவானா லும், சட்டங்கள் செய்வதானாலும், சண்டைகள் தொடங்குவ தானாலும்—சுருக்கமாகச் சொன்னால், நாட்டில் நடைபெறும் எந்நிகழ்ச்சிக்கும் அவரின் ஆசி முத்திரை பொறிக்கப்பட வேண் டும் என்று தாங்கள் ஆணை பிறப்பிக்க வேண்டும்.

மகேந்திரன் :—அப்படியே ஆகட்டும்.

குலசேகரன் :—இனி குருவின் மனங்குளிரும்—மக்களும மகிழ்வர்—மன்னவரே. மலைநாட்டுத் தலைவர் நீங்கள்—மதத் தலைவர் அவர்—இருவரும் இணைந்து விட்டால் எவர் என்ன செய்ய முடியும் ?

மகேந்திரன் :—எவர் என்ன செய்ய முடியும் என்று கூறு கிறீர். ஆனால் மக்கள் தலைவன் என்று ஒருவன் முளைத்து விட் டால் என்ன செய்வீர் ?

குலசேகரன் :—கிள்ளி யெறிந்துவிட மாட்டோமா?

## காட்சி 8

**இடம்:** ஊர்ச் சாவடி. **காலம்:** மாலை. **இருப்போர்:—** பறையறிவிப்போன், மலை நாட்டார்.

(டம டம வென பறையொலி கிளம்புகிறது.)

பறையறிவிப்போன் :—இதனால் மலைநாட்டு மக்களுக்கு அறிவிப்பது யாதெனில் மகான் குரு கோவிந்தானந்தர் ஆசி பெருமல் எந்தவித நடவடிக்கையும் மலை நாட்டில் இடம் பெறக் கூடாது என்பதோடு, அப்படி குருமகான் ஆசி பெருது நடைபெறும் எந்த நடவடிக்கையும் செல்லுபடியாகாதது மட்டு மின்றி, அப்படிச் செய்ய முயல்வோர் ஆறுமாத சிறைவாசம் அனுபவிக்க நேரிடுமென்பதை யறியவும்—இது மலைநாட்டு மன்னர், ராஜகம்பீர, ராஜ பராக்கிரம, மகேந்திர பூபதியின் கட்டளை.

டம, டம, டம......

[கூடியிருந்த மக்கள் சலசலவென பேசியபடி கலைகின்றனர்.]

## காட்சி 9

**இடம்:** அனுமன் ஆலயம். **காலம்:** மாலை. **இருப்போர்:** மகேந்திரன், குலசேகரன், முத்துவியாபாரி முருகப்பர், குமுதா, மற்றும் பலர்.

[அனுமார் ஆலயத்தில் தீபாராதனை நடைபெறுகிறது – எல்லோரும் தீபாராதனை கண்டு வணங்குகின்றனர். ஆனல் குலசேகரனும், மகேந்திரனும் மட்டும் குசுகுசுவெனப் பேசியபடி யிருக்கின்றனர்.]

மகேந்திரன் :—(மெதுவாக) குலசேகரா, எதிரில் இருப் பவள் யாரென்று...

[இருவரும் எதிரில் நின்றுகொண்டிருந்த குமுதாவை உற்றுப் பார்க்கின்றனர். குமுதா இவர்களைப் பார்க்கவே இல்லை.]

குலசேகரன் :—இவளா, முத்து வியாபாரி முருகப்பர் மகள்.

மகேந்திரன் :—(பெருமூச்சு) அப்படியா ?

குலசேகரன் :—மன்னரின் பெருமூச்சு புரிகிறது - குல சேகரன் பக்கத்திலிருக்கும்பொழுது பெருமூச்சுக்கு வேலை

யில்லே-புன்னகையோடிருங்கள். இப்பொழுதே பேச வைக்கிறேன். கவலேவேண்டாம்.

[எல்லோரும் கலேந்து செல்கின்றனர்-மன்னன் நிற்கிருன்-குலசேகரன், முருகப்பரை நோக்குகிருன்.]

குலசேகரன் :—ஓ, முருகப்பரா, (மன்னனிடம்) இவர் முத்து வியாபாரத்திலே முதன்மை வகிக்கும் வணிகர்.

முருகப்பர் :—மாண்பு மிக்க மன்னர் அவர்களே, வணக்கம்.

மகேந்திரன் :— முருகப்பரே, அனுமனுக்கு இன்று முத்து சரக் காணிக்கை செய்தீராமே-கேள்விப்பட்டோம்-மகிழ்ச்சி.

முருகப்பர் :—அனுமன் அனுக்கிரகத்தாலே, கிடைத்ததை அவருக்குக் காணிக்கை யாக்கினேன்-மேலும் என் மகள் திருமணத்தையொட்டிதான் இந்தத் திருப்பணி நடத்தினேன்-(குமுதாவைக் காட்டி) இவள் தான் என் மகள் குமுதா !

குமுதா ;—(தலேவணங்கி) வணக்கம்.

முருகப்பர் :—ஓவியர் குமணனேத் தாங்கள் அறிவீர்கள் - குமணனுக்குத்தான் குமுதாவைத் தருவதாக நிச்சயித்திருக்கிறேன். அனுமன் திருவருளாலே, இன்று மலேநாட்டுத்தலேவரைக் காணும் பேறு பெற்றேன். தங்களின் அனுமதிகோரி மனு செய்ய இருந்தேன். இப்பொழுது நேரிலேயே கேட்கிறேன். தங்கள் அனுமதி கிடைத்து விட்டால், குருமகானின் ஆசி பெற்று விடுவேன்.

குலசேகரன் :—ஆகா, மதத் தலேவர் ஆசி கிடைப்பதற்கு முன் மலேநாட்டின் தலேவரின் வாழ்த்துமொழி கிடைத்து விட்டது என்று பூரிப்படையுங்கள்.

மகேந்திரன் :—குமுதா - குமணன் - வாழ்க்கை மலர்த் தோட்டத்து வண்ணமலர் மொக்குகள்-மணந்து, மணம் பரப்பி, மலேநாட்டிற்கே பெருமை சேர்ப்பார்கள் என்று நம்புகிறேன்-அந் நம்பிக்கையோடு வாழ்த்துகிறேன்.

குலசேகரன் :—ஓவியந் தீட்டும் கலேஞருக்கு நல்ல உயிரோவியம் கிடைத்திடப் போகிறது, கலேஞரைக் காப்பாற்றி மகிழ இருக்கும் கலே ராணி, இன்றே என் மண வாழ்த்துக்கள்.

மகேந்திரன் :—ஓவிய நிபுணர் கையில் ஓர் அழகுக் காவியம் போய்ச் சேர இருக்கிறது-அதனே அவர் என்றும் கண்ணினே இமை காப்பதுபோல காக்க வேண்டும்.

முருகப்பர் :—மன்னருடைய வாழ்த்து மொழிகளும், மந்திரியாரின் ஆதரவு வாழ்த்துக்களும், குமுதா வாழ்வில் இன்ப மழை பொழியச் செய்யட்டும்.

(குமுதா, முருகப்பர் விடைபெற்றுச் செல்கின்றனர்.)

குலசேகரன் :—மழையா பொழிய வேண்டும்? இடி, மின்னல் எல்லாம் கலந்து பெய்யும்–காற்றும் அடிக்கும் - வெள்ளமும் வரும்!

(குலசேகரன் சிரிக்கிறான். மகேந்திரன் அவனைத் தட்டி அழைத்துச் செல்கிறான்.)

## காட்சி 10

**இடம்** : ஓவியச்சாலை, **காலம்** : மாலை, **இருப்போர்** ; குமணன், குமுதா.

(குமணன் படங்களைத் தீட்டி அடுக்கியபடியிருக்கிறான்.)

குமுதா :—நல்ல வேலை உங்களுக்கு-இப்படி அடுக்காகப் படங்களை எழுதித் தள்ளுகிறீர்களே-முன்னர் மோகினிதேவி யின் படத்தைத் தீட்டினீர்கள் ஆயிரக் கணக்கில்-இப்பொழுது எந்த மோகினிப் படத்தை எழுதிக் குவிக்கிறீர்கள்?

குமணன்:—அரசாங்கக் கட்டளையை மீற முடியுமா, குமுதா! அதுவும் மோகினி தேவியின் உத்திரவை எதிர்த்து நடக்க முடியுமா? மகேந்திரன் மலைநாட்டுக்குத்தான் அரசன்—மோகினிதேவியோ அந்த மகேந்திரனுக்கே அரசியாயிற்றே!

குமுதா :—அரசாங்கக் கட்டளைப்படி மோகினி படம், மூலை முடுக்கெல்லாம் மாட்டியாயிற்று—இந்தப் படம் யார் கட்டளைப் படி தீட்டுகிறீர்கள்?

குமணன் :—அது இதைவிட மேலான கட்டளை.

குமுதா :—அரசாங்கக் கட்டளையைவிட மேலான கட்டளை-அதென்ன கட்டளையோ?

குமணன் :—இது தேவஸ்தான கட்டளை.

குமுதா :—ராஜஸ்தானைவிட மேலான தேவஸ்தானம் எது அது?

குமணன் :—அனுமார் தேவஸ்தானம்!

குமுதா :—கோவிந்தானந்தர் படமா? மோகினி தேவி படம் மூலைமுடுக்கெல்லாம்—குரு மகான் படம் கோவில், குளம்,

குட்டை இருக்குமிடமெல்லாம் தொங்கவிட உத்திரவாகி விட்டதா?

குமணன் :—ஆமாம், இது குரு கோவிந்தானந்தர் படம் தான்!

[அனுமாரின் படத்தைக் காட்டுகிருன்]

இத்தகைய படங்கள் ஆயிரம் எழுத உத்திரவு வந்திருக்கிறது—இவைகளை அரண்மனை முழுவதும் வைக்கவேண்டுமாம்.

குமுதா :—அப்படியானல் குருவைக் காணப் போவீர்கள் அல்லவா?

குமணன் :—ஆமாம், போவேன்; எழுதிய படங்களை அவரிடம் சேர்ப்பிக்க!

குமுதா :—அப்பொழுது நானும் உடன் வருவேன்!

குமணன் :—ஏன்—படங்களைச் சுமந்துவரவா? அதற்கு ஆட்கள் நிறைய இருக்கிருர்களே!

குமுதா :—சுமக்கிற வேலை எனக்கில்லை! குருவைப் பார்க்க, பணிய, அவர் ஆசி மொழி கேட்க!

[குமுதாவிற்கு வெட்கம் வந்துவிடுகிறது—குமணனுக்குக் குதூகலம் பிறந்துவிடுகிறது. குமுதாவை ஆசையோடு அணைத்துக்கொண்டு, கொஞ்சு மொழிபேசுகிருன்]

குமணன் :—குருவை நாம் எப்பொழுது பார்ப்பது, ஏன் பணிவது, எதற்காக ஆசிமொழி கேட்பது?

[குமுதா துள்ளியோடுகிருள். குமணன் அவளைத் துரத்திப் பிடிக்கிருன்.]

குமுதா :—அன்று அரசரை ஆலயத்தில் கண்டோமே, எதற்கு? பாவம், குழந்தைக்கு ஒன்றுமே தெரியாது-தொட்டிலில் போட்டு ஆராரோ பாடணும்.

குமணன் :—குழந்தைதான் நான்...

குமுதா :—ஆமாம், பல்லை மட்டும் தட்டிடணும்.

குமணன் :—நீ சொல்லமாட்டாயா?

குமுதா :—நான் சொல்லமாட்டேன்-அப்பாவைக் கேளுங்கள், அவர் சொல்வார்.

குமணன் :—முத்து வியாபாரிக்கு எனக்குப் பதில் சொல்லவா நேரமிருக்கப் போகிறது?

குமுதா :—இதுவும் வியாபாரந்தான்!

குமணன் :—வியாபாரமா? என்ன வியாபாரம்?

குமுதா :—(அவன் காதோரமாக) முத்த......

குமணன்:—முத்தங்களின் வியாபாரமா-அடிகுறும்புக்காரி!

குமுதா :—ஐய, இவர் அப்பாவி.

[குமணன் வேடிக்கையை விடுத்து அன்பொழுகப் பேசுகிருன்.]

குமணன் :—குமுதா, குழந்தைப் பருவம் தொட்டு, நான் கற்பனை வானத்தில், நினைவுக் கற்களால் கட்டிய இன்பக் கனவுக்கோட்டை இன்று அழகொளி வீசிடுகிறது. அன்பே, அக்கோட்டையின் ராணி நீ-அந்த ராணிக்கு குற்றேவல் புரியும் பணியாள் நான்.

[குமுதா அவன் வாயைப் பொத்துகிருள்.]

குமுதா :—இல்லை, இல்லை. இன்பக்கோட்டையின் எழிலரசர் தாங்கள், ஏவல் புரியும் ஏழை அடிமைப் பெண் நான்.

குமணன் .—நம் இன்பக் கோட்டையில் பேதமில்லை, பிளவில்லை, குமுதா-அரசன், அடிமை என்ற வித்தியாசம் ஏது? நாம் இருவருமே அதன் அதிபதிகள்-நான் ராஜா, நீ ராணி.

## காட்சி 11

இடம் : மோகினிதேவியின் தனிமாளிகை, காலம்: மாலை;
இருப்போர் : மோகினிதேவி, அவள் தோழி முல்லை.

[தோழியிடம், மோகினிதேவி, வேடிக்கையாகப்பேசிக் கொண்டிருக்கிருள்.]

மோகினி :—எவ்வளவு அழகான முகம்-அந்த மோகனச் சிரிப்பு கண்டு மயங்காதார் யார் மாநிலத்தில்?

முல்லை :—மலைநாடே மயங்கிவிட்டது!

மோகினி :—பரந்து விரிந்த நெற்றி, நீண்டு உயர்ந்த மூக்கு, நீளமான கண்கள் பரவசத்திலாழ்த்துகின்றன.

முல்லை :—இருக்க வேண்டியபடி எல்லாம் அமைந்து விட்டால், பரவசத்திற்குக் குறைவேது?

மோகினி :—அந்தத் தோள்களிலே சாய்ந்துகிடக்க மாட்டோமா என்ற ஏக்கம், அதைப் பார்க்கப் பார்க்க அதிகரிக்கிறது.

முல்லை :—அந்தப் பாக்கியம் அவ்வளவு எளிதில் கிடைக்கக் கூடியதா ?

மோகினி :—அந்த அகன்ற மார்பில் என் முகத்தைப் புதைத்து, அந்த இன்பத்திலே சொக்கிப்போகும் நாள் எனக்குக் கிடைக்குமா, முல்லை ?

முல்லை :—என்னம்மா, எதிரில் உள்ளது தங்கள் மன்னரின் படந்தானே ?

மோகினி :—ஆமாமடி, ஆனல் நான் ஏங்கித் தவிப்பது இவருக்காக அல்ல—இவர்தான் என் இன்சொல்லுக்காகக் காத்துக்கிடக்கிருரே !

முல்லை :—பின் யாருக்காக இவ்வளவு நேரம் பேசினீர்கள்?

மோகினி :—அதோ பார்.

[அங்கு மோகினிதேவியின் படம்தான் தொங்குகிறது.]

முல்லை :—அது உங்கள் படம்—இப்படம் இல்லாத இடம் இந்த நாட்டிலேயே இல்லையே ! நாடெங்கும் உங்கள் அழகோவியம் தொங்க வேண்டும் என்று உத்திரவிட்டீர்கள்— எங்கும் நிறைந்துவிட்டீர்கள் !

மோகினி :—எங்கும் நான் நிறைந்துவிட்டேன். என் மனதில் அவர் நிறைந்துவிட்டாரே !

முல்லை :—மகேந்திரர் தானே அம்மா ?

மோகினி :—இல்லையடி, இவர் நினைவில், அவர் மறைந்தே விட்டார் !

முல்லை :—அது யாரம்மா, முல்லைக்கும் தெரியாமல், உங்கள் மனதிலே புகுந்து விட்டவர் ?

மோகினி :—அது தானடி இந்தப் படம்......

முல்லை :—இந்தப் படம்......?

மோகினி :—நாடெங்கும் தொங்கிட, தன் திறமை முழுதும் காட்டித் தீட்டித் தந்தவர்.

முல்லை :—படம் எழுதியவரிடமே பாசம் பிறந்துவிட்டதா ?

மோகினி :—அவர் எவ்வளவு அழகாக எழுதுகிருர் தெரியுமா ?

முல்லை :—ஆமாம்மா, அவர் எழுதும் அலங்கோலப் படங்கள்கூட அலங்காரமாகத் தானிருக்கும்.

மோகினி :—போடி, கேலி பேசுகிருய் !

முல்லை :—வேறு என்னம்மா என்னைச் செய்யச் சொல் கிறீர்கள் ?

மோகினி:—அந்த ஓவியரை எப்படியும் நான் சந்திக்க வேண்டும்.

முல்லை :—சொல்லி யனுப்பினுல் ஓடோடி வருகிருர்.

மோகினி :—ஒரு முறை வருவார்.

முல்லை :—பின்.........?

மோகினி :—ஒரு முறை இல்லையடி, ஓராயிரம் முறைகள் வரவேண்டும். நான் அவருடன் ஒய்யாரமாகப் பேசி, உல்லாச மாக இருக்க வேண்டும். முடியுமா, முல்லை ?

முல்லை :—ஐயோ ! அவ்வளவுக்கு முற்றிவிட்டதா ?

மோகினி :—போடி, முற்றவுமில்லை, வெடிக்கவுமில்லை, கனிந்துவிட்டது என்று சொல்.

முல்லை :—கனிந்துவிட்டதா, அதென்னம்மா......?

மோகினி :—காதலடி அது.

முல்லை :—அப்படியானுல் கட்டளையிடுங்கள்—ஒரு முறை வந்தவர், திரும்பியே போகமாட்டார். ஒய்வு ஒழிவின்றி உங்களிடமே சிரிக்கப் பேசி, சிங்கார வேடிக்கைகள் பல ஆடி, அந்த இன்பத்திலேயே மூழ்கிடுவார்.

மோகினி :—கட்டளையால் நடப்பதில்லையடி இது—அன் பாலே கட்டியிழுத்து வரவேண்டும்-அதற்கு வழி வேண்டும்.

முல்லை :—பழியில்லாத வழி சொல்லட்டுமா ?

மோகினி :—சொல்லடி.

(முல்லை உள்ளே ஓடுகிருள். கடிதம் எழுதக் கடிதமும், மைக்கூடும், எழுதுகோலும் கொண்டுவந்து தருகிருள்.)

## காட்சி 12

**இடம் :** மன்னன் மாளிகை. **காலம் :** பகல். **இருப்போர் :** மகேந்திரன், மந்திரி குலசேகரன்.

மகேந்திரன் :—மன்னனின் மனதைக் கவர்ந்து சென்று விட்டாள் அந்த முல்லைக் கொடி-ஆனுல், அவள் மனதிலே, படமெழுதியல்லவா, இடம் பிடித்து விட்டான் !

குலசேகரன் :—அந்த இடத்தைக் காலி செய்து, அங்கு உங்களைக் குடியேற்ற வேண்டியது, குலசேகரன் பொறுப்பு.

மகேந்திரன் :—குமுதா இல்லையென்றால், என் வாழ்வில் குதூகலமே கிடையாது, குலசேகரா !

குலசேகரன் :—குமுதா, உங்களின் அமுதாவாள் — உறுதி.

மகேந்திரன் :—எப்படி முடியும்...?

குலசேகரன் :—குலசேகரன் ஏற்பாட்டை, தேவரேயாயினும், அந்த மூவரேயாயினும் கெடுக்க முடியாது.

மகேந்திரன் :—குமுதாவை நான் அடைய என்ன ஏற்பாடு செய்யப் போகிறீர் ?

குலசேகரன் :—பக்குவமான ஏற்பாடு செய்கிறேன். பயப்பட வேண்டாம்.

மகேந்திரன்;—பரவசமடைகிறேன், குலசேகரா-ஏற்பாடு...

குலசேகரன் :—ஏற்பாட்டைப் பற்றிய ஏக்கமோ, ஊக்கமோ உங்களுக்குத் தேவையில்லை.

மகேந்திரன் :—நீர் பேசுவதொன்றும் எனக்குப் புரியவில்லையே !

குலசேகரன் :—புரியாதுதான் இப்போது—பொறுத்திருந்தால் தெரிகிறது.

## காட்சி 13

**இடம் :** ஓவியச்சாலை. **காலம் :** பகல். **இருப்போர் :** குமுதா, ஓவியன் குமணன், சேவகன்.

[அரசாங்க சேவகன் வருகிறான், ஒரு கடிதத்தை குமணனிடம் தந்து நிற்கிறான்.]

சேவகன் :—இளைய ராணி மோகினி தேவியின் கட்டளைக் கடிதம் இது !

குமணன் :—சரி, நீ போகலாம்.

(குமுதா, அதைப் பிரித்துப் படிக்கிறாள். அதுவும், மகாராணி போல நடை நடந்து கம்பீரக் குரலில் பேசுகிறாள்.)

கடிதம் இது :—

மலைநாட்டு மன்னவர் மகேந்திர பூபதியின் ஆசைக்கும், அன்பிற்கும் உரிய இளைய ராணி

மோகினிதேவியால், ஓவியர் குமணனுக்கு, இடும் கட்டளையாவது: ஓவியக்கலை சம்பந்தமான உயரிய ஆராய்ச்சி ஒன்று நடத்த ராணி மகாதேவி முடிவு செய்திருப்பதால், இன்று மாலை அந்தப்புர விருந்தினர் வரவேற்புக் கூடத்திற்கு, ஓவியக்கலை சம்பந்தமான நுணுக்கக் குறிப்பேடுகளுடன் வந்து காத்திருக்க வேண்டியது.

—(ஒப்பம்) மோகினிதேவி.

குமுதா:—(கிண்டலாக) மாலை நேரம், மந்தமாருதக் காற்றில், மகாராணியாரோடு, ஆராய்ச்சி.

குமணன் :—குமுதா, கேலி பேசாதே—எனக்கு ஓவியக் கலையை வளர்க்கவேண்டும் என்பதிலே எவ்வளவு ஆர்வமிருக்கிறது என்பது உனக்குத் தெரியாதா, என்ன? அரசாங்க உதவி கிடைத்துவிட்டால், மலைநாட்டையே ஓர் அழகோவியமாக மாற்றிக் காட்ட மாட்டேனா?

குமுதா :—மோகினிதேவியின் அழைப்புக்கூட அல்ல—கட்டளை-மீற முடியுமா, உங்களால்?

குமணன் :—மீறுவதா, நாமே இத்தகைய உதவியைக் கேட்டுப் பெறவேண்டும்—அவர்களாக அழைக்கிறபொழுது போகாமலிருப்பதா?

குமுதா :—ஆராய்ச்சி அளவோடு இருக்கட்டும்.

குமணன் :—பைத்தியம்—எதை யாரிடம் பேசுகிறோம் என்றுகூடத் தெரியவில்லை. குமணனைக் கோமாளியென்று எண்ணிக்கொண்டா கேலியும் கிண்டலும் செய்கிறாய்?

குமுதா :—மோகினிதேவியாரின் அரண்மனை சென்றால் அங்கு மோகன கீதம் ஒலிக்கும். அதிலேயே சொக்கிப்போய் விடாதீர்கள்—சீக்கிரம் திரும்பி வாருங்கள்.

குமணன் :—மோகன கீதமா-குமுதா, அங்கே முல்லையென்ற அழுமூஞ்சிதான் இருக்கிறாள், தோழியாக. அவளின் தொல்லைதான் இருக்கும்.

குமுதா :—சரி, சரி, நான் வருகிறேன்.

## காட்சி 14

**இடம் :** மோகினிதேவியின் தனி மாளிகை. **காலம் :** மாலே. **இருப்போர் :** மோகினிதேவி, ஓவியன் குமணன்.

[மோகினி, தங்கத்தவிசில் அமர்ந்திருக்கிருள்-குமணன் உள்ளே வருகிருன்.]

மோகினி :—வருக, வருக, மலேநாட்டு மக்களின் மனங் கவர்ந்த ஒப்பற்ற ஓவியக் கலேஞரே, வருக.

குமணன் :—தகுதிக்கு மீறிய புகழுரை!

மோகினி :—தங்கள் தகுதியறிந்து, இந்நாட்டின் அரசி தந்துள்ள வரவேற்புரை.

குமணன் :—தங்கள் வரவேற்புரைக்கு நன்றி—தேவியாரே, என்னே வரும்படிக் கட்டளேப் பிறப்பித்ததின் காரணம் யாதோ ?

மோகினி :—காரணம் கலேயாராய்ச்சிதான்.

குமணன் :—மெத்த மகிழ்ச்சி-செத்த கலேகள் தேவியாரின் திருவருளால் இனியாவது புத்துயிர் பெறட்டும்.

மோகினி :—செத்த கலேகள்—கலேகள் சாகாவரம்பெற்றன என்றல்லவா நான் நினேக்கிறேன் ?

குமணன் :—வாழ்வாங்கு வாழ்வதையே நான் வாழ்வாகக் கொள்பவன்—உயிருடன் உலவுவதையே நான் வாழ்வாகக் கருதுவதில்லே. அவனேச் செத்தவனுகவே எண்ணுகிறேன். அதுபோலத்தான் கலேகள், தங்கள் நிலேயில் இல்லாமையால் செத்த கலேகள் என்கிறேன்.

மோகினி :—அப்பொழுது கலேகளேப் பற்றி தங்கள் கருத்தென்ன ?

குமணன் :—இந்நாட்டுக் கலேகள் எல்லாம் நிலேகுலேந்திருக் கின்றன என்பதே என் கருத்து.

மோகினி :—கலேகளின் நிலேகளேயெல்லாம் கண்டறிந்தவர் போலவே பேசுகிறீர்.

குமணன் :—ஓரளவு தெரியும்.

மோகினி :—பேச்சுக் கலே—?

குமணன் :—கேட்பவரை பித்தருமாக்கும்—பெரும் வித்த கருமாக்கும்!

மோகினி :—இசைக் கலை?

குமணன் :—இதயத்தை இளகச் செய்யும்.

குமுதா :—நாட்டியக் கலை...?

குமணன் :—இளகிய நெஞ்சிலே எண்ண விதைகளைத் தூவும்!

மோகினி :—அவ்வளவுதானா?

குமணன் :—ஓ, தாங்கள் நாட்டிய ராணியென்பதை மறந்தேன்-மன்னிக்கவும். தூவிய விதைகள் முளைத்து, நல்ல அறிவு அறுவடை கிடைக்கும்!

மோகினி :—ஓவியக் கலை?

குமணன் :—அதுதான் என் உயிர்நிலை! மனதிலே நர்த்தனமாடும் எண்ணங்களுக்கு உயிர் கொடுக்கும். நினைவுகள் பேசும்—கனவுகள் பாடும்—கற்பனைகள் களிநடம் புரியும், ஓவியக்கலை மூலம்.

மோகினி :—ஓ, நீங்கள் ஓவியர் என்றவுடன் அதுபற்றி அதிகம் புகழ்கிறீர்கள்.

குமணன் :— இல்லை தேவி,—மொழிமூலம் ஊட்டும் உணர்ச்சிகளை விழிமூலம் ஊட்டுகிறது ஓவியக்கலை. மொழியறிவற்றோர் இந்நாட்டில் ஏராளம் - ஆனால் அவர்கள் விழி பெற்றிருக்கிறார்கள். அவர்களெல்லாம் ஓவியக் கலையால் உணர்வு பெறலாம்.

மோகினி :—செவிடர் தவிர, இசையால் இன்பம் பெறாதவர் எவர்?

குமணன் :—கலைகளைக் கலகம் மூட்டிவிடச் சொல்லவில்லை தேவி, கலைகளெல்லாம் கைகோர்த்து நடை பழகச் சொல்கிறேன். ஓவியம் ஒன்று தீட்டி, அதன்கீழ் அந்த ஓவியங் காட்டும் ஒப்பற்ற கருத்தையும் எழுதி, அதனை ஒரு எழில் மாது தனது குயில் குரலால் பாடி, மயில் நடையோடு ஆடினால் இன்பம் எப்படிப் பெருகும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

மோகினி :-உங்களை ஓவியர் என்று மட்டும் எண்ணினேன், தாங்கள் காவியம் பல கற்ற கலாவாணர் என்று இன்று புரிந்து கொண்டேன்.

குமணன் :—காலம் அதிகமாகிறது, கலையரசி!

மோகினி :—புதிய பட்டமே அளித்து விட்டீர்கள்-மோகினி தேவி, கலையரசியாகும் நாளைத்தான் நானும் எதிர்பார்க்கிறேன்.

குமணன் :—சீக்கிரம் வரும்.

மோகினி :—அதற்கு நீங்கள்தான் துணை செய்ய வேண்டும்.

குமணன் ,—ஆகட்டும் அரசியாரே, வருகிறேன்-வணக்கம்-

மோகினி :—கலைஞரே, தங்களின் கருத்துமிக்க ஆராய்ச்சி யுரைகளுக்கு நன்றி-இனி அடிக்கடி வாருங்கள்—கலையாராய்ச்சி தொடர்ந்து நடத்துவோம். முடிவில் ஒரு வழி காண்போம்.

## காட்சி 15

**இடம்** : அரசி மரகதவல்லியின் அந்தப்புரம், **காலம்** : காலை, **இருப்போர்** : மரகதவல்லி, தோழி தங்கம்.

[மரகதவல்லி தாங்கமுடியாத ஜுரத்தால் வாதைப் படுகிருள்-ஜன்னி வேறு வந்து விடுகிறது-கண்டபடி பேசு கிருள்-சம்பந்த மில்லாமல் உரை வழங்கியபடியிருக்கிருள்-தங்கம் விழிக்கிருள்.]

மரகதவல்லி :—தங்கம், உனக்கு யாரடி பெயர் வைத்தது?

தங்கம் ;—என்னைப் பெற்றவர்கள் !

மரகதவல்லி :—நீ உண்மையில் தேடக்கிடைக்காத தங்கம் தான் !

தங்கம் :—போங்கம்மா, அவர் வரல்லே என்கிற நினை விலே இப்படியெல்லாம் பேசுறீங்க. அவர் வந்து விட்டால்...

மரகதவல்லி :—கூத்தாடுவேன். குருமகான் காலில்விழுந்து தொழுவேன். அனுமனுக்கு ஆறுகால பூஜை நடத்துவேன்.

தங்கம் :—வைரம் கிடைத்து விட்டால், தங்கத்தைத் திரும் பிப் பார்ப்பவர் யார்?

மரகதவல்லி :—போடி, காலம் வரும்போது அவர் மனம் மாறி வருவார் என்றுரே குரு—அந்தக் காலம் எந்தக் காலம்?

தங்கம் :—அதுதான் நமக்கு வர இருக்கும் பொற்காலம் !

மரகதவல்லி :—அந்த நாளில் என் அழகு மணுளருக்கு நானே பட்டாடை சாத்துவேன்.

தங்கம் :—பரிமள கந்தங்களை எடுத்தோடி வருவேன்.

மரகதவல்லி :—அவைகளை அள்ளி அள்ளிப் பூசுவேன்.

தங்கம் :—பன்னீர் கொண்டு நிற்பேன்.

மரகதவல்லி :—பரிவோடு நான் அதைத் தெளிப்பேன்.

தங்கம் :—பழத்தட்டைத் தாங்கிடுவேன்.

மரகதவல்லி :—பழம், பால் நானே ஊட்டுவேன்.

தங்கம் :—தூரத்திலே நான் நின்று பார்ப்பேன்—பாங்கியர் சிலரைப் பாடச் சொல்வேன்—பாட்டிற்கேற்ப சிலரை ஆடச் சொல்வேன்.

மரகதவல்லி :—அவர் கண்ணே என்றழைப்பார்—நான் காதலா என்று ஆரத்தழுவுவேன்.

[மரகதவல்லி, பக்கத்திலிருந்த தங்கத்தைத் தழுவுகிருள்.]

தங்கம் :—ஐயோ, இதென்ன, நான் தங்கம்......

மரகதவல்லி : தெரியும், தெரியும், என்னை ஏமாற்றப் பார்க்கிறீர்களே—காதலா......

தங்கம் :—காதலா......கண்ருவியா......ஐயோ !......

மரகதவல்லி :—(ஆரத்தழுவியபடி) விடமாட்டேன் !

தங்கம் :—(விழித்தபடி) இதோ, அழைத்து வருகிறேன்.

மரகதவல்லி :—யாரை நாதா ?

தங்கம் :—வைத்தியரை, ராணி !

மரகதவல்லி :—ஏன்...... ?

தங்கம் :—ஐ......ன்......னி...... !

## காட்சி 16.

**இடம் :** முத்து வியாபாரி முருகப்பர் இல்லம், **காலம் :** மாலை, **இருப்போர் :** முருகப்பர், குமுதா.

குமுதா :—அப்பா, அரசகுருவைப் பார்க்க வேண்டுமென்று சொன்னீர்களே, காலையில் ?

முருகப்பர் :—எவ்வளவு அவசரம் பார் !

[குமுதா முகம் சிவக்கிறது]

குமுதா :—நீங்கள் தானே சொன்னீர்கள்.

முருகப்பர் :—போகிறேன் அம்மா, இப்பொழுதே போய்ப் பார்த்து வருகிறேன். மன்னனைச் சந்தித்தது, தம்பிக்குத் தெரியுமா அம்மா ?

குமுதா :—அன்றைய மறுநாளே தெரியுமே.

முருகப்பர் :—என்ன சொன்னுன் ?

குமுதா :—பூரித்துப் போனுரப்பா.

[முருகப்பர் பெருமிதத்தோடு மகளைப் பார்க்கிருர்.]

முருகப்பர் :—தந்தை மகளுக்காற்ற வேண்டியதைச் செய்து விடப்போகிறேன். உன் மனதிற்கிசைந்தவனிடமே உன்னை ஒப்படைக்கப் போகிறேன் ; இனி எதிர்காலம் உங்கள் கையில். உன் கரம்பிடிப்பவனே, ஓவியந் தீட்டும் கோல் பிடிப்பவன். திரையில் தினம் தினம் பூநதோட்டம் தீட்டிடுவான். அதுபோல் உங்கள் வாழ்க்கையையும் பூந்தோட்ட மாக்கவேண்டும்.

குமுதா :—அப்பா உங்கள் வாழ்த்துகள் அதற்கு வழி வகுக்கும்

முருகப்பர் :—சரியம்மா, நான் போய் அரசகுருவைப் பார்த்து வருகிறேன்.

[குமுதா துள்ளியோடுகிருள். அப்பாவுக்கு துப்பட்டி போர்த்துகிருள். கைத்தடியை எடுத்துத் தருகிருள். தந்தை வெளியில் செல்வதைக் களிப்போடு பார்த்தபடி நிற்கிருள்.]

## காட்சி 17

**இடம்** :—குரு கோவிந்தானந்தரின் தனி மாளிகை, **காலம்** : மாலை, **இருப்போர்** : குரு கோவிந்தானந்தர், மந்திரி குலசேகரன், முருகப்பர்.

[குரு கோவிந்தானந்தர் ஏடுகளைப் புரட்டியபடி அமர்ந்திருக்கிருர். குலசேகரன் மெதுவாக உள்ளே வருகிருன்.]

குலசேகரன் :—மன்னிக்கவேண்டும், குருமகானே, தங்களின் அரிய சிந்தனையைக் கலைக்க வேண்டியவனுயிருக்கிறேன்.

கோவிந்தானந்தர் :—பீடிகை வேண்டாம், குலசேகரா, எதையும், என்னிடம் தாராளமாகச் சொல்லலாம்.

குலசேகரன் :—ஒரு முக்கிய விஷயமாய்......

கோவிந்தானந்தர் :—எதுவாயினும் கூறு—குருமகான் என்றுமே குலசேகரர் விருப்பத்தை நிறைவேற்றத் தவறியதில்லை.

குலசேகரன் :—மலைநாட்டுப் பேரழகிகளிலே இன்று முதன்மை வகிப்பவள் குமுதா என்ற பூங்கொடி.

கோவிந்தானந்தர் :—ஆம், அறிவேன்—முத்து வியாபாரி மகள் குமுதாதானே ?

குலசேகரன் :—அவள் மீது, மன்னர் மனம்......

கோவிந்தானந்தர் :—அதற்கு நான் செய்யவேண்டியது—

[குலசேகரன் குருவின் காதோரமாக ஏதோ கூறு கிருன்.]

இவ்வளவுதானே—தாராளமாகச் செய்கிறேன். கவலை வேண்டாம். மன்னன் என் மனதறிந்து நடந்துகொண்டான் முன்னர். நான் அவன் மனதறிந்து நடந்துகொள்கிறேன் இப்போது.

குலசேகரன் :—மட்டற்ற மகிழ்ச்சி—மனமார்ந்த நன்றி—குருதேவரே—விடைபெற்றுக் கொள்கிறேன்.

[குலசேகரன் வெளியேறுகிருன். குருதேவர் மீண்டும் ஏடுகளில் மனதைப் பதியவைத்தவராய் அமர்ந்திருக்கிருர். அப்பொழுது முத்துவியாபாரி முருகப்பர் எதிரில் வந்து நிற்கிருர்.]

முருகப்பர் :—வணக்கம், குருதேவா!

கோவிந்தானந்தர் :—முருகப்பரா, வாரும், வாரும்.

முருகப்பர் :—தங்களிடம் மிக முக்கியமான......

கோவிந்தானந்தர் :—சொல்லும், கேட்போம்.

முருகப்பர் :—என் மகள் குமுதாவை அறிவீர்களல்லவா?

கோவிந்தானந்தர் :—அவள் பாவாடைக்காரியாக இருந்த பொழுது பார்த்ததாக ஞாபகம்-இப்பொழுது சேலைக்காரியாகி யிருப்பாள்...

முருகப்பர் :—ஆம், சுவாமி. அவளுக்குத் திருமணம் செய்ய நிச்சயித்திருக்கிறேன், மணமகன் ஓவியர் குமணன்.

கோவிந்தானந்தர் :—ஓவிய நிபுணர் குமணனு-பொருத்த மான ஜோடி-திவ்யமாகத் திருமணம் நடத்துவோம். ராமனும், சீதையும் போல எண்ணி ஆண்டவன் அனுமன் தன் அருள் பாலிப்பார்.

முருகப்பர் :—இத் திருமணத்திற்கு, மன்னர் அனுமதி முன்னரே கிடைத்துவிட்டது. இதற்குத் தாங்கள் ஆசி மொழி வழங்க வேண்டும்.

கோவிந்தானந்தர் : (விகாரமாகச் சிரித்தபடி) ஆசிமொழி... ஆசி......மொழி......ஹிஹிஹி...பெயர் குமுதா...குமணன்.

(குரு பல ஏடுகளைப் புரட்டுகிருர்-அவர் பார்வை பயங் கரமாகவும், விகாரமாகவும் மாறுகிறது.]

கோவிந்தானந்தர் :—குமுதா—குமணன்—இந்த இன்ப ஜோடியைக் கண்டவர் கண்திருஷ்டியால்தான் கருக்குவர்.

(குரு மேலும் ஏடுகளைப் புரட்டுகிருர்.)

கோவிந்தானந்தர் :—இத் திருமணம் நடந்துவிட்டால், மலைநாடே கண்டு மகிழும். பேரழகி என உன் மகள் பிரசித்திப்பெற்றிருக்கிருள்-ஓவியக் கலையில் வல்லவன் என்று அவனே பெயர் பெற்றிருக்கிருன். இருவரும் மணந்தனர் என்ருல் மலைநாடு மகிழாமல் என்ன செய்யும்.

(குரு மேலும் ஏடுகளைப் புரட்டுகிருர்-அவசரஅவசரமாகப் புரட்டுகிருர். திடுக்கிட்டுத் திரும்புகிருர்.)

கோவிந்தானந்தர் :—அடடா, ஏடுகள் நம் எண்ணத்திற்கு மாருகவல்லவா பேசுகின்றன.

முருகப்பர் :—என்ன......

கோவிந்தானந்தர் :—தோஷமிருக்கிறது-இவர்கள் மணந்து கொண்டால்...

முருகப்பர் :—தோஷமா? ஏன்—எப்படி — எதற்காக — தோஷம் வந்துவிட்டது?

கோவிந்தானந்தர் :—அவசரப்படாதீர்! தோஷமிருப்பது போலவே, அதற்குப் பரிகாரமுமிருக்கிறது.

முருகப்பர் :—அப்பாடா, பரிகாரத்தை விவரியுங்கள்.

கோவிந்தானந்தர் :—இன்னும் ஒரு மாதகாலம் இவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கக் கூடாது. அந்த ஒரு மாதகாலமும், உம் மகள் குமுதா, அந்தி வந்தவுடன் அனுமன் ஆலயத்திற்குச் செல்லவேண்டும். அங்கு நூற்றியொரு வாழைப் பழங்களை ஒவ்வொன்ருக அனுமனுக்குப் படைத்து, நூற்றியொரு முறை வலம்வர வேண்டும்-அப்படிச் செய்தால் தோஷம் தீரும்—சந்தோஷத்தோடு மணந்து வாழலாம்.

முருகப்பர் :—தோஷம் வந்து எங்கே இருவரையும் துண்டித்துவிடுகிறதோ என்று அஞ்சினேன். அனுமனின் அனுக்கிரகம் அவர்களுக்கிருக்கிறது! சுவாமி, நாளைக்கே, பரிகாரம் செய்ய ஏற்பாடு செய்கிறேன்.

## காட்சி 18

**இடம்** : சாலை. **காலம்** : மாலை. **இருப்போர்** : முல்லை. தங்கம்.

முல்லை :—என்னடி தங்கம், இவ்வளவு அவசரமாக?

தங்கம் :—வைத்தியரை நாடித்தான்.

முல்லை :—ஏண்டி, அம்மாவுக்கு எப்படியடியிருக்கு?

தங்கம் :—எப்படி யிருக்கு-ஜன்னியிலே கொண்டு வந்து நிறுத்தியிருக்கு-அந்தக் கதையைக் கேட்காதே. எப்பொழுதும் அந்த அம்மாவுக்கு அரசரின் நினைவு-அவர் வருவதில்லையே என்ற ஏக்கம்-ஜன்னி கண்டவுடனே, என்னையே ராஜான்னு நினைச்சு-கட்டிப் பிடித்து, கண்ணாளா, காதலா என்று பேசறுங்க. அந்தக் கண்ருவியைக் காணச் சகிக்காமல் ஓடி வந்து விட்டேன்.

முல்லை :—அப்படியா?

தங்கம் :—எல்லாம், உங்க எஜமானியம்மாவாலேதான்—அரண்மனையிலே அவங்க காலடி வைச்ச அன்றையிலிருந்து, மரகதவல்லியம்மா மாளிகையிலே அழுகுரல்தான்.

முல்லை :—பெரிய பேச்சுப் பேசாதே—ஆமாம், எனக்குக் கோபம் வந்துவிடும்.

தங்கம் :—அம்மாடி, உன் வாயைத் திறந்திடாதே-தெரியாம சொல்லிட்டேன்.

(தங்கம் அவசரமாகப் போய்விடுகிருள்.)

## காட்சி 19

**இடம்**: மோகினி தேவியின் மாளிகை. **காலம்**: இரவு. **இருப்போர்**: மோகினிதேவி, முல்லை, மகேந்திரன்.

முல்லை :—அம்மா. அம்மா, மரகதவல்லியம்மாவுக்கு ஜன்னியாம்-போகிறவர்களை வருகிறவர்களை யெல்லாம் கட்டிக் கட்டி யழுகிருங்களாம். மன்னர் வராத ஏக்கம்தான் இப்படி யாயிட்டுதாம்.

மோகினி :—வருபவர், போகுபவரை யெல்லாம் கட்டிக் கொள்கிருளா? செய்யட்டும்-அப்படியாவது சனியன், மன்னர் நினைவு மறந்து தொலையட்டும்!

முல்லை :—(மெதுவாக) அந்த அம்மாவைத் திட்டுறீங்க இப்போது-ஆனால் அதே கதி உங்களுக்கும் வந்துவிடும் போலிருக்கு.

மோகினி :—என்னடி, புதிர் போடுகிறாய்—புரியும்படி சொல்லடி.

முல்லை :—மன்னரும், மந்திரியாரும் ஏதோ புதிய மானுக்கு வலை போடுகிறுங்க போலிருக்கு.

மோகினி :—யாரடி சொன்னது ?

முல்லை :—மன்னர் மாளிகை காவலாளி மல்லன்தான் சொன்னான்.

மோகினி :—மான் யாரடி ?

முல்லை :—அதாம்மா, உங்க ஓவியருக்குக் கட்டுவதாகச் சொல்லும் குமுதா !

மோகினி :—ஓகோ, அப்படியா ?

(அப்பொழுது மன்னன் மகேந்திரன் வரும் காலடியோசை கேட்கிறது.)

மோகினி :—வாருங்கள் பிரபோ. உங்கள் தரிசனமே, இந்த ஏழைக்கு இப்பொழுது கிடைப்பதே இல்லை.

மகேந்திரன் :—மோகினியின் குறும்பு அவளைவிட்டு எப்பொழுதும் போகவே போகாதுபோலும் !

மோகினி ;—குறும்பா பேசுகிறேன்—நீங்களே கூறுங்கள்—இங்கு வந்து எத்தனை நாட்களாகிவிட்டன ?

மகேந்திரன் :—மரகதவல்லிக்கு உடல்நிலை கெட்டிருக்கிறது என்பது உனக்குத் தெரிந்ததுதானே !

மோகினி :—அங்கே போனேன் என்று கூறினால் நான் நம்பிவிடுவேன் என்கிறீர்களா ? அங்கேயும் போகவில்லை யென்று எனக்கு நன்ருகத் தெரியும்.

மகேந்திரன்:—பலே கெட்டிக்காரி—இதற்கெல்லாம் உளவாளி அந்த முல்லை—அப்பா, அவள் தொல்லைதான் பெரிதாகிவிடுகிறது.

மோகினி :—பின் எங்கே சென்றிருந்தீர்கள் ?

மகேந்திரன் :—கண்மணி, அரச பதவி யென்றால் சாதாரணமானதா—தொல்லைகள் பல தினம் சூழ்ந்துகொள்கின்றன. அதனால் வரமுடியவில்லை.

மோகினி :—மரகதவல்லியாருக்கு இருமல் போய், மயக்கம் வந்து இப்பொழுது ஜன்னி வந்திருக்கிறதாம்.

மகேந்திரன் :—ஆமாம், அவளைப்பற்றி வைத்தியன் ஒன்று சொல்கிறான், சோதிடன் ஒன்று கூறுகிறான், மாந்திரீகன் ஒன்று சொல்கிறான், பூசாரி வேறொன்று கூறுகிறான்.

மோகினி.—ஆனால், நானோ, இவர்கள் சொல்லியதையெல்லாம்விட பயங்கரமாகச் சொல்கிறேன். அவளுக்கு ஜன்னியில்லை—அப்படி ஜாலம் செய்கிறாள் !

மகேந்திரன் :—அதனால் அவளுக்கு என்ன லாபம் ?

மோகினி :—அது அந்த அனுமாருக்குத்தான் வெளிச்சம்—என்றாவது ஒருநாள் நானே அதனை உங்களுக்குத் தெளிவாக்கி வைக்கிறேன்.

மகேந்திரன் :—சரி மோகினி, போகிறேன்.

மோகினி :—அதற்குள்ளாகவா, பிரபோ.

மகேந்திரன் :—ஆம், அன்பே, அரசாங்க அலுவல்கள் அதிகம்—மந்திரி குலசேகரரை, தனி மாளிகைக்கு வரச்சொல்லியிருக்கிறேன்.

மோகினி :—இருவரும் சேர்ந்து எந்தக் கோட்டைக்கு முற்றுகை போடத் திட்ட மிடுகிறீர்களோ?

மகேந்திரன் :—குறும்புக்காரி !

## காட்சி 20

இடம் : குமணன் ஓவியச் சாலை. காலம் : மாலை, இருப்போர் : முருகப்பர், குமணன்.

[குமணன் அழகிய பெண்ணுருவம் ஒன்றைத் திட்டிக் கொண்டிருக்கிறான். அது குமுதாவின் படமாகும். முருகப்பர் வருகிறார்.]

குமணன் :—வாங்க, மாமா.

முருகப்பர் :—தம்பி, குமுதா சொன்னாளா ?

குமணன் :—நீங்கள் குலகுருவிடம் நேற்றுப் போவதாக மட்டுமே சொன்னாள்.

முருகப்பர் :—போனேன்—போய் அனலில் பட்ட புழுவாகவே திரும்பி வந்தேன்.

குமணன் :—ஏன் ?

முருகப்பர் :—குரு மகான் கூறியவைகளைக் கேட்டு நடு நடுங்கிப்போனேன், முதலில்.

குமணன் :—நீங்கள் நடுங்கும்படி, என்ன அவர் அவ்வளவு பயங்கரமாகக் கூறிவிட்டார் ?

முருகப்பர் :—பயங்கரமா, உங்கள் வாழ்வையே படுகுழி யில் தள்ளும் வார்த்தைகளை யல்லவா, வாரியிறைத்தார் !

குமணன் :—என்ன சொன்னார் என்று சொன்னால் தானே நானும் உங்களோடு பங்கிட்டு, அந்தப் பாதகத்தின் தன்மையை உணர முடியும் ?

முருகப்பர் :—குமுதாவை நீ மணக்கக் கூடாதாம்—தோஷ மிருக்கிறதாம்—சாஸ்திர ஏடுகள் அப்படித்தான் கூறுகின்றன வாம் !

குமணன் :—ஐயோ ! பிறகு......?

முருகப்பர் :—வேறு வழியே இல்லையா—அவர்கள் வாழ்வு துண்டித்துப் போகவேண்டியது தானா என்று பரிதாபமாகக் கேட்டேன். குருவின் முகத்தில் சிரிப்பைக் கண்டேன்—அதற் குப் பரிகாரமும் உண்டு என்றார். அப்புறம்தான் எனக்கு உயிர் வந்தது.

குமணன் :—என்ன தோஷம்? அதற்குரிய பரிகாரம் என்ன ?

முருகப்பர் :—நீ ஒரு மாத காலம் குமுதாவைப் பார்க்கக் கூடாது—அவள் அந்த மாதம் முழுவதும் அனுமன் பூஜைசெய்ய வேண்டும்.

குமணன் :—விநோதமான தோஷம் ! விசித்திரமான பரி காரம் !! அனுமானின் துணையால் எல்லாம் நன்மையாகவே முடியட்டும் !!!

முருகப்பர் :—ஒரு மாதத்தில் என்ன கெட்டுவிடப் போகி றது? குமுதா உனக்காகப் பிறந்திருக்கிறாள்—எத்தனை யுகங்க ளானாலும், உன்னையன்றி வேறு யாரை மணக்க நினைக்கப் போகிறாள்? கவலையை விடு—நான் வரட்டுமா?

[முருகப்பர் வெளியேறுகிறார்.]

## காட்சி 21

**இடம் :** மோகினி தேவியின் தனிமாளிகை, **காலம் :** **இரவு. இருப்போர் :** மோகினி, குமணன்.

[குமணன், வாயிலில் நுழைகிற பொழுதே, தன் ஆசனத்திலிருந்து எழுந்தோடி வரவேற்கிருள் மோகினி. இந்தப் புதிய வரவேற்பு, குமணனைத் திகைக்க வைக்கிறது.]

மோகினி :—கலைஞரே, உங்களிடம் ஒரு உண்மையைச் சொல்ல நினைத்திருந்தேன் பல நாளாய்!

குமணன் :—என்ன உண்மை?

மோகினி :—அது தித்திக்கும், கேட்டால்.

குமணன் :—அந்தத் தித்திப்பிலே எனக்கும் பங்கு தாருங்கள் தேவி.

மோகினி :—பங்குதாரர் அல்ல தாங்கள், அந்த இனிப்பின் சொந்தக்காரரே நீங்கள்.

குமணன் :—உண்மையை உரைக்காமல், உண்மை தரும் உவகையையே விவரிக்கிறீர்கள்.

மோகினி :—எப்படிச் சொல்வது என்று புரியாமல் தான் இப்படிக் குளறுகிறேன்.

குமணன் :—குளறவு மில்லை, உளரவு மில்லை, என் ஆவலை அதிகப்படுத்த இப்படிப் பேசுகிறீர்கள்—அந்த உண்மையைக் கூறுங்கள்.

மோகினி :—போதையிலே குளருமல் என்ன செய்வது?

குமணன் :—போதையா?

மோகினி :—காதல் மது தந்த போதை.

குமணன் :—தேவியே, உண்மையைத் தெளிவாகச் சொல்லுங்கள்.

மோகினி :—கலைஞரே, நான் நீண்ட நாளாய் ஒரு ஓவியம் தீட்டி வருகிறேன்.

குமணன் :—மட்டிலா மகிழ்ச்சி, மகராணி—ஒரு ஏழை ஓவியன் ஒரு நாட்டின் அரசிக்கே, ஓவிய உணர்ச்சியை ஊட்டி விட்டான் என்ற பெருமை எனக்கு ஏற்பட்டது கண்டு பூரிக்கிறேன்.

மோகினி :—தாங்களா, ஏழை?

குமணன் :—பின்......?

மோகினி :—கலைப் பேழை!

குமணன் :—பேழை என்றுமே காலிதான்—அதில் வெள்ளிப் பணங்கள் இருப்பதில்லை—வெறும் படங்கள்தான் அடுக்கியிருக்கும்.

மோகினி :—தங்க நாணயங்களால் நான் நிரப்புகிறேன்!

குமணன் :—நன்றி தாயே, நான் அந்த ஓவியத்தை......

மோகினி :—அந்த ஓவியமும் இன்றுதான் முடிகிறது.

குமணன் :—அப்படியானால் இந்நாள் ஒரு பொன்னுளே—அந்நன்னுளில் அந்த ஓவியத்தை நான் பார்க்கிறேன்.

மோகினி :—நீங்கள் நினைத்தால் பார்க்கலாம்.

குமணன் :—நினைப்பதா, அரசியார் தீட்டிய ஓவியத்தைக் காணவேண்டும் என்ற ஆவலால் துடிக்கிறேன்.

மோகினி :—துடிக்க வேண்டாம்—துடிப்படங்க — இந்த—இல்லை, நான் செய்கிறேன்.

குமணன் :—காலங்கடத்தாமல் ஓவியத்தைக் காட்டுங்கள்.

மோகினி :—திரை மறைத்திருக்கிறதே.

குமணன் :—திரையைக் கிழித்து, சித்திரத்தைப் பார்க்கிறேன்.

மோகி :—ஆகா, பாருங்கள்-நன்ருகப் பாருங்கள்!...

[மோகினி தன் இதயத்தைச் சுட்டிக் காட்டுகிருள்—குமணன் முகம் மாறுகிறது.]

குமணன் :—எங்கே?

மோகினி :—இங்கேதான்.

குமணன்: —இங்கேயா...?

மோகினி :—என் இதயத்தில்!

குமணன் :—இதயத்திலா—நல்ல வேடிக்கை இது.

மோகினி :—வேடிக்கை இல்லை கண்ணுளா-வேதனை, இன்ப வேதனை!

குமணன் :—என்னைச் சோதனை செய்கிறீர்களா, தாயே?

மோகினி :—மாதெனை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன் கண்ணுளா.

குமணன் :—ஐயோ, அரசியாரே, வார்த்தை குழறுகிறது-நிறுத்தி, நிதானமாகச் சொல்லுங்கள்-இதயத் திரையில் தீட்டிய ஓவியம் யாருடையது?

மோகினி :—இதைக் கேட்டா தெரிந்துகொள்ளவேண்டும்?

குமணன் :—கேட்காமலே தெரிகிறது-இதோ இவரின் ஓவியந்தானே.

[மன்னன் மகேந்திரன் படம் அங்கே தொங்குகிறது. அதை குமணன் காட்டுகிருன்.]

மோகினி :—அது இந்நாட்டுக் காவலனின் படம்-என் இதயத்திலிருப்பது ஒரு கள்ளனின் படம்.

குமணன் —கள்ளனு?

மோகினி :—என் இதயத்தைக் கொள்ளை யடித்தவனுக்கு என்ன பெயரிடலாம், காதலா...?

குமணன் :—தங்களின் பேச்சு தடுமாறுகிறது-இனி என்னுல் இங்கு இருக்க முடியாது, தாயே.

மோகினி :—நாயே, என்று வேண்டுமானுலும் அழையுங்கள்—அதுகூட இனிக்கும்-ஆனுல் மீண்டும் ஒருமுறை என்னைத் தாயே என்று அழைக்காதீர்கள்.

குமணன் :—தாயே, இது தகுமா, நான் போகிறேன்.

மோகினி :—என் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு ஓடி விடாதே, கண்ணுளா-உமது அழகோவியத்தைக் கண்டு கண்டு களித்து, காணுதபொழுது ஏங்கி, ஏங்கி வீங்கிப் போன கண்களைப் பாருங்கள்.

குமணன் :—காமத்தைக் கக்கும் அந்தக் கண்களைக் கண்ணீரிலே கழுவுங்கள் தாயே.

மோகினி :—தங்களின் புத்தமுத முத்தங்களுக்காகத் துடிக்கும் என் இன்ப உதடுகளைப் பாருங்கள்.

குமணன் :—துடிக்கும் உதடுகளுக்கு, மன்னன் மகேந்திரன் தண்டனை தருவார்.

மோகினி :—ஏன் என்னை வெறுக்கிறீர்கள்-நான் அழகாயில்லையா?

குமணன் :—இந்தக் கேள்வியைக் கேட்கவேண்டிய இடத்தில் கேளுங்கள்.

மோகினி :—என் உடை?

குமணன் :—காமனின் படை யென்பர் பாவலர்.

மோகினி :—என் நடை?

குமணன் :—அன்னத்திடம் உண்டென்று கவிஞர்கள் கூறுவர்!

மோகினி :—என் இடை?

குமணன் :—தோன்றி மறையும் மின்னல் என்பர் கவி வாணர்!

மோகினி—என் சடை?

குமணன் :—வளைந்து நெளியும் கருநாகம் என்பர் நாவலர்!

மோகினி :—கவிஞர், கவிவாணர், பாவலர், நாவலர் என்ன கூறுவரென்று நான் கேட்கவில்லை-இந்த ஓவியர் என்ன சொல்கிறார்?

குமணன் :—ஓவியர் ஒன்றும் புரியாமல் தவிக்கிறார்!

மோகினி :—என் காதலர் தவிப்பு தீர்க்கப் பாடவா?

குமணன் :—ஐயோ, தங்கள் பேச்சே பாட்டுதானே?

மோகினி :—இல்லை, ஆடவா?

குமணன் :—தங்கள் நடையே, நாட்டியந்தானே?

மோகினி :—கண்ணாளா, என்னைப் பாருங்கள்-என் பரிதாபத்தைப் பார்த்தாவது மனமிரங்குங்கள்-பரவசப்படுங்கள்.

[குமணன் கரங்களைப் பற்றியிழுக்கிருள்.]

குமணன் :—சீ, விலகி நில்-காமக் கருநாகமே, என்னைத் தீண்டிவிடாதே! இந்நாட்டுக் காவலனைக்கடித்து, அவனை அழித்தது போதாதென்று என்னையும் அக்கிரமப் பாதைக்கு இழுக்கிருய்? காமத்தால் கண்ணிழந்து தடுமாறும் காதகி, பாதகம் பல புரிந்தும், இன்னும் உன் பசியடங்கவில்லையா? சீ, சீ—எட்டி நில்லடி, எட்டேகால் இலட்சணமே, எருமைக்கடா வாகனமே-எட்டிநில்! துன்மார்க்கக் கரங்களால் தொட்டுவிடாதே—தூய்மையைக் கெடுத்துவிடாதே—என்னை நீ சரியாகப் புரிந்து கொள்ளவில்லை—மோகினி தேவி, உனது காமவலையில் நான் சிக்கமாட்டேன்—எனக்காக காலமெல்லாம் காத்திருக்கிருள் என் கண்மணி குமுதா—அவளுக்கு நான் சொந்தமாகி நாட்கள் பலவாகிவிட்டன—இனி எந்தப் பெண்ணுக்கும் என்னைச் சொந்தமாக்கும் உரிமை எனக்கில்லை.

[குமணன் வேகமாக வெளியேறுகிருன்]

மோகினி :—(தனித்து) மோகினி தேவியின் கோபம், கொந் தளிக்கும்கடலென்பதை யறியாமல் போகிருன்-ஓவியன் தானே, உலகம் தெரியவில்லை-குமுதா வாம்-அவன் கண்மணியாம்-காலமெலாம் காத்திருக்கிருளாம்-இவர்கள் கூடி மகிழ்வதை நான் பார்க்கிறேன்!

[மோகினிதேவி கையைத் தட்டுகிருள்.]

மோகினி :—யாரங்கே, முல்லையா-வா, இங்கே.

[முல்லை விரைந்து வருகிருள்.]

மோகினி :—முல்லை! நாளை தங்கத்தை நீ காணவேண்டும்.

முல்லை :—எதுக்கம்மா?

மோகினி :—தங்கப் பை யொன்று தா அவளிடம்-நான் பரிசளித்ததாக-பிறகு......(மோகினி அவளிடம் காதோரம் செய்தி கூறுகிருள்-முல்லை முகம் விரிகிறது) ஒரு கல்லடி-மூன்று கனிகள்-பார், வேடிக்கையை!

## காட்சி 22

**இடம்** : அனுமன் கோவில். **காலம்** : மாலை. **இருப்போர்** : குமுதா, குருக்கள், பக்தர்கள்.

(அனுமன் ஆலயத்தில் மிகப் பெரிய அனுமன் சிலை யிருக்கிறது. பக்தர்கள் வலம் வருகிருர்கள்-குமுதாவும் வலம் வருகிருள். அவளைப் பக்தர்கள் உற்றுப் பார்க்கிருர்கள் - கோயில் குருக்கள் தீபமேற்றிடுகிருன்-குமுதா வலம் வரும் பொழுதே, அரண்மனையாட்கள் பின்னுலேயே வட்ட மிடுகிருர்கள்.)

## காட்சி 23

**இடம்** : குமணன் ஓவியச் சாலை. **காலம்** : மாலை. **இருப்போர்** : குமணன், முருகப்பர், தங்கம்.

(குமணன், எழுதும் குமுதாவின் படத்திற்கு மேலும் அழகு கூட்டிக்கொண்டிருக்கிருன்.)

முருகப்பர் :—தம்பி இன்ருேடு தீர்ந்தது, தோஷம்.

குமணன் :—தோஷம் என்று கூறிய தொல்லை முடிந்து விடும்.

முருகப்பர் :—இன்று உன் குமுதா, கடைசியாக ஆலயத் துச் செல்கிருள்—அபிஷேகம், ஆராதனை எல்லாம் நடைபெற இருக்கின்றன.

குமணன் :—அபிஷேகம் ஆராதனை......

முருகப்பர் :—அரச குரு ஆக்கினைப்படி......

குமணன் :—பூஜை முடிந்ததும்......

முருகப்பர் :—தோஷம் ஓடிவிடும். நீங்கள் கூடி மகிழத் தடையேதுமில்லை யென்று அவர் கூறினார்-சரி தம்பி, பொழுதாகிறது, போய்வருகிறேன்.

(முருகப்பர் சென்றதும், தங்கம் பரபரக்க ஓடிவருகிறாள்.)

தங்கம் :—ஓவியரே, தங்களை மூத்த ராணியார் அவசரமாகப் பார்க்க வேண்டுமாம்—உடன் அழைத்துவரச் சொன்னார்கள்.

குமணன் :—மரகதவல்லியாருக்கு, மிகவும் நோய் முற்றியிருக்கிறது என்று சொன்னார்களே.

தங்கம் :—ஆமாம், மரணப் படுக்கையில்தான் எதை மனதில் வைத்துக்கொண்டு தங்களை அழைத்து வரச்சொன்னார்களோ-நான் அறியேன்.

குமணன் :—ஏதேனும், ஓவியக்கலை மூலம், அவர்கள் நினைவாகக் காரியம் செய்யக் கட்டளையிடுவார்களோ?

தங்கம் :—இருக்கும், இருக்கும்—புறப்படுங்கள்.

குமணன் :—இதோ வருகிறேன்.

## காட்சி 24

**இடம் :** அரசி மரகதவல்லியின் தனிமாளிகை. **காலம் :** இரவு. **இருப்போர் :** மரகதவல்லி, தங்கம், குமணன், மகேந்திரன், மோகினி,

(மரகதவல்லி படுக்கையில் கிடக்கிறாள்-புரள்கிறாள்-உருள்கிறாள். கண்டபடி ஏதேதோ பேசுகிறாள்.)

தங்கம் :—அம்மா, ஏன் அம்மா இப்படி படாதபாடு படுகிறீர்கள்—உங்களுக்கு என்ன வந்துவிட்டது?

மரகதவல்லி:—எனக்கு வந்தது இடியும், மின்னலும்—என் மணாளர் மழையில் நனைவார், கூட்டி வாடி.

(தங்கம் மிரளமிரள விழிக்கிறாள்-குமணன் அப்பொழுது வருகிறான் தங்கம் அவனையொருமுறை பார்க்கிறாள்-மரகதவல்லியை ஒருமுறை பார்க்கிறாள். பயம் அவள் கண்களில் படர்கிறது.)

தங்கம் :—அம்மா...அம்மா...இதோ உங்கள் மணாளர் மகேந்திரர்.

[தங்கம் கூறுகிருள்-குமணன் உள்ளே வந்து நிற்கிருன்.]

மரகதவல்லி :—வாருங்கள், நாதா—இல்லை (அவனை உற்றுப் பார்த்து) இவர்...ஆமாம், என் மணாளர்தான்.

(குமணன் ஆச்சர்யம், பயமிடையே தடுமாறுகிருன்.)

மரகதவல்லி :—அடி, தங்கக் கட்டிலில் முத்துச் சரங்களைக் கட்டி அலங்கரி.

குமணன் :—தாயே, நான் ஓவியன் குமணன்-என்னை...

மரகதவல்லி :—என்னடி நிற்கிருய்—பட்டுப் பீதாம் பரத்தை விரி.

குமணன் :—தாங்கள் அழைப்பதாக தங்கம் கூறினுள்—வந்தேன்.

மரகதவல்லி :—என் கண்ணாளர் கலங்குகிருர் - இவள் கற்சிலை மாதிரி அசையாது நிற்கிருள்.

குமணன் :—அம்மா, தங்கள் நிலை சரியில்லை போலும்.

(மரகதவல்லி, திகைத்து நிற்கும் தங்கத்தை விரட்டு கிருள்-குமணனைக் கரம்பற்றி யிழுக்கிருள்.)

மரகதவல்லி :—வாரும், பிராணபதே.

குமணன் :—ஐயோ, அந்தப்புரம் என்ருலே, இத்தகைய அக்கிரமச் சாக்கடைதானே?

மரகதவல்லி :—பழம் சாப்பிடுங்கள்.

குமணன் :—என்னை விட்டுவிடு தாயே - என்னை ஏன் அழைத்தீர்கள்-படம் ஏதாவது எழுத வேண்டுமோ-கூறுங்கள்.

மரகதவல்லி :— விட்டுவிடுவதா—விடமாட்டேன் — என் அன்பரே—பால் சாப்பிடுங்கள்.

[குமணன் உதறியடித்துக்கொண்டு வெளியேறப் பார்க் கிருன். தங்கம் திருட்டு விழி விழித்தபடி, வெளிக்கதவைப் பார்த்தபடி நிற்கிருள்.)

மரகதவல்லி :—போய்விடாதீர்கள், கண்ணாளா, கட்டிலில் அமருங்கள்—கட்டியணைத்தெனக்கொரு முத்தம் தாருங்கள்—அந்த முத்தத்திலே இந்த மூவேழு லோகங்களையும் நான் காண்பேன். வாருங்கள், வந்தெனக்கொரு முத்தம் தாருங்கள் தா ... தா ... தகிடுதா... தக்கிட தா ... தத்திக்கணதோம்... தகிட, தகிடதகிடதா. எல்லாம் அனுமார் அருள்.

[குரங்குபோல் அவனைத் தாவித் தழுவுகிருள். அப்பொழுது திடீரென வெளிவாயில் கதவு திறக்கப்படு கிறது. தங்கம் ஓடுகிருள். மோகினிதேவியும், மன்னன் மகேந்திரனும் வருகிருர்கள்.]

மோகினி :—மன்னரே, பாருங்கள்—இப்பொழுது தெரி கிறதா—ஜன்னியா, ஜாலமா? மானங்கெட்ட மண்டூகங்கள்!

மகேந்திரன் :—அடி பாதகி, என்ன காரியம் செய்து விட்டாய்—அரசி விபசாரம் செய்கிருள்—ஐயோ, மகேந்திரன் மனைவி மானத்தை விலை கூறுகிருள்—மலைநாட்டின் மகராணி கண்டவனேடு கூடிக் களியாட்டம் போடுகிருள்—(குமணனைப் பார்த்து) அட சண்டாளா, சதிகாரா, படம் எழுதுகிறேன், எழுது கிறேன் என்று இந்தப் பாதகம் செய்யத்தான பசப்பித் திரிந் தாய்—தாயைத் தாரமாக்கத் துணிந்த தறுதலையே!

குமணன் :—மன்ன, தங்கம்......

மகேந்திரன் :—அட தடியனே, தங்கம் தூதுவந்தாளா—அந்தப் பெருமையை வேறு சொல்ல வந்துவிட்டாயா......

குமணன் :—கொஞ்சம் பொறுமையோடு...!

மகேந்திரன் :—பொறுமையா—எனக்கா—இனிமேலா.

மரகதவல்லி :—ஆகா, அனுமாரே, வாலைத்தூக்கி, பந்தத் தைக் கொளுத்து—இதோ, இதோ—இலங்காபுரி.

மகேந்திரன் :—ஜன்னியோ, உனக்கு—சாகசக்காரி! நோய் நோய் என்று இந்த நாய் செயலைத்தான செய்து வந்தாய்? இதோ, உன் வாழ்வின் கடைசி அத்தியாயம்—செத்துப்போ—மலை நாட்டு மானத்திற்கே உலைவைத்த மதி கெட்டவளே மடிந்துபோ—போ, போ, போ......!

[மகேந்திரன் மரகதவல்லியின் கழுத்தை நெறித்துக் கொன்று விடு கிருள்—குமணன் ஐயோ என்று அலறுகிருன்—மோகினிதேவி மிரட்சி யுடன் நிற்கிருள்.]

மகேந்திரன் :— (குமணனைப்பார்த்து) அட சண்டாளா-உன் நாறிப்போன நடத்தையை ஊராரிடம் உளறிக் கொட்டாதே—ஓடிப்போய்விடு—இன்று இரவே இந்நாட்டின் எல்லையைதாண்டி ஓடிவிடு. கதிரெழுமுன் மலைநாட்டின் எல்லையைக்கடந்துவிடு—அட, நன்றிகெட்டவனே, உன்னை நாடு கடத்துகிறேன்.

## காட்சி 25

**இடம்:** அனுமன் ஆலயம், **காலம்:** இரவு, **இருப்போர்:** பக்தர்கள், குருக்கள், பொதுமக்கள், குமுதா, முருகப்பர், குரு கோவிந்தானந்தர், குலசேகரன் மற்றும் பலர்.

[காலட்சேபம் நடக்கிறது. குருகோவிந்தானந்தர், குலசேகரன் ஆகியோருக்குத் தனிபீடம் போடப்பட்டிருக்கிறது. காலட்சேபம் நடைபெறுகிறபொழுது கோயிலில் தீபாராதனையும் நடைபெறுகிறது. காலட்சேபக்காரர் இராமாயணம் ஆரம்பமுதல் முடிவுவரை கதையைக் கூறிவருகிருர்.]

வனத்திலே சீதை தனித்திருந்தாள்
வான்விட்டிறங்கி வந்த தேவர்போல்
முனிவர் வடிவங் கொண்டு வந்து
நின்ருன் இராவணன்,

இந்தக் கருத்துள்ள அடி வருகையில் அனுமன் சிலேக்குப் பின்னிருந்து, முகத்தில் குரங்கு மூடிபோட்ட ஆட்கள் நெருங்குகின்றனர்.

கோட்டைத் தாண்டினுள் சீதை
கொண்டு போனுன் இராவணன்,

இந்த அடிவருகையில் ஆட்கள் கூட்டத்தில் புகுந்தார்கள். கூட்டம் சிதறியோடிற்று. குமுதா 'அப்பா' என்று அலறுகிருள். அப்பொழுதும் காலட்சேபம் நிற்கவில்லே.

பட்சி ராஜா சடாயு பாய்ந்தான்
சிறகொடிந்து அவனும் சாய்ந்தான்.

என்ற அடிவரும்பொழுது, "ஆ, குமுதா, மகளே" என்று கூவியபடி குமுதாவைத் தூக்கிய ஆளே முருகப்பர் தடுத்தார். அவன் தாக்கினுன். கிழவர் சாய்ந்தார். குரு, குலசேகரன் ஆகியோர் ஆட்களுக்குச் சைகை காட்டுகின்றனர்.

## காட்சி 26

**இடம்:** குமணனின் ஓவியச் சாலே, **காலம்:** இரவு, **இருப்போர்:** குமணன்.

குமணன் :—(*தனித்து*) நாடு கடத்தப்பட்டேன்—குற்றம் ஏதும் புரியாமலே தண்டிக்கப்பட்டேன். நான் பிறந்த இந்த பொன்னுட்டில் நான் இருக்கக்கூடாது-நான் பிறந்து, வளர்ந்த

இந்த மண்ணிலே, நான் இனி உலவக் கூடாது. நான், நாளை கதிரவன் எழு முன், தாயகத்தை விட்டே ஓடிவிட வேண்டும். மலைநாடே, உன் வயிற்றிலே பிறந்து, உன் மடியில் தவழ்ந்து, உன் தோள்மீதும், மார்புமீதும் தாவி விளையாடிய உன் மகனை விரட்டுகிருய். உன்னை, தன் கலைக் கரத்தால் அழகு படுத்திய மகனை அலங்கோலப்படுத்தித்துரத்துகிருய்-போகிறேன் உன்னை விட்டு-போனபிறகாவது ஒரு தவறுமில்லாமல் ஒரு மகனை விரட்டியடித்தோமே என்று வேதனைப்படு-தாயகமே, என் அன்பு அன்னையே, போகிறேன், குமுறும் உள்ளத்தோடு—ஆனல் என் குமுதாவை உன்னிடம் விட்டுவிட்டல்ல — இப்பொழுதே செல்கிறேன். இந்நேரம் ஆலயத்திலிருந்து திரும்பியிருப்பாள் என் அன்புச் சித்திரம்-அவளை அழைத்துக்கொண்டு போகிறேன்.

## காட்சி 27

**இடம் :** முருகப்பர் இல்லம், **காலம் :** இரவு, **இருப்போர்:** குமணனன்,

[முருகப்பர் இல்லம் பூட்டப்பட்டிருக்கிறது-குமணன் பூட்டிய கதவைத் தட்டுகிருன்.பூட்டை இழுத்து இழுத்துப் பார்க்கிருன்.]

குமணன் :—குமுதா, குமுதா......இன்னுமா ஆலயத்திலிருந்து திரும்பவில்லை-ஆலயத்திற்கே போகிறேன்.

## காட்சி 28

**இடம் :**—அனுமன் ஆலயம், **காலம் :** இரவு, **இருப்போர் :** குமணன், முருகப்பர்.

குமணன் கோயிலுள் ஓடுகிருன்-அங்கு ஒருவருமே இல்லை-கோயில் வெறுங் கோயிலாக இருக்கிறது-வழியிலே குற்றுயிரும் குலையுயிருமாய்க் கிடக்கிருர் முருகப்பர். அவரைத் தூக்கி மடியில் வைத்துக்கொண்டு குமணன் கதறுகிருன். ]

குமணன் :—மாமா, மாமா, ஆலயத்திற்கு வந்த உங்களுக்கு இத்தகைய அபாயம் ஏன் வந்தது? மாமா, மாமா, மகளின் தோஷம் கழிய பூஜை செய்ய வந்த உங்களுக்கு இந்தக் கதி வர யார் காரணம்? மாமா, குமுதா எங்கே? உங்களை இந்நிலையில் விட்டுவிட்டு எங்கே ஓடிவிட்டாள்? மாமா, சொல்லமாட்டீர்களா ? பேசவே மாட்டீர்களா? உங்கள் மருமகன் வந்திருக்கிறேன் மாமா......!

[அப்பொழுதுதான் முருகப்பர் கண்களைத் திறக்கிறார். அவனைக் கட்டிக்கொள்கிறார். கண்ணீர் சொரிகிறார்.]

முருகப்பர் :—உன் குமுதாவைக் காப்பாற்ற முடியவில்லை—மன்னித்துவிடு.

குமணன் :—குமுதா என்ன ஆனாள்? கூறுங்கள் மாமா!

முருகப்பர் :—அவளுக்குத் தோஷம் என்றார்கள் கபட வேடக்காரர்கள்-காலிகள்-கயவர்கள்—கடவுளாம்-அனுமனும்-எல்லாம் வெறும் பித்தலாட்டம்—குமணா, உன் குமுதாவை ராஜகுரு என்ற பெயரில் உலவும் வஞ்சகனின் ஆட்கள் கொண்டு போய் விட்டார்கள்—வருமுன் உரைத்து, நாட்டின் நலத்திற்காகத் தன் வாழ்வைப் பயன்படுத்த வேண்டிய மதியூக மந்திரி குலசேகரன், இந்த அக்கிரமச்செயலுக்கு உடந்தை-குமுதாவை எந்தப் பாதாளத்தில் ஒளித்து விட்டார்களோ—எந்தப் பாதகச் செயலுக்காக இந்தக் காரியம் செய்திருக்கிறார்களோ—குமணா, நான் இனி பிழைக்கமாட்டேன்—மகளைக் காப்பாற்ற போராடிய தந்தையை இப்படிச் செய்துவிட்டார்கள் பாவிகள்-விடாதே, ஆண்டவன் பெயரைச் சொல்லி, அக்ரமம் புரியும் அயோக்கியனை, ஆளும் உரிமையென்று கூறிக்கொண்டு நாட்டு மக்களைக் காட்டு விலங்காக நினைத்துக் கேவலமாக நடத்தும் அற்பர்களை அடக்கு! அவர்கள் சூதை அம்பலமாக்கு—விடாதே, விடாதே......!

[முருகப்பரின் ஆத்திர மொழிகள் ஓயவில்லை—முணுமுணுத்தபடியே, அவர் உயிர் பிரிகிறது.]

குமணன்:—ஐயோ, மாமா, ஆலயத்திலேயே, உங்கள் ஆவி பிரிந்துவிட்டது—மகளைப் பிரிந்து எப்படி இந்த மாநிலத்தில் வாழ்வதென்று, உங்கள் உயிரை மாய்த்துக் கொண்டீர்கள்? நம் மருமகன் ஓவியன்தானே, இந்தப் பாவிகள் கையில் சிக்கிய நம் குமுதாவை எப்படிக் காப்பாற்றுவான் என்று எண்ணி மடிந்தீர்களா? மாமா...ஐயோ! குமணன் தீட்டுகோல் பிடித்த கரத்தில் வாள் ஏந்திடுவான்—வஞ்சகரை வீழ்த்திடுவான்—குமுதாவை, இந்தக் குவலயத்தில் எந்தக் கோடியில் ஒளித்து வைத்தாலும் கண்டுபிடித்து விடுவான் என்பதை மறந்தீர்களா? மாமா......

[குமணன் எழுந்திருக்கிறான்-சிரிக்கிறான்.]

அட பாவிகளே! எங்கள் வாழ்விலா இந்த அலங்கோலம்-இந்த அக்கிரமம்? என் மாமா, இந்த அனுமனைத் தொழாத நாளில்லையே-முத்துச் சரம் சாத்தியல்லவா, அனுமன் சிலைக்கு அழகு பார்த்துத் தொழுதார்—அவரையே ஆலயத்திலேயே

கொன்று விட்டார்களே...குமுதா, ஒரு மாதம் இந்தக் கோவி லிலே வலம்வந்துகொண்டிருந்தாளே-பூலோகத்தையே தெய்வ லோகமாக்குகிறேன் என்று என் குமுதா எத்தனை தடவை சொல்லியிருக்கிருள்-தெய்வ லோகத்திலேகூட, ஆண்டவன்மார் களுக்கு அவ்வளவு அழகும் அலங்காரமும் ஊட்டமாட்டார்கள்—என் ஓவியச்சாலையில் விதவிதமான வர்ணங்களால், இந்தக் கடவுளர்களை எத்துணை எழிலுடன் தீட்டி வைத்திருப்பேன்-என் திறமை மட்டுமல்ல, பக்தியும் சேர்ந்துதான் இவ்வளவு ஓவியங் களை எழுதிக் குவித்தேன்—அனுமன் திருவுருவங்கள் ஆயிரக் கணக்கில் தீட்டியிருப்பேனே...பக்தி செலுத்தினேன் நான்... எனக்கு இந்தப் பாதகம் விளைவித்திருக்கிருர்கள்-அதுவும் அனுமன் ஆலயத்தில் வழிபடச் சென்ற பாவையைத் தூக்கிச் சென்றுவிட்டார்கள் துன்மார்க்கர்கள்—தூர்த்தர்கள்! இந்த அக்கிரமத்தைச் செய்ய ஆட்களை ஏவியிருக்கிருன் அரசகுரு... குருமகான் வேடம்—துளசி மாலை கழுத்தில், திருநாமம் நெற்றியில், தாளம் கரத்தில்—ஆனல் அவன் மனதில் வஞ்சகம், கடவுள் பக்தி, ஆராதனை, அபிஷேகம் எல்லாம் இந்நாட்டில் எத்தர் செய்யும் சித்து விளையாடல்கள்—ஏமாளிகளைப் பிடிக்க, அவர்கள் வீசியுள்ள விசித்திர வலைகள்!...நான் விடப்போவ தில்லை...அரசகுருவிடம் செல்கிறேன்-அவனை ஆட்டி வைக் கிறேன்.

அரச பீடமாம்...அதிலே அமர்ந்திருப்பது மன்னனல்ல... பயங்கரக் கொலைகாரன்-அவனைச் சுற்றிலும் கொலைகாரர்கள், அரச பீடத்திலே அமர்ந்துகொண்டு நெஞ்சிலே கொஞ்சமும் நேர்மைத் திறனின்றி பஞ்சமா பாதகங்களைச் செய்யும் மன்னனும், மந்திரியாம், பிரதானிகளாம்...இவர்களை விட்டு வைப்பது கூடாது...கூடாது! குருபீடம், அரசபீடம்—இந்த இரண்டையும் அடித்து நொறுக்குவதுதான் என் தொண்டு, இலட்சியம் எல்லாம்! குமுதா! என் அமுதே! அன்பே! உன்னை எங்கே கொண்டுபோய் விட்டார்களோ? என்ன செய்கிருர் களோ? என் செல்வமே, உன் ஆருயிர் காதலன் உயிருள்ள வரை, உனக்கு எந்தவித ஆபத்தும் வரவிடமாட்டான்—இதோ! வருகிறேன். நீ எங்கிருந்தாலும் உன்னை மீட்டுத் திரும்புவேன், குமுதா......!

(அனுமன் சிலை பக்கம் போகிருன்.)

உனக்கு, மனிதக் குரங்குகள் செய்யும் கோணங்கிச் சேட்டைகள் பிடிக்கின்றனவா என்ன—இந்தக் குரு உன்னை ஏன் தெரிந்தெடுத்தான்—நீ ராமர் பாதத்தைத் தாங்கி

கிற்கிருயே, அதுபோல மலைநாட்டார், இந்த மாபாவி கால்களைத் தாங்கிடவேண்டுமென்பதற்காகவா—உனக்கு அனுமார் என்று பெயரிட்டான்-பூஜை நடத்துங்கள், புண்ணியம் உண்டென்ருன் குலகுரு என்ற பெயரில் உலவும் கபடன். கடைசியில் இந்த அக்கிரமத்தைச் செய்யவா, இந்த அனுமன் பூஜையும், ஆலயத் திருப் பணியும்! ஏ அனுமாரே, காணமற் போன சீதையைக் கண்டு பிடித்துத் தந்ததாகக் கதை கூறுகிருர்களே—நீ, கண் மணி என் குமுதாவைக் களவாடிக்கொண்டாயே! உன்னை விடமாட்டேன்-

(குமணன் வெறிகொண்டவன்போல் ஓடுகிருன்.)

## காட்சி 29

**இடம்** : குரு கோவிந்தானந்தர் தனிமாளிகை. **காலம்** : இரவு, **இருப்போர்** :—குமணன், குரு, காவலாட்கள்.

[குமணன் உள்ளே நுழைந்ததும், படுத்துறங்கும் காவ லாளிகளைக் காலாலும், கையாலும் அடித்தும் மிதித்தும் எழுப்புகிருன். அவர்கள் விழித்துக்கொண்டதும் குமணனைக் கண்டு நடுங்குகிருர்கள். அவர்கள் அவனேடு போரிடவும் முடியவில்லை; ஓடவும் முடியவில்லை.]

குமணன் :—குருவேடந் தாங்கி, கபட நாடகமாடும் கள்ள னின் மாளிகைதானே இது-கள்ளன் மாளிகைக்கா காவலாளி கள்—அட ஏமாளிகளே, ஓடிவிடுங்கள்—இது சூதுக்கோட்டை, அக்கிரம அரண்மனை, அநீதியின் கூடாரம், பாதகர்களின் பாசறை, நயவஞ்சகர்கள் நடனசாலை, நரித்தனங்களின் சுரங் கம், நாசகர்கள் கூடிப் பேசும் நச்சுக்கூடம். எத்தர்கள் சத்தி ரம்...ஐயோ, இது அரக்கு மாளிகையடா, ஓடிப்போய் விடுங் கள்-உதைபட்டுச் சாகாதீர்கள் !.....

[குமணன் அழுகிருன்]

குமணன் :—காவலாளிகளே, இங்கு அழகே உருவான பெண்ணொருத்தியைக் கொண்டு வந்தார்களே, கண்டீர்களா- எங்கே மறைத்துவைத்தார்கள்—அறிவீர்களா? சொல்லுங்கள், உங்களில் ஒருவனுக்குக்கூட ஒளித்த இடம் தெரியாதா? அட குருடர்களா? திருடன் வீட்டுக் காவலாட்கள்தானே !

(அவனைப் பைத்தியமென்று எண்ணி பயந்து காவலாட் கள் மிரண்டு ஓடுகிருர்கள், ஒருவனை மட்டும் வளைத்துக் கொண்டு குமணன் பேசுகிருன்—வாளைக்காட்டி மிரட்டு கிருன்.)

குமணன் :—அடே, உனக்குத் தெரியுமா, என் குமுதாவை ஒளித்த இடம்-மறைக்காதே, சொல்லிவிடு-பேசுடா-பேசமாட்டாய் ?அட ஊமையே—கயவன்வீட்டுக் காவலாளி தானே !

காவலாளி :—ஐயோ, எனக்கொண்ணும் தெரியாது—விட்டு டுங்க.

[வாளை அவன் முன் நீட்டியபடி நிற்கிறான் குமணன்]

குமணன் :—அடே எங்கேடா, அந்த கோவிந்தா...

காவலாளி :—யாருங்க ?

குமணன் :—குரு......தேவர்......மகான்......

காவலாளி :—தூங்குறாருங்க

குமணன் ;—போய், அந்த வஞ்சகனைத் தட்டியெழுப்பு—நொந்துபோனவன் ஒருவன் வந்திருக்கிறான்—அவன் கையிலே வாள், கண்களிலே புனல், மூச்சிலே அனல், பேச்சிலே புயல் அடிக்கிறது என்று சொல்—குருமகானைக் கண்டு தரிசித்துப் போகக் காத்திருக்கிறான் என்று சொல்லடா, போடா—போ!

[காவலாளி உள்ளே ஓடுகிறான்...அலங்கோலமாக எழுந்து குரு வெளியில் வருகிறார்.]

குமணன்:—குருமகானே—அட குணங்கெட்ட கபடனே... என்னைக் கண்டு பயப்படு வானேன்? அனுமனின் அனுக்கிரகத்தை, அனுதினமும் பக்த கோடிகளுக்குப் பகிர்ந்தளிக்கும் குருதேவரா பயப்படுவது—மகா குரு நீர்—மனிதப் பதர் நான்—என்னைக் கண்டு ஏன் பயப்படுகிறீர் ?

கோவிந்தானந்தர் :—ஐயோ, குமணா, இந்தக் கோலத்தில் ?

குமணன் :—குமணன்தான் கடவுள், பக்தி, பாசுரம், திருநாமம் என்று கூறி மயக்கி, உன் விருப்பம் போல் ஆட்டி வைத்தாயே, மலை நாட்டு மக்களை அந்த மலை நாட்டு மக்களின் ஒரு அணு—ஒரு அங்கம்—இன்று புறப்பட்டு விட்டது மயக்கம் தெளிந்து !

கோவிந்தானந்தர் :—நீ என்ன சொல்கிறாய்?

குமணன் :—உன் சூதை, சூழ்ச்சியை, வஞ்சகத்தை, பிறர் வாழ்வைப் பாழாக்கும் நச்சுப் போக்கை, நாச காலத் திட்டத்தை, நாட்டோருக்குச் சொல்லப் புறப்பட்டிருக்கிறேன், சூறாவளிபோல் !

கோவிந்தானந்தர் :—குமணா, கோபங்கூடாது...அது மகா பாவம்...ஏன் இப்படிப் பேசுகிறாய்?

குமணன் :—அட, நயவஞ்சகா, உன் நரித்தனங்கள் இனி என்னிடம் நடவாது. நான் கேட்பவைகளுக்கு விடை கூறிவிடு! —இல்லாவிட்டால், இதோ பார் வாள்...இந்த வாள் பேசும்— என் வாய் பேசாது—அனுமனைத் தினமும் நினை—அதனல் கிடைக்கும் நன்மைகள் அனந்தம் என்று கூறினுயே, அந்த அனுமன் ஆலயத்தில் இன்று என்ன நடந்தது?

கோவிந்தானந்தர் :—பூஜை—விசேஷ பூஜை!

குமணன் :—எதற்கு?

கோவிந்தானந்தர் :—தோஷம் தீர உன் திருமணம் நிச்சயிக்கப்பட.

குமணன் :—தோஷம் தீர்ந்தது—உன் சூதுத் திட்டமும் முடிந்ததா?

கோவிந்தானந்தர் :— ஏதேதோ பேசுகிருயே...எனக்கொன்றும் புரியவில்லையே!

குமணன் :—நாடகமாடுகிருயா, நல்ல பாம்பே! பூஜை முடிவதற்குள் தான் ஒரு பூகம்பம் ஏற்படுத்தி விட்டாயே!

கோவிந்தானந்தர் :—பூகம்பம், ஏற்படுத்தினேனு...?

குமணன் :—இந்த நாட்டு மக்கள் எல்லோரையும் குரங்காட்டம் ஆட்டுவித்த மனிதக் குரங்கே, எங்கே குமுதா?

கோவிந்தானந்தர் :—குமுதாவா......?

குமணன் :—ஆட்டம் போடாதே, அனுமாரே!

கோவிந்தனந்தர் :—எனக்குத் தெரியாதே!

குமணன் :—கோலெடுத்தாலே குரங்காடும் — நானே வாளோடு வந்திருக்கிறேன். உண்மையைச் சொல்லமாட்டாயா?

கோவிந்தானந்தர் :—ஐயோ, நள்ளிரவிலே இப்படி......

குமணன் :—நள்ளிரவென்ன, குள்ளநரியே, நாளை பட்டப்பகலிலேதான் உன்னை மக்கள் முன் இழுத்துச் செல்லப் போகிறேன்.

[வாளை நீட்டுகிருன்.]

கோவிந்தானந்தர் :—இவன் கொலைக்கும் அஞ்சமாட்டான் போலிருக்கே!

குமணன் :—ஆம், அனுமார் சுவாமிகளே—அரண்மனையிலே ஒரு கொலை—ஆலயத்திலே ஒரு கொலை—கொள்ளை—

அரசன் அங்கு கொலை செய்தான். அரசகுரு இங்கு கொலை செய்தான்—கொள்ளையிடுகிருன்—அட அயோக்கிய சிகாமணி களே, உங்களை ஒழிப்பதே இனி என் வேலை !

கோவிந்தானந்தர் :—ஐயோ, இங்கு யாருமில்லையா? எனக் கொன்றும் தெரியாதே-குலசேகரா—வந்து இந்தக் . கொலை வீரனைப் பாரடா.

குமணன் :—யார் வந்தாலும் என்னை ஒன்றும் செய்துவிட முடியாது. உன் குலசேகரனையும் பார்க்கிறேன்-குருதேவனு நீ-குடிகெடுக்கும் கோடரி நீ-கடவுள் பெயரைச் சொல்லி, கால மெலாம் ஏய்த்துவந்த கபடன் நீ-என் மதியிருண்ட காலம் மலை யேறிவிட்டது. எத்தனை ஆண்டவன்களின் படங்களை இந்தக் கரம் எழுதியிருக்கும்? எத்தனை ஆயிரம் அனுமார்களை என் திட்டுக்கோல் தீட்டியிருக்கும்—எல்லாம் சுயநலக்காரரின் சுரண் டல் திட்டம் என்பது வெட்டவெளிச்சமாகி விட்டது-இனி உன்னைப் போன்றோரின் கெடுமதிச் செயல்களைப் படங்களாக்கு வேன்—அப்படங்களை மக்களுக்குக் காட்டுவேன். ஊரார் உள் ளத்தில் தைக்கிற வரையில் உங்கள் அக்கிரமங்களை உணர்த்து வேன்! ராஜா, ராணி படங்களா, இனி என் ஓவியச்சாலையில் காணமுடியும்? மன்னனின் மமதையை ஓவியமாக்குவேன். மமதை அடக்க, மக்களை ஒன்று திரட்டுவேன். மன்னன் ஒழிய வேண்டும்-ராஜ குரு அழியவேண்டும். இந்த அறப்போருக்கு, இன்றே துவக்கவிழா!

[வாளை உயர்த்துகிருன். அதற்குள் பயந்தோடிய காவலாளிகளில் ஒருவன் கூவுகிருன். சுற்றிலுமிருந்து ஆட்கள் ஓடிவருகிருர்கள்-கும ணனைத் துரத்துகிருர்கள்.]

## காட்சி 30

இடம்: மந்திரி குலசேகரன் மாளிகை, **காலம்:** இரவு, **இருப்போர்:** குலசேகரன், குமணன் காவலாளிகள்.

[குமணன், திடுதிடுவென குலசேகரன் மாளிகையினுள் நுழை கிருன். அவனை ஏற்கெனவே துரத்தி வந்த குருவின் ஆட்களும் தொடர்கின்றனர். குலசேகரனின் காவலாளிகள் விழித்துக் கொண்டு அவனை விரட்டுகின்றனர். குலசேகரன் வெளியில் வருகின்ருன். அதற்குள் ஆட்கள் எல்லோருமாகச் சேர்ந்து குமணனைக் கட்டிக் குல சேகரன் முன் இழுத்து வருகின்றனர்.]

குலசேகரன் :—ஓவிய நிபுணரே, நள்ளிரவிலே இப்படி புறப்பட்டு விட்டீர்?

குமணன் :—குலசேகரா, குடி கெடுத்தவனே, எங்கேடா என் குமுதா?

குலசேகரன் :—குமுதாவைத் தேடித்தான் இளம்பினீரா? மகிழ்ச்சி. அவள் இருக்குமிடம் முருகப்பர் வீடல்லவா?

குமணன் :—கொடியவனே, கேலியா பேசுகிருய்? என் குமுதாவை எங்கே கொண்டு ஒளித்து வைத்துவிட்டீர்கள்? பாதகர்களே, உங்களை விடமாட்டேன்! படமெழுதுபவன் தானே, இவன் நம்மை என்ன செய்ய முடியும் என்று எண்ண வேண்டாம்! படைபல கொன்று தடைபல வென்று என் அன்பு ஓவியத்தை அடைய மன உறுதி உண்டு! அந்த உறுதியே, உங்களை ஒழித்து விடுமடா!

குலசேகரன் :—உறுதி கண்டு உள்ளம்பூரிக்கிறேன்-(பயங்கரமாகச் சிரித்தபடி) உளறிக்கொட்டுகிருன், ஊதாரிப்பயல்... இவனை இழுத்துச் செல்லுங்கள்—நாளை காலை மன்னன் முன் நிறுத்துவோம்.

## காட்சி 31

இடம்: அரசனின் தனி ஆலோசனைக்கூடம். காலம்: காலை. இருப்போர்: கோவிந்தானந்தர், மோகினி, குலசேகரன், மகேந்திரன், குமணன்.

[குமணனைக் காவலாளிகள் இருவர் கொண்டு வந்து நிறுத்துகின்றனர்.]

மகேந்திரன் :—நாட்டைவிட்டு விரட்டப்பட்டவன் நீ!

குமணன் :—ஆம், தீர விசாரிக்காமலே, தீர்ப்பளிக்கப் பட்டவன் நான்!

மகேந்திரன்:—தீர்ந்துபோன சேதி அது—இனி அந்தத் தீய செய்தி குறித்து வாயைத் திறக்காதே.

குமணன் :— தூயமனங் கொண்டவாகள் இவர்களில் ஒருவரையுமே காணேமே! இருந்தாலும்கேளுங்கள்-மன்னனின் மயக்கத்திற்காக ஒரு மலைநாட்டுக் குடிமகன், தான் பிறந்த பொன்னுட்டைவிட்டு விரட்டியடிக்கப்படுவதா? குமணன் செய்த குற்றம் என்ன, நீதிக் கூடாரத்திலே நிறுத்தப்பட்டு, விசாரணை நடத்தப்பட வேண்டாமா? தண்டனைகளிலே கொடிய தண்டனை எனக்கு-ஆனால் விசாரணையில்லை, ஏன்? இதுதான் நீதியின் போதனையா? அரச அவையைக் கூட்டுங்கள், பொது விசாரணை நடத்துங்கள்.

மகேந்திரன் :—அரச அவை கூடாது—பொது விசாரணை கிடையாது.

குமணன் :—ஏன் ?

மகேந்திரன் :—தேவையற்றதால் !

குமணன் :—தேவையற்றதாலல்ல, தெளிவற்றதால் !

குலசேகரன் :—தெளிவென்ன அதிலே ? கைப் புண்ணுக் குக் கண்ணுடியா? இந்தக் கயவனுக்குப் பொதுவிசாரணை வேண்டுமா ?

மோகினி :—இந்த அற்பனுக்காக அரச அவையைக் கூட்டுவதோ ?

கோவிந்தானந்தர் :—பாவம், துன்மார்க்கன் இன்னமும், தன் துடுக்குத்தனத்தை விடவில்லை.

குமணன் :—கயவன், அற்பன், துன்மார்க்கன்-இவர்கள் யார் என்று தெரிந்துகொள்வதற்குத்தான் பொது விசாரணை வேண்டும் என்கிறேன்.

மகேந்திரன் :—போதும், பொது விசாரணை கிடையாது, தண்டிக்கப்பட்ட நீ மேலும் தண்டனைக்குரிய குற்றங்களைச் செய்திருக்கிருய்.

குமணன் :—முதலில் தண்டிக்கப்பட்டது, அவசரத்தால். இப்பொழுது தண்டனைக்குரிய குற்றங்களைப் புரிந்ததாகக் கூறுவது ஆத்திரத்தால்.

மகேந்திரன் :—நள்ளிரவில் ராஜகுருவின் மாளிகையில் புகுந்து குழப்பம் செய்தாய் ?

குமணன் :—இவர் மகா குரு. இவருக்கு ஒரு மாளிகை, ஆம் மன்னு, கள்ளர் குகைக்குள் சென்றேன், ஆனுல் குழப்பம் செய்யவில்லை.

குலசேகரன் :—குரு வாசஸ்தலத்தை, கள்ளர் குகை என்கிருன் கடையன்.

குமணன் :—கள்ளத்தனம் நடந்ததால்தான் அப்படிக் கூறுகிறேன்.

மோகினி :—ஏன் அங்கு போனுய் ? கள்ளத்தனம் என்ன அங்கு கண்டாய் ?

குமணன் :—தேவியாரே! பறிகொடுத்தவன் நான், பறித்து கொண்ட பாவிகள் பாசறைக்குப் போகாமல் என்ன செய்வேன் ?

மோகினி :—பறிகொடுத்தாயா ?

குமணன் :—ஆம், என் அன்புச் சித்திரத்தை !

மோகினி :—ஏதாவது நீ எழுதிய படத்தையா?

குமணன் :—ஆமாம், அரசியாரே — என் பேசும் படத்தை இந்தக் குருவும், குலசேகரரும் சேர்ந்து, தூக்கிவந்து ஒளித்து விட்டார்கள். ஆகவே அவர்களைச் சந்தித்துப் போராடி என் பேசும் சித்திரத்தை மீட்டுச் செல்லச் சென்றேன். குழப்பம் செய்ய அல்ல.

மோகினி :—சித்திரம் பேசும்! பேசும் சித்திரத்தை இவர்கள் பறித்துக்கொண்டார்கள்!! வேடிக்கையான கதை!!!

குமணன் :—வேதனையான கதை—என் ஆசைக் குமுதா வைத்தான் குறிப்பிடுகிறேன்-ஆலயந் தொழுவது சாலவும் நன் றென்று போதிக்கிருர்களே, அந்த ஆலயத்திற்குச் சென்ற குமுதாவை தூக்கிக்கொண்டு போய் ஒளித்துவிட்டார்கள் !

கோவிந்தானந்தர் :—வீண் கற்பனை! பெண்ணைத் தூக்குவ தாவது-ஒளிப்பதாவது? அனுமன் விசுவரூபத்தோடு நின்றது- பெருஞ்சோதி தெரிந்தது. மலைநாடே கண்டு வியந்து கொண் டிருக்கிற அற்புதம் அந்த ஜோதியில் அவள் கலந்துவிட்டாள் !

குமணன் :—குருதேவரே, அந்த ஜோதியில் மகள் மறைந்துபோனுள்—தந்தை, மண்டையிலடிபட்டு மாண்டு போனுள்-அப்படித்தானே ?

மோகினி :—ஆ......

மகேந்திரன் :—மோகினி. அவனை நான் விசாரிக்கிறேன். குமணு, கதை பேசிக் காலங்கடத்திக் கொண்டிருக்க இது இடமில்லை.

குமணன் :—இந்த விசித்திர அவையில் வேறென்ன நடக்கும் என்பது எனக்குத் தெரியுமே !

மகேந்திரன் :—அதிகம் பேசாதே—நீ செய்த மற்ருெரு குற்றம்-மந்திரியாரின் மணி மண்டபத்தினுள் நுழைந்து, கலகம் விளைத்தாய்.

குமணன் :—வீண் குற்றச்சாட்டுகளை வேகவேகமாக வீசு கிறீர்கள்-என் குமுதாவை ஒளித்திருக்கும் கள்வர்களைக் கண்டு பிடியுங்கள் மன்னவரே—நான் உங்களிடம் நீதி கோருகிறேன். நீதி காட்டும் நெறிப்படி, அந்த அயோக்கியர்களைத் தண்டி யுங்கள்.

மகேந்திரன் :—குமணு, நாக்கை யடக்கு.

குமணன் :—என் நாவை அடக்கத் துடிக்கிறீர்கள்-ஆனுல் நாட்டில் உம்மைச் சுற்றியுள்ள நயவஞ்சகர்களை அடக்க முடியவில்லை.

மகேந்திரன் :—குமணு. நீ செய்த குற்றங்களுக்காக, ஏற்கனவே நீ பெற்ற தண்டனையை உறுதிப்படுத்துவதோடு, அரைக்கண நேரமும் அவகாசம் தராமல், உடனே நிறைவேற்றி வைக்க உத்திரவிடுகிறேன்.

குமணன் :—ஐயோ இது விசாரணையா ? எனக்குத் தரும் தீர்ப்புதானு இது-நல்ல விசித்திரம்-வேதனை! (மிகவும் ஆத்திரமாகவும், வேகமாகவும்) இது விசாரணை மண்டபமா ? இங்கு நடத்துவதும் விசாரணைதானு: இங்கு வீற்றிருப்பவர்களும் விசாரிக்கத்தக்க தகுதி பெற்றவர்களா? மன்னர், மந்திரி, மகாராணி, மகாகுரு இவர்களுக்குப் பட்டங்கள் ஒரு கேடா? என்னை விசாரிக்க இவர்களில் யாருக்குத் தகுதி உண்டு? குற்றவாளிகள் இவர்கள்! நீதிபதி நான்! நீதிபதியை, குற்றவாளிகள் விசாரிக்கிருர்கள்-அக்கிரமக்காரர்களே, அடுக்கடுக்காகச் சொல்கிறேன் நீங்கள் புரிந்த குற்றங்களை. ராஜகுரு வேடத்தில் இருக்கும் இந்த நரி, ஊரைக் கெடுத்தது-மந்திரியார் பீடத்திலே இருக்கும் இந்த ஆந்தை செய்த அநீதிகள் எத்தனை-மகாராணியென்ற பெயரில் இருக்கும் இந்த நல்லபாம்பு, நாமக்கருநாகம்—மன்னன் ஒரு கொலைகாரன்......

மகேந்திரன் :—அடக்கடா நாவை...

குமணன் :—மன்னு, என் நாவையடக்க முடியாது.- அதற்குப் பேசும் சக்தியிருக்கும்வரை! என் நா பொய் பேசியறியாதது— சூது, அதற்குத் தெரியாத பண்பு - உண்மையைத்தான் உரைக்கும் என் நா - நடந்ததைத்தான் நவிலும் என் நா-தந்திரக்காரன், ஒத்தூதுவன், ஒழுக்கங்கெட்டவள், கொலைகாரன் இவர்களா......

மகேந்திரன் :—நாவை யடக்கடா நாயே! இந்தக் கயவனின் நாக்கை யறுத்துப் பிறகு நாட்டை விட்டோடுங்கள்!

(அவை கலைகிறது.)

## காட்சி 32

**இடம்:** சாலை, **காலம்:** பகல், **இருப்போர்:** சிப்பாய்கள், பொதுமக்கள், குமணன்.

[குமணனைக் கையில் விலங்குகளுடன் சாலை வழியே நடத்தி அழைத்துச் செல்கிறார்கள். ஊரார் வேடிக்கை பார்க்கின்றனர். சிலர் பரிதாபப் படுகின்றனர். ஆனால் எவரும் வாய் திறக்கவில்லை.]

## காட்சி 33 A

## ஒட்டுக் காட்சி

**இடம்:** சிறைச்சாலை, **காலம்:** மாலை.

[சிறையில் வாடுகிறாள் குமுதா.]

குமுதா:—கண்ணாளா, கயவர்கள் எனைக் கவர்ந்து வந்து விட்டார்கள். இருட்டுச் சிறையில் எனைத்தள்ளி வைத்து விட்டார்கள். எனை ஏது செய்வரோ, அறியேன்—அன்பே, தாங்கள் எங்கு எனக்காக அலைகிறீர்களோ? எவரெவரிடம் கேட்டு உளம் வெடிக்கிறீர்களோ?

[இந்தக் கருத்து பாட்டாகவும் இருக்கலாம்.]

## காட்சி 33 B

**இடம்:** கடற்கரை. **காலம்:** மாலை. **இருப்போர்:** குமணன்.

[நாக்கு அறுக்கப்பட்டு உதிரம் ஒழுக ஒழுக, தள்ளாடித் தள்ளாடி நடக்கிறான்.]

## காட்சி 34

**இடம்:** கடற்கரை, **காலம்:** பகல். **இருப்போர்:** குமணன், வியாபாரக் கூட்டம், அதன் தலைவன்.

[குமணன், கடற்கரையில் ஓர் இடத்தில் படுத்துக்கிடக்கிறான்—வியாபாரக் கூட்டம் அவனைப் பார்க்கிறது—தலைவன் அவனை நெருங்குகிறான்.]

வியாபாரக் கூட்டத் தலைவன்:—யாரப்பா நீ? வேகாத வெயிலிலே இப்படிச் சுடுமணலிலே, சுருண்டுகிட்டு கிடக்கறே?

குமணன் :— (மிரள விழிக்கிருன்)

வியாபாரத் தலைவன் :—பேச மாட்டாயா? ஊமையா?

குமணன் :— (ஆமாம் என்பதாகத் தலையசைக்கிருன்.)

வியாபாரத் தலைவன் :—ஐயோ, பாவம் (கூட்டத்தினரைப் பார்த்து) பாவம், இவன் ஒரு ஊமை-நம்மகூட கூட்டிக்கிட்டுப் போகலாமே—நமக்கு எடுபிடி வேலைக்கு ஆள் வேணுமில்லே—சரி, ஏம்பா, எங்களோடு வர்றீயா—தூரதேசம் போருேம், வியாபாரத்துக்கு.

குமணன் :— [சரியென்பதாக ஜாடை காட்டுகிருன்.]

## காட்சி 35

**இடம் :** அந்தரங்க அறை. **காலம் :** இரவு. **இருப்போர் :** குமுதா, மோகினி, முல்லை.

[குமுதா அழுதுகொண்டே யிருக்கிருள்—அப்பொழுது கருப்புத்துணியைப் போர்த்துக்கொண்டு, மோகினி வருகிருள்—அவள் பின்ருல் முல்லை வருகிருள்.]

மோகினி :—அஞ்சாதே, குமுதா. உனக்கு, ஆபத்து விளைவிக்க வரவில்லை—அபயமளிக்க வந்திருக்கிறேன்.

குமுதா :—நீ யாரம்மா?

மோகினி :—நான்தான் மோகினிதேவி.

குமுதா :—தாயே, இது தர்மமா? மன்னன் என்ருல் எதை வேண்டுமானுலும் செய்து விடலாமா? மமதைகொண்டு திரியும் எந்த மன்னனும் மாநிலத்தில் அதிக நாள் வாழ்ந்ததில்லை.

மோகினி :—ஆத்திரம் வேண்டாம் குமுதா—அவருக்காக நான் மன்னிப்பு கேட்கிறேன்.

குமுதா :—மன்னித்து விட்டால் போதுமா, என் மனக் குமுறல் அடங்கிவிடுமா?

மோகினி :—இனி உனக்குக் கவலையில்லை. மோகினி தேவி உனக்காக எதையும் செய்ய முன் வந்திருக்கிருள்.

குமுதா :—தாயே, என் காதலர்.....

மோகினி :—கலங்காதே, குமுதா—கடல் நாட்டு எல்லையில் உனக்காகக் காத்திருப்பதாகச் செய்தியனுப்பியிருக்கிருர்.

58547
MADURAI UNIVERSITY LIBRARY

உன்னை இங்கிருந்து இப்பொழுதே காப்பாற்றி விடுகிறேன். போ, உன் காதலனைக் கண்டு களிப்போடு வாழ்.

குமுதா :—எனக்கா, இனியா வாழ்வு? இல்லை தாயே—நான் ஏன் அழகியாகப் பிறந்தேன்? அழகுதானே இத்தனை ஆபத்துகளுக்கும் வித்தாயிற்று—இந்த அழகு ஒழியட்டும்!

[தன் தலைமயிரைப் பிய்த்துக்கொள்கிருள்—ஆடையைக் கிழித்துக்கொள்கிருள்.]

மோகினி :—அழகு வாழ்வை அளிக்கும்—என்னைப் பார் குமுதா—உன்னைக் கெடுக்க நினைத்த உலகத்தைப் பார்—அஞ்சாதே—சிரி—பிறகு உன்னைக்கண்டு அது பயப்படும்.

[ஒரு சுரங்கவழியைக் காட்டுகிருள்.]

இதோ இந்த வழியாகச் சென்ருல், ஊர் எல்லையிலே கொண்டு போய்விடும்.

(குமுதா அவ்வழியே வெளியேறுகிருள்.]

முல்லை :—அப்பாடா, பீடை ஒழிந்தது!

மோகினி :—மோகினி தேவிக்குப் போட்டி, மலைநாட்டில் ஏற்பட விடுவேனு?

முல்லை :—அது இந்த முல்லைக்குத் தெரியும்-இந்த மூதேவிக்குத் தெரியுமா?

மோகினி :—முல்லை, தொல்லையில் மாட்டிவிடாதே—இது பற்றி எங்கேயும் மூச்சுவிடாதே-அரசருக்குத் தெரிந்து விட்டால் ஆத்திரத்தில் எதையும் செய்வார்-மரகதவல்லியை நினைத்துக் கொண்டால் இன்னமும் என் மனம் நடுங்குகிறது.

(இருவரும் வேகமாக வெளியேறுகின்றனர்.)

## காட்சி 36

**இடம் :** காளிகோயில். **காலம் :** பகல். **இருப்போர் :** பூசாரி பூரணலிங்கம்.

(பூசாரி, காளிக்குப் படைக்கக் கொண்டுவந்த சாதம் முதலியவற்றைக் கோயிலுக்குள் வைத்துவிட்டு, அபிஷேகம் செய்வதற்காக நீர் கொண்டுவர குடத்தை எடுத்துக் கொண்டு, திருக்குளத்தை நோக்கி நடக்கிருன். நீரைச் சுமந்தபடி மீண்டும் திரும்பிவருகிருன். கோயிலிலிருந்து ஒரு நாய் வேகமாக வெளியில் ஓடிவருகிறது. பூசாரி பதறி,

குடத்தை இறக்கி வைத்துவிட்டு, ஓடோடிப்பார்க்கிருன். காளிக்காக படைக்கவந்த பண்டமெல்லாம் காலியாகிக் கிடக்கிறது.)

பூசாரி :— (கையில் கல்லுடன்) அட நாய்க்கு பிறந்த நாயே, என்ன காரியம் செய்துட்டே......

[விரட்டுகிருன்—விரட்டுபவன் அப்படியே யோசிக்கிருன்—கல்லைக் கீழே வீசியெறிகிருன்.]

அட பைரவ மூர்த்தியே! (கன்னத்தில் போட்டுக்கொள்கிருன்.) இனி, பூசாரி பூரணலிங்கத்திற்கு யோகந்தான்–நீ சாப்பிட்டா, என்ன—காளி சாப்பிட்டான்னே சொல்றேன்! காளியாயி! உன் சக்தி இனி, எல்லைக்காடு முழுவதும் பிரசித்தமாகிவிடும்—எல்லாம் என் யுக்திதான்—தாயே, காப்பாத்துடி! ஈஸ்வரி!...

[பூசாரி அவசர அவசரமாக கிராமத்தை நோக்கி நடக்கிருன்.]

## காட்சி 37

**இடம் :** ஊர்ச் சாவடி, **காலம் :** மாலை, **இருப்போர் :** ஊர்மக்கள், பூசாரி பூரணலிங்கம்.

பூசாரி :—நடுக்காட்டு ஆத்தா சக்தி உங்களுக்குத் தெரியாது—பக்தர்கள் படைப்பதையெல்லாம் பரிவோடு சாப்பிடுகிருள்.

ஒருவன் :—சாமி சாப்பிடுதா... பூசாரி கரடி உட்ராரு.

பூசாரி :—எதுவேண்டுமானுலும் படைத்திடு! திரைக்கு வெளியே நில்லு! பின்னுலே பாரு, ஆத்தா சாப்பிட்ர அதிசயத்தை!

மற்ருெருவன் :—இருக்கும், இருக்கும்—நடுக் காட்டு ஆத்தா, அண்ட பகிரண்டத்தையும் ஆட்டிவைக்கிற அகிலாண்டேஸ்வரியாச்சே!

மூன்ருமவன் :—அப்போ, அவ்வளவு சக்திவாய்ந்த அத்தாவுக்கு உண்டிவைத்து, உற்சவம் பண்ண வேண்டியதுதான்.

இன்னுெருவன் :— ஆத்தாளுக்குக் கொடுக்க யாரும் அட்டிசொல்லமாட்டாங்க.

பூசாரி :—அப்ப உண்டி கட்ட உத்திரவாகிவிட்டது.

மூன்ருமவன் :—ஆகா, தாராளமாக.

## காட்சி 38

இடம்: காளிகோயில், **காலம்**: மாலை, இருப்போர்: பக்தர்கள், பூசாரி பூரணலிங்கம்.

[பக்தர்கள் வர வர பெருகுகிறார்கள்—எப்பொழுதும் பம்பை, ஊது குழல் சப்தம் ஓய்வதில்லை—அதனை ஊரார் காளிக்கு செய்யும் கடமையென்று கருதினார்கள்—அது பூசாரியின் பிரத்தியேக ஏற்பாடு. ஒரு நாயைக் காளிச் சிலைக்குப் பின்னால் கட்டிவைத்துள்ளான். அதுதான் வேளைக்கு வைக்கும் படையலை உண்டு வருகிறது. அது தப்பித்தவறி குலைத்துவிட்டால் என்னசெய்வது என்பதற்காக, பம்பை சப்தம் எப்பொழுதும் இருக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்தான். பக்தர்கள் வலம்வருகிறார்கள்—இருட்டுவதற்குள் எல்லோரும் போய்விடுகிறார்கள்.]

## காட்சி 39

இடம்: காலை, **காலம்**: பகல், இருப்போர்: குமுதா, வழிபோக்கர்.

(குமுதா, தள்ளாடித் தள்ளாடி நடந்து வருகிறாள்—வழியில் வருவோர், போவோரையெல்லாம் நிறுத்தி நிறுத்தி ஏதேதோ கேட்கிறாள்.)

குமுதா :—ஐயா, ஐயா......

வழிப்போக்கன் :—என்னம்மா?

குமுதா :—இங்கு ஒரு படம்...இல்லை, இல்லை, அழகான முகம். அகன்ற கண்கள், பரந்த நெற்றி, அரும்புமீசை உள்ள வாலிபர்......

வழிபோக்கன் ;—படமா? பட அங்காடியில் போய்க் கேள்—அது அடுத்த வீதியில் இருக்கம்மா.

(அவன் போக எத்தனிக்கின்றான்.)

குமுதா :—படமெழுதுபவர் ஐயா அவர்! அவரைப் பார்த்ததுண்டா?

வழிப்போக்கன் :—படம் என்றாய் முதலில்-இப்பொழுது படமெழுதுபவன் என்கிறாய்-எனக்கு எதுவும் புரியவில்லையம்மா-வேறு யாரையாவது கேள்.

[மிடுக்கான உடையில் ஒரு வாலிபன் வருகிறான்.]

குமுதா :—என்னங்க. இந்தப் பக்கத்தில் யாரேனும் ஓவியர்......

[அவளைப் பார்த்து விகாரமாக சிரிக்கிறான்.]

இன்னொருவன் :—ஓவியர் எதுக்கு-உன்னைப் படம் எழுதவா?

குமுதா :—இல்லிங்க, ஓவியம் எழுதுபவர் அவர்! அவரைத் தேடியலைகிறேன்.

இன்னொருவன் :—(வெறிச் சிரிப்புச் சிரித்தபடி) ஓவியம் எழுதுபவனை ஏன் தேடியலைகிறாய்? நான் ஓவியர் எழுதும் படங்களுக்கு சட்டம் மாட்டுபவன்! ஆமாம், சட்டம் போடுவது மட்டும் சாமான்யமா?

குமுதா :—சீ, துடுக்குப் பேச்சு வேண்டாமய்யா.

[அவன் பயந்தபடி ஓடுகிறான்.]

## காட்சி 40

இடம் : மகேந்திரன் மாளிகை, **காலம் :** பகல், இருப்போர் மகேந்திரன், குலசேகரன்.

குலசேகரன் :—பல நாடு சுற்றிவிட்டு, பலதேவர் திரும்பி வருவதாகத் தகவல் வந்துள்ளது, மன்னவரே.

மகேந்திரன் :—தளபதி பலதேவர், மலைநாட்டுக்கு எவ்வளவோ வெற்றிகளைத் தேடித் தந்தவர்-மலைநாட்டின் மணிமுடி, இன்று என் தலையிலே ஒளிவிடுகிறது என்றால் அது பலதேவரின் வாளின் வலிமையின் விளைவு. அவர் போரில் மட்டுமல்ல, அரசாங்க நிர்வாகத்திலும் அசகாய சூரர்-அவருக்குத்தக்க வரவேற்பு தரவேண்டும்.

குலசேகரன் :—நானும், பிரமாத ஏற்பாடுகள் செய்ய உத்திரவிட்டுவிட்டுத்தான் வந்திருக்கிறேன்.

மகேந்திரன் :—மனதறிந்து, காரியமாற்றுவதிலே, குலசேகருக்கு நிகர் குலசேகரரே.

## காட்சி 41

### நிழல் காட்சி

இடம் : அரசாங்க மைதானம், **காலம் :** மாலை, இருப்போர் : பலதேவர், வீரர், அரசகுடும்பம் மந்திரி பிரதானியர், ராஜகுரு.

முதலில் தேரிலமர்ந்தபடி, பலதேவர் தோற்றம்-அரசர், மோகினி, குலசேகரன், முதலானோர் வரவேற்பு-பிறகு அணியணியாக வீரர் பவனி-மேள சப்தம்.

## காட்சி 42

**இடம்:** மகேந்திரன் மாளிகை, **காலம்:** பகல்: **இருப்போர்:** மகேந்திரன். குலசேகரன்.

குலசேகரன் :—மன்னரே, கடல்நாட்டுக் கருணுகரன் அழைப்பை ஏற்பது நல்லது என்றே கருதுகிறேன்.

மகேந்திரன் :—ஆமாம், தெற்கேயுள்ள எட்டுநாட்டரசர்களேயும் கூட்டி, அமைதி அவையென்று ஒன்று அமைக்கப் போகிருனும்-எதுவோ செய்யட்டும், நமக்கும் தூரபயணம் போகவேண்டும் என்ற விருப்பம் தலையெடுத்துவிட்டது.

குலசேகரன் :—ஆகா, அப்படியானுல் கடல் நாடு புறப்பட ஏற்பாடுகளே இன்றே செய்கிறேன்.

மகேந்திரன் :—மோகினியும் உடன் வருகிருள்-குலசேகரா, நீரும் என்னுடன் வாரும்.

குலசேகரன் :—அப்படியே மன்னவரே.

[மன்னர் கையைத் தட்டுகிருர்.]

மகேந்திரன் :—யாரங்கே ?

[காவலாளி வந்து கை கட்டி நிற்கிருன்.]

மகேந்திரன் ;—தளபதி பலதேவரை உடனே அழைத்து வா.

(காவலாளி ஓடுகிருன். சிறிது நேரத்தில் பல தேவர் வருகிருர்.)

பலதேவர் :—வணக்கம் கணக்கில, மன்னவா !

மகேந்திரன் :—தளபதியாரே, தங்கள் வாள் வலிமைகாட்ட தருணங்கள் பல வந்துபோய்விட்டன. இப்பொழுது, பல நாடு சுற்றிப்பெற்று வந்த பரந்த உலகறிவு பயன்பட ஒரு சந்தர்ப்பத்தை யளிக்க இருக்கிறேன்.

பலதேவர் :—மெத்த மகிழ்ச்சி, மலேமன்னவா-கூறுங்கள்.

மகேந்திரன் :—நான் கடல் நாடு செல்லப்போகிறேன்-தெரியுமா ?

பலதேவர் :—தெரியும்-நல்ல காரியம்-நாடு பல சுற்றி நான் கண்டு வந்த திட்டம் அங்குதான் நிறைவேறப்போகிறது காண உளம் பூரித்துப்போனேன். போரிடுங் குணம் போய், அமைதியோடு, அன்பின் ஆட்சிதான் இனி எதிர்காலத்திற்குத் தேவையென்பதை நான் உணர்கிறேன்-நம்புகிறேன்-அதனே நிலேநாட்டப் பணியாற்றவே முடிவு செய்துள்ளேன்.

மகேந்திரன் :—மகிழ்கிறேன்-நான் கடல்நாடு சென்று திரும்பும்வரை, மலைநாட்டின் நிர்வாகம் உமது தலைமையில் நடைபெறும்.

பலதேவர் :—பெரும் பொறுப்பு, மன்னவா.

மகேந்திரன் :—உமக்கு, இது மிகவும் ஏற்ற பொறுப்பு என்பதால்தான் அளிக்கிறேன்.

பலதேவர் :—சரி, தங்கள் விருப்பம்போல் ஏற்கிறேன்.

[பல தேவர் வெளியேறுகிறார்.]

## காட்சி 43

இடம் : அரசாங்கப் பணிமனை. காலம் : பகல். இருப்போர் : அரசாங்கப் பணியாள், குமுதா.

குமுதா :—மலைநாட்டாரைய்யா, அவர்-ஓவியந் தீட்டுவதில் ஒப்பற்றவரய்யா-அவரை...

அரசாங்கப் பணியாள் :—மன்னர்கள்தான். கூட இருக்கும் பேரவைக்கு வருகிறார்கள்—கலைஞர்கள் யாரும் வரவில்லையம்மா.

குமுதா :—பேரவையா ?

பணியாள் :—ஆம், அம்மா, எட்டு நாட்டு மன்னர்களும் கூடுகிறார்களே—இங்கு — இந்தக் கடல் நாட்டுக் காவலர் கருணாகரர் ஏற்பாடம்மா.

குமுதா :—மலைநாட்டு மன்னர் வருகிறாரோ ...?

பணியாள் :—ஆகா, குடும்பத்தோடு.

குமுதா :—ஐயோ, இங்கும் ஆபத்தா ? ஐயா, ஓவியர் யாருமே... ?

பணியாள் :—இன்னும் ஒரு கல் தொலைவு போனால், மலைநாட்டு எல்லைக் கிராமம்—நடுக்காடு—அங்கு விசாரியம்மா.

[குமுதா நடக்கிறாள்]

## காட்சி 44

இடம் : சாலை. காலம் : மாலை. இருப்போர் : பூசாரி பூரணலிங்கம், குமுதா.

குமுதா :—ஐயா, ஓவியச்சாலை இங்கு ஏதாவது உண்டா?

பூசாரி:—ஓவியச்சாலையா-அப்படியொண்ணும் இருக்கிறதா தெரியல்லேம்மா—ஒப்பனக்காரச் சாவடின்னு ஒன்னிருக்கு, அங்கு போனால் தங்கலாம்.

குமுதா :—ஓவியச்சாலை யென்றால்...

பூசாரி :—எனக்கா தெரியாது—சத்திரம், சாவடி இது களுக்கு சரியாய் படிச்சவங்க சொல்கிற பெயர்.

குமுதா :—அதுதானில்லை—அது படங்கள் எழுதுமிடம்.

பூசாரி :—இதை அப்பவே சொல்லியிருக்கப்படாதா-படம் எழுதுகிற இடம்—இருக்கு, இருக்கு ..

குமுதா :—அது எங்கே ?

பூசாரி :—இதே வீதியிலே, கோடியிலே, ஆதுலசாலை யொன்றிருக்கு-அதுக்குப் பக்கத்திலேதான் நீங்க கேக்கிற சாலை.

## காட்சி 45

இடம் : படந் தீட்டுமிடம். காலம் : இரவு. இருப்போர் : ஓவியக் கிழவர், குமுதா.

[குமுதா, போய் நின்றதும், ஓவியக் கிழவர் பல ஓவி யங்களை எடுத்துக் காட்டுகிறார். எல்லாம் ஆண்டவன்மார் களின் உருவங்களாகவே இருக்கின்றன. அவைகளைப் பார்த்ததும் அவளுக்கு ஆத்திரம், ஆத்திரமாக இருக்கிறது,]

குமுதா :—தாத்தா ! இந்தப் படங்களைத் தீட்டாதே! மக்கள் மத்தியிலே நீட்டாதே !

கிழவர் :—ஏம்மா, நீ யார் ?

குமுதா :—நான் யாரா ? தாத்தா, உனக்கு என்னைப் போல பேத்தி, பேரன் இருக்கிறார்களா ?

கிழவர் :—ஓ..,...

குமுதா :—அப்படியானால், இந்த மாதிரி ஆண்டவன் படங்களைத் தீட்டாதே.

கிழவர் :—தீட்டினால்.........?

குமுதா :—என்னைப் போலத் தெருவில் நிற்க வைத்து விடும்.

கிழவர் :—ஏம்மா, உனக்குப் பைத்தியமோ?

குமுதா :—பைத்தியமில்லை—வைத்தியம் செய்ய வந்திருக்கிறேன்—நோய் பிடித்திருக்கும் உன் ஓவியக் கலைக்குத் தக்க மருந்து தர வந்திருக்கிறேன்.

கிழவர் :—ஐயயையோ, பைத்தியக்காரி, ஓடிவாருங்கள்.

[அக்கம்பக்கத்திலிருந்து ஆட்கள் ஓடி வருகிறார்கள். படங்களை உடைத்தெறிந்து ஓடுகிறாள் குமுதா-மற்றவர்கள் துரத்துகிறார்கள்-அவள் ஓடும் திசையைப் பார்த்து துரத்திய கூட்டம் மலைத்து நிற்கிறது.]

கூட்டத்தில் ஒருவன் :—ஏ, ஏ, அங்கே போகாதே! காளி கோயில்! அர்த்த ராத்திரியில் அங்கே போகாதே!

[குமுதா ஓடி விடுகிறாள்.)

கூட்டத்தில் வேறொருவன் :—காளி யறைஞ்சு பாவிமகள் சாகப் போகிறாள்.

[கூட்டம் கலைந்து போகிறது.]

## காட்சி 46

**இடம் :** காளி கோயில். **காலம் :** பகல். **இருப்போர் :** பூசாரி, பூரணலிங்கம், குமுதா.

[பூசாரி பூரணலிங்கம், படைப்பதற்காகக் கொண்டுவந்த உணவுப் பொருளை அப்படியே, பாத்திரத்தில் வைத்துவிட்டு, குடமெடுத்துக்கொண்டு வெளியில் செல்கிறான். குமுதா, இரவு அந்தக் கோயிலில் புகுந்தவள், நாயை அவிழ்த்து விட்டுவிட்டாள். இலையை விரித்து, ஒழுங்காகப் பறிமாறி சாப்பிட்டு விடுகிறாள். பிறகு, சிலையின் பின்னால் உள்ள பாழ் மண்டபத்தில் ஒளிந்து கொள்கிறாள். பூசாரி திரும்புகிறான்—எச்சிலையைப் பார்க்கிறான், மலைத்து நிற்கிறான்-குமுதா நாய் சங்கிலியை சிலைக்கு மேலாகத் தூக்கி யெறிகிறாள்.]

பூசாரி :—(திடீரென்று காளி சிலையின் முன்னால் விழுந்து) தப்புடியம்மா, தப்புடி.தப்பு,தப்பு-தப்பேதான்.தாயே-மன்னித்து விடு. காளியாயி தாயே, இதென்னடி ஆயி-ஊர் ஜனங்களுக்கு நான் சொல்லி வந்தது உண்மையேயாய்விட்டது-நாய் சாப்பிடுவதை, தாயே, நீயே சாப்பிடுவதாகச் சொல்லி வந்தேன்—இன்னைக்கு இலை போட்டு இலட்சணமாக, தாயே சாப்பிட்டு

விட்டயே-? நான் பிள்ளை குட்டிக்காரன்-தப்பு செய்திட்டான்னு ஏதேனும் தாறுமாரு செய்துடாதே! இனி ஆயுள் உள்ளவரைக்கும் எப்படியாவது எங்கிருந்தாவது, வேளா வேளைக்கு அன்னம் படைக்கிறேன். என்னை மன்னிச்சுப்புடு.

[மீண்டும் பூசாரி விழுந்து பணிகிருன்.]

தாயே, ஊருக்குள் இப்பொழுதே ஓடுகிறேன்—ஒவ்வொருவனிடம் சொல்கிறேன். தாயே, உன் அருளே, அருள்!

குமுதா :—பக்தா, பயப்படாதே! உன் பக்திக்கு மெச்சினேம்! இனி பகல் உணவு பன்னிரண்டு மணிக்கே வரட்டும்!

பூசாரி :—ஆகட்டும் தாயே, அப்படியே கொண்டு வருகிறேன்.

குமுதா :—பக்தா! வடை, பாயாசம் வைத்துப் படைப்பதில்லையோ?

பூசாரி :—வடையா. தாயே?

குமுதா :—ஆம், பக்தா, ஆனையடி வடை!

பூசாரி :—பாயாசமும்...?

குமுதா :—ஓ, மீன் கண் பாயாசம்!

பூசாரி :—அப்புறம்?

குமுதா :—அற்புதமான அதிரசம்

பூசாரி :—இன்னும்?

குமுதா :—நல்ல தேன் குழல்!

பூசாரி :—இவை போதுமா?

குமுதா :—நறு நெய் ஒரு கிண்ணம்!

பூசாரி :—ஆயி, தாயே, நான் செய்த பூஜாபலன் வீண் போகல்லே-பராசக்தி என்னிடம் பட்டியல் போட்டு படையல் கேட்கிரு-இந்தப் பாக்கியம் உலகில் யாருக்குக் கிடைக்கும்? இப்பொழுதே ஓடிப்போய் ஊராரிடம் கூறுகிறேன் – ஓடோடி வருகிறேன்.

குமுதா :—பக்தா, பசிபொறுக்க மாட்டாள் உன் தேவி.

(பூசாரி ஓடுகிருன்.)

குமுதா :—(வெளியில் வந்து) ஊரை ஏமாத்திவந்தான், இந்த உலுத்தன்—இப்பொழுது அவனை ஏமாற்றி, நான் ஆனந்தங் காண்கிறேன்.

(குமுதா வெறிச் சிரிப்பு சிரிக்கிருள்.)

இடம் : விருந்து மண்டபம். காலம் : மாலே. இருப்போர்: விருந்துக்கு வந்திருந்த மன்னர்கள், குலசேகரன், மகேந்திரன், மோகினி தேவி, பிரதானிகள்.

[மன்னர் பலர் அமர்ந்திருக்கின்றனர். மலேநாட்டு மன்னர், மோகினிதேவி, குலசேகரன் ஆகியோர் நுழைகின்றனர்.]

கருணுகரர் :—மலேநாட்டு மன்னவரே, உம் வரவு நல் வரவாகுக.

மற்ருெரு மன்னன் :—தங்கள் வரவு கண்டு, இவ் விருந்து மண்டபம் மகிழ்ச்சியால், அலேகடல்போல் பொங்கி வழிகிறது.

பிறிதொரு மன்னன் :—நீண்ட நாட்களாக நம்மிடையே மூண்டு கிடந்த பகைகள் எல்லாம் மாண்டு போய், எங்கும் அமைதி ஆண்டிட வழிவகுக்கத் தங்கள் வரவு மேலான உதவியாகும்.

இன்னெரு மன்னன் :—நம்மிடையே பகையேது? — இடையிடையே மனப்புகை—! அது என்றுமே பெருந் தீயான தில்லேயே !

கருணுகரர் :— மகேந்திரரே, அமருங்கள் - கடல் நாடு இயற்கை அன்னேயின் அழகுத் தொட்டில் - அதில் கொஞ்சி விளேயாடும் இயற்கை யெழிலெனும் குழவியைக் கண்டு கொஞ்சி மகிழுங்கள்—தாங்களும் மற்ற மன்னர்களேப்போல் பல நாள் தங்கி, என்னே மகிழ்விக்க வேண்டும்.

மற்ருெரு மன்னன் :—தாங்கள் எங்களேப்போல ஒரு திங்களேனும் கடல் நாட்டு விருந்தினராகத் தங்கி எங்கள் உள்ளம் பூரிக்கச் செய்ய வேண்டும்.

மகேந்திரன் :—தங்கள் வரவேற்புற்கும்-அன்புரைகளுக்கும் நன்றி.

பிறிதொரு மன்னன் :—விருந்து ஏற்பாடுகள் வேளேக்கொரு விதமாய், மிக அற்புதமாய்ச் செய்திருக்கிருர் கருணுகரர்.

இன்னெரு மன்னன் :—கேளிக்கைகளும் அப்படியே – ஒரு நாள் நாடகம், மற்ருெரு நாள் நாட்டியம், இப்படி மாறி, மாறி... ஆகவே எங்களுடன் தாங்களும் தங்கி...

மற்ருெரு மன்னன் :—அவர்தான் குடும்பத்துடன் வந்துளாரே !

கருணாகரர் :—ஆம், மன்னிக்க வேண்டும்-அரசியாரே! என் அன்பிலெழுந்த வணக்கமும், வரவேற்பும் உரித்தாக...

[கருணாகரர் மோகினியை உற்றுப் பார்க்கிறார்-கோப மடைகிறார்.]

இவள்......

மகேந்திரன் :—(கோபமாக) என் மனைவி-மலை நாட்டு மகாராணி-மோகினிதேவி.

கருணாகரர் :—மலை மன்னவா, தெரிகிறது, நன்றாகத் தெரிகிறது-இத்தனை மன்னர்களையும் அவமதிக்க எத்தனை நாட்களாகக் காத்திருந்தீர்-மன்னர் நெறி கெடுத்தவா!

மகேந்திரன் :—கருணாகரா, மலை நாட்டு மன்னனின் கோபத்தை அறிய மாட்டாயா!

கருணாகரர் :—இந்த மன்னர் அவையின் மதிப்பு உனக்குத் தெரியாதா?

மகேந்திரன் :—மோகினி தேவியினை, இந்த மன்னர்களல்ல; இவர்களுக்கு மேலுள்ள மகேசனே பழித்தாலும் விட மாட்டேன்!

கருணாகரர் :—இவள், உன் பட்டத்தரசியோ?

மகேந்திரன் :—மரியாதை வேண்டும்-எச்சரிக்கிறேன்.

கருணாகரர் :—கடல் நாட்டுக் கணிகை-மலை நாட்டு ராணி!

மகேந்திரன் :—வார்த்தைகளை நெருப்பாக்க வேண்டாம்!

கருணாகரர் :—கடல் நாட்டில் ஆட்டக் கலை பெயரால், அலங்கோல வாழ்வு நடத்திய இவளை, ஒழுக்கத்தில் வழுக்கினாள் என்ற குற்றச்சாட்டால் நாட்டை விட்டே விரட்டினோம். அவளை இன்று நீ பட்டத்தரசி யென்று எம்மைச் சமமாக ஏற்கச் செய்கிறாய்!

மகேந்திரன் :—கருணாகரா, கதை பேசுகிறாய் - கட்டுக் கடங்காத கோபம் வருகிறது-அடக்கிக் கொள்கிறேன்.

கருணாகரர் :—அட மதிகெட்டு, மானங் கெட்டுப்போன மலை நாட்டானே, இந்த வேசியை இழுத்துக்கொண்டு வெளியேறு-இனி மன்னர்கள் முகத்தில் விழியாதே-இத்தகைய பேர் கெட்டு, கூறுகெட்டுப்போன மாதரசிகளையே கண்டு மகிழ்-கூடிப் பேசு-போ. போ!

[மன்னர்கள் எல்லோரும் திகைத்து நிற்கிறார்கள். குலசேகரன் துடிக்கிறான்-மோகினி, கண்களில் நீர் கலங்கி நிற்கிறாள்.]

குலசேகரன் :—கடல் நாட்டுக் காவலா-உம் நாட்டின் கதியை விரைவில் கண்டு நீர் கண்ணீர் உகுக்கப் போகிறீர் - மன்னரே வாரும் - மகாராணியாரே - இப்பொழுதே திரும்பிடுவோம், இவர்களிடம் நாம் பேசுவானேன் - மலைநாட்டு வாளும், வேலும் ஈட்டியும் வந்து பேசட்டும் !

## காட்சி 48

இடம் :—சாலை. காலம் :—பகல். இருப்போர் :—குமணன் நல்லப்பன், ஓவியப்படங்களைச் சுமந்துவந்த கூலியாட்கள்.

[குமணனும், நல்லப்பனும் நடந்து வருகிறார்கள். குமணன் மாறுவடிவத்தில் இருக்கிறான். வெளிநாடு சென்ற அவன், தனக்கு ஒரு புதிய நண்பனைத் தேடிக்கொண்டு வருகிறான்.]

நல்லப்பன் :—நண்பரே, நாம் மலைநாட்டு எல்லைக் கிராமத்தில் நுழைகிறோம். இங்கேயே முகாமிடுவதுதான் நல்லது.

குமணன் :—(தலையசைக்கிறான்)

நல்லப்பன் :—(படங்களைச் சுமந்து நிற்கும் கூலிகளைப் பார்த்து) நீங்கள், கோட்டை மதிலோரம் இவைகளை இறக்கி வைத்து. கூடாரம் அடிக்கத் துவங்குங்கள். நாங்கள் மிக விரைவில் வந்து சேர்கிறோம்.

ஆட்கள் :—அப்படியே செய்கிறோங்க.

[ஆட்கள் திரும்பிச் செல்கின்றனர்.]

## காட்சி 49

இடம் :—சாலை. காலம் :—மாலை. இருப்போர் :—பூசாரி பூரணலிங்கம், ஊர் பொதுமக்கள், குமணன், நல்லப்பன்.

[பூசாரி பூரணலிங்கம், பொதுமக்களிடம், நடுக்காட்டு காளியின் மகத்துவத்தை விவரிக்கிறான்.]

பூசாரி :—அண்ணேன், நடுக்காட்டு ஆத்தா சக்தியை நான் சொன்னு நம்பமாட்டீங்க, நேரில் வந்து பாருங்க-ஆத்தா சாப்பிடுவது மட்டுமல்ல, பக்தர்கள் கிட்டே பேசரு !...

ஒருவன் :—அவள் கண்கண்ட தெய்வமாச்சே—ஏன் பேச மாட்டா ?

மற்ருெருவன் :—ஆத்தா சக்தி அமோகமாக வளர்ந்து போச்சு.

[இப்பொழுது நல்லப்பன் குறுக்கிடுகிருன்.]

நல்லப்பன் :—எந்த ஆத்தாண்ணேன் ?

மூன்ருமவன் :—நடுக்காட்டு காளியாத்தா.

நல்லப்பன் :—அவளுக்கு என்ன வந்திடுச்சு ?

நான்காமவன் :—என்னடா இவன் திமுரு பேசரான்! ஆத்தாள் பேசரா—பிரசாதங்கள் சாப்பிட்ரா.

நல்லப்பன் :—வீண் கதை !

பூசாரி :—கதையா? கதையின்னு நீ காட்டிவிட்டா இந்த காதை அறுத்துக்கிறேன்.

நல்லப்பன் :—காதை நீ என்ன அறுக்கிறது? ஊர்மக்கள் உன் காது, மூக்கு, நாக்கு எல்லாத்தையும் சேர்த்து அறுத்திடு வாங்களே—ஆமாம், அவ்வளவுதான் நான் சொல்லுவேன்.

பூசாரி :—டேய், நீ என்ன ஊர் ?

நல்லப்பன் :—மரியாதையாய் பேசய்யா.

பூசாரி :—மகராசாவுக்கு மரியாதை காட்டுடா—உன் நாடோடி மகராசா, உங்க ஊர் எதுங்க, பேர் என்னங்க?

நல்லப்பன் :—அவைகளை நீங்க தெரிஞ்சு என்ன செய்யப் போறீங்க?

பூசாரி :—சும்மா சொல்லுங்க, கேட்போம்.

நல்லப்பன் :—என் ஊர் யவனம்—பெயர் நல்லப்பன்.

பூசாரி :—நல்லப்பா, சும்மா இங்கிருந்து பிடியப்பா ஓட்டம், இல்லாவிட்டால், உண்மையாய் சொல்றேண்டாப்பா, உன் உடம்பெல்லாம் வீக்கம்—ஓடிப்போடாப்பா.

நல்லப்பன் :—வார்த்தையைத் தடிக்கவிடாதே.

பூசாரி :—உதைபட்டுச் சாகாமல் ஓடிப்போயிடு.

(எல்லோரும் அடிக்கப் போகிருர்கள்—குமணன் ஓடி வந்து கைகூப்பி வணங்கி நிறுத்துகிருன்.)

நான்காமவன் :—பெரிய மனிசனுட்டம், சமாதானத்திற்கு வந்துட்டே—இந்தப் பய காளியாத்தாவுக்குச் சக்தியில்லென்னு சொல்ருன். அவ சாபபிட்ரதை இந்த ஊர்மக்கள் எல்லோரும் பார்த்திருக்கிருேம். அந்தப் பேசுந் தெய்வத்தை இந்தப் பயல் பழிக்கிருன்.

நல்லப்பன் :—அது இல்லையின்னு நிரூபித்து விட்டால்......

நான்காமவன் :—நாங்க அடிமையாயிட்ரோம்.

நல்லப்பன் :—அடிமையாக வேண்டாம்—இம்மாதிரி மூட எண்ணங்களுக்கு அடிமையாகாமல் இருந்தால் போதும்—ஆமாம், அவ்வளவுதான் நான் சொல்வேன்.

(குமணன், தான் நிரூபிப்பதாக சாடை காட்டுகிறான். ஊர்மக்கள் கலைகின்றனர்.)

## காட்சி 50

இடம்; காளிகோயில். காலம்: இரவு. இருப்போர்: குமுதா, குமணன்.

[காளி சிலைக்கு முன்னால் இலையில் அன்னம் படைக்கப் பட்டிருக்கிறது. குமுதா வெளியில் வருகிறாள்—தூரத்தில் மரத்திற்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருக்கிறான் குமணன். குமுதா திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கிறாள். குமணன் ஓடிப் போய் குமுதாவைப் பிடிக்கப் பார்க்கிறான். அவள் கோயிலுள் நுழைந்து மறைந்துகொள்ள பார்க்கிறாள். அவளை விடவில்லை. பிடித்து விடுகிறான். அவள் உடல் நடுங்குகிறது.]

குமுதா :—ஐயா, என்னை விட்டு விடுங்கள்.

குமணன் :— ...........

குமுதா :—ஐயா, கோயிலொன்றினாலே என் வாழ்வு அழிந்தது—இந்தக் கோயிலினாலே இன்று உயிர் வாழ்கிறேன்.

குமணன் :—(கண்களிலிருந்து நீர் வழிகிறது.)

குமுதா :—கெட்ட மனங் கொண்டவரிடமிருந்து, இள மங்கை நான் தப்பிவாழ இந்தத் தந்திரம் கையாண்டேன்—தவறென்றாலும் மன்னித்துவிடும்—என்னை விட்டுவிடும் ஐயா... இதென்ன நீர் அழுகிறீர்—ஏன் அழுகிறீர்-என் பரிதாபத்தைப் பார்த்தா கண்ணீர் வடிக்கிறீர்—வாழ்வு பாழான என்னைப் போன்ற சகோதரி யாரேனும் உமக்கு உண்டோ......ஐயோ, அழவேண்டாம்.

குமணன் :—(அவள் தலைமயிரைக் கோதுகிறான்)

குமுதா :—(அவன் கரத்தைத் தள்ளிவிட்டு) இதென்ன அழுகிறீர், என்னை அணைக்கப் பார்க்கிறீர், வேண்டாம்—வேதனைப்பட்ட ஒரு பெண்ணை மேலும் வாதனைக் குள்ளாக் காதீர்.

குமணன் :—(கரங்களால் தன்னைத் தெரியவில்லையா என்கிறான்)

குமுதா :—நீர் யார்...........?

குமணன் :—(ஒட்டு மீசையை எடுக்கிறான்)

குமுதா :—ஆ! தாங்களா?

குமணன் :—(கண்ணீர் சொரிகிறான்)

குமுதா :—உங்கள் ஆசைக் குமுதாதான் நான்-பேசுங்கள் காதலா.

குமணன் :—(கண்ணீரைத் துடைக்கிறான்)

குமுதா :—கண்ணாளா!

குமணன் :— ...........

குமுதா :—இனிப் பிரியோம், இது உண்மை.

குமணன் — ...........

குமுதா —காலவெள்ளத்திலே மூழ்கி மடிந்து விடுவோம் என்றே எண்ணி விட்டேன், கண்ணாளா.

குமணன் :— ...........

குமுதா :—காலவெள்ளத்திலும், காதல் உள்ளம் எதிர் நீச்சல் அடிக்கும் என்பது தங்களுக்குத் தெரியாதா?

குமணன் :— ...........

குமுதா :—அன்பரே, எதிர் நீச்சல்காரர்கள் நாம்!

குமணன் :— ...........

குமுதா :—இங்கு நான்வந்ததே பெரியகதை கண்ணாளா... அனுமன் ஆலயத்திலிருந்து அரசன் ஆட்கள் தூக்கிச் சென்றார்கள். அங்கிருந்து நல்ல வேளையாக மோகினி என்னைக் காப்பாற்றிவிட்டாள். பிறகு எங்கெங்கெல்லாமோ தங்களைத் தேடி யலேந்தேன்—படாதபாடு பட்டேன்—படமெழுது மிடங்களிலெல்லாம் தங்களைப்பற்றி விசாரித்தேன்—படமெழுது மிடமொன்றில் என்ன செய்தேன் தெரியுமோ? ஆத்திரத்தில் எல்லா வற்றையும் கிழித்தெறிந்து விட்டேன். அவனை, கடவுள் படமெழுதி காலத்தை வீணாக்காதே என்று அதட்டினேன். அவன் பைத்தியம், பைத்தியம் என்று கூவி ஊரைக்கூட்டினான். அவர்கள் விரட்டினார்கள். ஓடோடிவந்து, இங்கு ஒளிந்துகொண்டேன். காளியின் துணையினாலே காலங்கடத்த வேண்டியவளானேன்.

குமணன் :—(அவளை வெறிக்க வெறிக்கப் பார்க்கிறான்.)

குமுதா :—காளியின் துணை, பக்தர்களுக்குக் கிடைப்ப தில்லையே, உனக்கு எப்படிக் கிடைத்தது என்று பார்க்கிறீர் களா? காளிக்கு பக்தையல்ல நான்—காளியே நான் தான்—பக்குவமான பூசாரி கிடைத்தான்—அறு சுவையோடு அன்னம் படைக்கிருன்.

குமணன் :—(மேலும் மிரளமிரள விழிக்கிருன்.)

குமுதா :—மகிழ்ச்சிப் பெருக்கு, கண்களில் வழிகிறது—அது தங்கள் வாயையும் அடைந்து விட்டதா? பேசமாட்டீர் களா? உங்களின் கரும்புக் குரல் கேட்டு, எவ்வளவு காலமாகி விட்டது—பேசுங்கள்!

குமணன் :—(அவன் வாயைத் திறக்கிருன்)

குமுதா :—(துண்டித்த நாவைக்கண்டு) ஐயோ! நாக்கைத் துண்டித்து விட்டார்களா?

(அவள் முகத்தில் அறைந்து கொள்கிருள்—அழுகிருள் பிறகு முகத்தை உயர்த்துகிருள்—அவன் முகத்தை நிமிர்த்து கிருள்.)

கண்ணுளா, நாக்கிழந்தாலென்ன—என்னை
இழக்க வில்லையே—நான் நாக்காவேன்!

## காட்சி 51

இடம் : ஓவியக் காட்சியிடம். காலம் : பகல். இருப்போர் : குமணன் குமுதா.

[குமுதா, ஒரு படப் புத்தகத்தைப் பிரித்துப் பார்த்துக் கொண்டிருக்கிருள்.)

குமுதா :—நாதா, தாங்கள் என்னை விட்டுப் பிரிந்ததி லிருந்து, இன்றுவரை நடந்த நிகழ்ச்சிகளைப் படங்களாகவே எழுதிவிட்டீர்களே! இதோ, கடற்கரை...... வியாபாரிகளோடு பேசுகிறீர்கள்.....கப்பல் நடுக்கடலில் மிதக்கிறது...கிரேக்கம், பாரசீகம்...ஈழம்......கடாரம்......அப்பப்பா, இத்தனை நாடு களுக்கெல்லாம் போனீர்களா......அங்கு கண்ட காட்சிகள்... பல சிற்பங்கள், சித்திரங்கள்......இதென்ன மாஜிக் கடவுள் களா......இவைகளை நாம் நம் நாட்டு மக்களுக்குக் காட்டு வோம். ஏன் இவைகளைப் பெரிய அளவில் எழுதித் தாருங் கள்—நீங்கள் பேசவேண்டியதை நான் பேசுகிறேன்...... கண்ணுளா......

(குமணன் ஆர்வத்தோடு அவள் முகத்தை உற்றுப் பார்க்கிருன்).

## காட்சி 52

இடம்: சாலை. காலம்: பகல், இருப்போர்: மலைநாட்டு மக்கள்.

ஒருவன்:—ஓவியக் காட்சிக்குப் போவோமா?

மற்றவன்:—அதை நடத்தற ஆள் சிங்கநதாண்டா-சொன்னான்-சொன்னபடி செய்தான் - அது பாரு, அவன் மனைவி யாகவே போய்விட்டது!

ஒருவன்:—குலைக்கிற நாய் கடிக்காது என்பார்களே-அது சரியாய்த்தானிருக்கு-வாயைத் திறப்பதில்லை-ஆனால் செய்கிற காரியம் அவ்வளவு அபாரம்!

மற்றவன்:—ஆமாண்ணேன், அந்த ஆள் பேசி, நான் பார்த்ததே இல்லை

ஒருவன்:—அவர் ஏண்டா பேசணும்? அவர் எழுதி வைத்திருக்கும் படந்தான் பேசுதே!

மற்றவன்:—சரி, வாண்ணேன் போகலாம்.

## காட்சி 53

இடம்: ஓவியக் காட்சி இடம். காலம்: மாலை. இருப்போர்: மலைநாட்டார், நல்லப்பன்.

(நல்லப்பன், மக்களுக்குப் படங்களைக் காட்டி வருகிறான். கிரேக்க, ரோம, திபேத்திய, சைன, ஜப்பானியக் கடவுள்களை முதலில் காட்டி விளக்குகிறான்.)

நல்லப்பன்:—இவைகள் இன்று கடவுள்களாக இல்லை, மாஜிகளாகி விட்டனர்! ஆனால், இதோ பாருங்கள்.

[நல்லப்பன் ஒரு படத்தைக் காட்டுகிறான். அவனைச் சுற்றிப் பல உருவங்கள் இருக்கின்றன.]

நல்லப்பன்:—இவைகள் தாம் நாம் வணங்கும் கடவுள்கள்!

ஒருவன்:—காக்கை கடவுளா?

நல்லப்பன்:—ஆமாம், சனீஸ்வர பகவான் வாகனமில்லையா?

மற்றவன்:—கருடனும் கடவுளா?

ஒருவன்:— இல்லையா? மகாவிஷ்ணு விமானமில்லையா, அது.

மூன்றுமவன்:—கோழி கூடவா?

நல்லப்பன் :—சேவல் கொடியோனுயிற்றே முருகன் !

நான்காமவன் :—அப்போ...மயிலுங் கடவுள்தான் !

ஒருவன் :—ஆடுமயில் ஏறிமயில் ஆறுமுகனே வருவாய்—பாட்டிருக்கே !

மற்றவன் :—யானை கடவுள்தான், அப்படிப் பார்த்தால்.

நல்லப்பன் :—விநாயகர் தலையாயிற்றே !

மூன்ருமவன் :—மாடும் கடவுள்தானு ?

நல்லப்பன் :—ரிஷப வாகன மாயிற்றே !

ஒருவன் :—காமதேனு அல்லவா அது !

மூன்ருமவன் :—எருமைக் கடா ?

நல்லப்பன் :—எமனேறும் வாகனம் !

நான்காமவன் :—கழுதை ?

நல்லப்பன் :—மூதேவியின் வாகனம்!

மற்றவன் :—நாய் ?

நல்லப்பன் :—பைரவ மூர்த்தி !

ஒருவன் :—பன்றி ?

நல்லப்பன் :—பூவராக சுவாமிகள் !

நான்காமவன் :—இன்னும் ஆமை, மீன், வேப்பமரம், புளியமரம், அருகம் புல்—அத்தனையும் கடவுள்களா ?

நல்லப்பன் :—அப்படித்தானே சொல்கிருர்கள்—அதுவும் நம்ம ராஜகுரு குரங்கையே கடவுளாக்கி, நம்மையெல்லாம் கோணங்கிகளாக்கி விட்டார்—ஆமாம், அவ்வளவுதான் நான் சொல்லுவேன்.

நான்காமவன் :—குரங்கென்று கூருதே !

நல்லப்பன் :—சீரங்கி யென்று சொல்லட்டுமா !

மூன்ருமவன் :—அனுமனைக் கேவலமாகப் பேசாதே !

[படம் பார்த்த மக்கள் அவர்களுக்குள்ளாகவே பேச ஆரம்பித்துவிட்டார்கள்.]

ஒருவன் :—அவர் ஏண்டா, கடவுளைக் கேவலமாகப் பேசருர்? உள்ளதைத்தாண்டா, எழுதி வைச்சிருக்கு, இங்கே—இந்த மாதிரி சொல்லிகிட்டுத் திரிகிருர்களே, அவன்தான் கேவலமாகப் பேசராங்கன்னு சொல்லு.

மற்றவன் :—ஆமாண்ணே, கடவுளு எல்லாத்துக்கும் கடந்து நிற்பதுன்னுதானே சொல்ராங்க.

மூன்றுமவன் :—மனிதனின் மனத்திற்கும் கடந்து நிற்பது என்றால், கடவுளுக்கு ஆறுமுகமும், யானை முகமும், சிங்கத் தலையும் இன்னும் சீரழிவான உருவங்களும் உண்டாக்கியவன் எவன்னுதான் கேட்கிறேன் !

மற்றவன் :—குரங்கையே கடவுள் என்று நம்பிக் கும்பிடுகிற நமக்கு எங்கேடா, இதையெல்லாம் பத்தி யோசிக்க நேரமிருக்கு ?

ஒருவன் :—எதுக்கும் சாஸ்திர ஆதாரம், இதிகாச உதாரணம் காட்டும் ராஜகுருதானே அனுமனை தினம் பூஜியுங்கள் என்று போதிக்கிறார்.

மற்றவன் :—ஏன், குரங்கைத் தேடி பிடுத்தாருன்னு தெரியவில்லை—அனுமார், ராமர் பாதத்தைத் தாங்கிகிட்டு இருக்கிறாரல்லவா, என்றும் சிரஞ்சீவியாய்—அதுபோல, அவர் ராமர், நாமெல்லாம் அனுமார்கள்—அவர் பாதத்தைத் தாங்கிக் கிட்டு திரிய வேண்டியதுதான் !

ஒருவன் :—அவரைத்தான் கேட்போமே - மனிதனின் அறிவையும் கடந்து நிற்கின்ற ஆண்டவனுக்கு அர்த்தமற்ற உருவங்களைத் தந்தது எப்படிப் பொருந்தும் என்று ?

மற்றவன் :—மனிதனுக்குக் கடவுள் குரங்காக முடியுமா என்று கேட்போமே'

நல்லப்பன் :—(இருவரையும் தட்டிக் கொடுத்து) எல்லாம் ஆண்டவனுக்கு, அக்கிரமக்காரன்கள் பண்ணி வைக்கிற அலங்கோலம்—ஆமாம், அவ்வளவுதான் நான் சொல்வேன்.

(குமணனும், குமுதாவும் பின்னால் வந்து நிற்கிறார்கள்.(

குமுதா :—(கேலியாக) நல்லப்பன் அண்ணேன், பலே வேலை செய்கிறார்—ஆமாம், அவ்வளவுதான் நான் சொல்லு வேன் ! (மூவரும் சிரிக்கின்றனர்.)

## காட்சி 54

இடம் : சாலை. காலம் : மாலை. இருப்போர் : பலதேவன.

[பலதேவன், மாறுவேடத்திலிருக்கிறான்-தனிமையாகப் பேசுகிறான்.]

பலதேவன் :—மலைநாட்டு எல்லையிலே, கூடாரம் அமைத் திருக்கிறானும் ஒரு ஓவியன்—அவன் படங்களைக் கண்டவர் மயங்கி விடுகின்றனராம்-என்ன விந்தை-ஓவியச் சாலையில்

உள்ளே நுழைபவர், வெளியிலே வரும்போது புரட்சிக்காரராக மாறிவிடுகிருர்களாம்! என்ன மாயம் ! அங்கு படம் காட்டுகிருர்களா? இல்லே, ஏதேனும் பஞ்ச தந்திரங்கள் புரிகிருர்களா ! —எதுவும் புரியவில்லே. எங்கு பார்த்தாலும் அவனைப்பற்றியே பேசுகிருர்கள்—அவன் படங்களேப் பற்றியே புகழ்கிருர்கள். அவன் படங்களின் அழகை மட்டுமா வருணிக்கிருர்கள்—அவைகளின் மூலம் அவன் ஊட்டும் அறிவையல்லவா, பெருமையாகப் பேசுகிருர்கள்—மலேநாட்டிலே ஒரு பெரிய மாற்றம் செய்து விடுவான் போலிருக்கிறதே-படமும், அதன்மூலம் பாடமும் போதிக்கும் முறை இந்த நாட்டு சரித்திரத்தில் நல்லதோர் இடத்தைப் பிடித்துவிடும் போலிருக்கிறதே! நான் மாறு வேடத்தில், இன்று, அந்த ஓவியக் காட்சிக்குச் செல்கிறேன்.

## காட்சி 55

இடம் : ஓவியக் காட்சி இடம். காலம் : மாலே. இருப்போர் : மலேநாட்டார், குமுதா, நல்லப்பன், மாறு வேடத்தில் பலதேவன்.

[மலே நாட்டாருக்கு, குமுதா, படங்களேப்பற்றி விளக்கவுரை யாற்றுகிருள்.]

குமுதா :—தோழர்களே, கவனமாகப் பாருங்கள்—இது உலகத்தின் ஆதிகாலத்தைக் காட்டுகிறது—உலகத்தின் ஆரம்ப நாட்களில், விலங்குகளே ஆட்சி செய்தன. மனிதப் பூண்டே இல்லாமல் இருந்தது.

ஒருவன் :—மனிதசாதியின் ஆரம்பக் கதை.

குமுதா :—ஆமாம். தோழரே, ஆரம்பக்கதை தெரியாவிட்டால் நம் முடிவும் தெரிந்துகொள்ள முடியாதல்லவா? இந்த இரண்டாவது படத்தைப் பார்த்தீர்களா ?

மற்றவன் :—மிருகங்கள் ஓடி ஒளிகின்றன—மனிதன் அவைகளே விரட்டியடிக்கிருன்.

ஒருவன் :—மனித ஆட்சி தொடங்கி விட்டது.

குமுதா :—இந்தப் படத்தில் பார்த்தீர்களா ?—மனித கும்பலுக்கு இடையிலே, மேட்டிலிருந்து பேசுகிருனே—இவன்தான் தன் பலத்தால் மற்றவர்களேயடக்கி, மன்னனுனுன்.

மூன்ருமவன் :—அப்படியா ? மன்னன் கடவுளின் பிரதிநிதியென்று கூருத இடமில்லே, நம் குலகுரு !

குமுதா :—அதையும் விளக்குகிறது இந்தப் படம்—மனிதர்கள் சிலர் மண்டியிட்டிருக்கிறார்களல்லவா ?—இவர்களைப் பக்தியின் பெயரால் அடக்கிக் குருவானான்.

நான்காமவன் :—பலத்தால் உயர்ந்தவன் மன்னன்—பக்தியால் உயர்ந்தவன் மதகுரு!

குமுதா :—இவர்கள் முதலில் யார் பெரியவன் என்ற போட்டியில் ஈடுபட்டு அடித்துக் கொண்டவர்கள். பிறகு இருவரும் சேர்ந்துகொண்டு மக்களை வாட்ட ஆரம்பித்து விட்டனர்.

ஒருவன் :—மன்னன் வாங்குகிறான் வரி—மதகுரு கேட்கிறான் காணிக்கை!

மற்றவன் :—எரிகிற கொள்ளியிலே எந்தக் கொள்ளி நல்ல கொள்ளி?

குமுதா :—ஆனால் நண்பர்களே, அந்தக் கொள்ளி நம் வீட்டுக் கூரையிலே இருக்கலாமா? மலைநாட்டில் மகேந்திரனும் குரு கோவிந்தானந்தரும் சேர்ந்து சதி செய்தார்களே! இந்நாட்டில், உங்கள் நாட்களில், ஆலயத்திலே தொழவந்த பெண்ணைத் தூக்கிப் போனார்கள்—ஆண்டவன் பெயரைக்கூறி அந்த அக்கிரமத்திற்கு ஜோதி என்ற திரை கட்டிவிட்டார்கள்—காரணம் கூறாமலே, படம் எழுதிய ஒருவரை நாட்டை விட்டே விரட்டி விட்டார்கள்.

ஒருவன் :—அந்த அம்மா கேட்கிறதும் நியாயந்தான்—எது எப்படி நடந்தாலும் வாயை மூடிக்கொண்டிருந்தால் இப்படித் தான் ஆகும்.

மற்றவன் :—இனி நாமும் கேட்கவேண்டும்.

குமுதா :—உங்கள் வரிப் பணத்தில் வயிறு வளர்ப்பவர்கள் தானே அவர்கள் ?

ஒருவன் :—நாம் வேகாத வெய்யிலில் காலை முதல் மாலை வரை, இரத்தத்தைச் சிந்தி பாடுபடுகிறோம். குனியாமல், வளையாமல் கொண்டு போகிறான் வரிப்பணத்தை—கோலாகலமாக வாழ்கிறான் மன்னன்—குந்திகிட்டுத் தின்கிறான் குரு!

குமுதா :—மன்னன் ஆட்சி இனி நடவாது, மக்களாட்சி தேவை—நம்மை நாமே ஆண்டு கொள்ளவேண்டும். அந்த உணர்ச்சி உங்களுக்கு வேண்டும்.

மற்றவன் :—நம்மை நாமே ஆள்வதா? அதெப்படி?

குமுதா :—நமது பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்து அனுப்பி அவர்கள் மூலம் அரசாங்கக் காரியத்தை நடத்தவேண்டும்!

மற்றவன் :—அப்ப, நான் கூட ஆளலாம்.

குமுதா :—உங்கள் வீட்டு ஏணையிலே தூங்கும் உன் மகன் கூட ஆளலாம், அவனுக்கு வயதுவந்தால்.

மற்றவன் ;—நல்ல ஆட்சி அதுதாங்க.

[இதனை மிகவும் உன்னிப்பாகக் கவனித்து வந்த பலதேவன் முகத்தில் மகிழ்ச்சிக்குறிகள் தெரிகின்றன.]

பலதேவன் :—(ஒரு புத்தகத்தைப் புரட்டி) இதென்னம்மா, காட்டில் நடவாதது என்று போட்டிருக்கிறது?

குமுதா :—ஆமாம், இவை காட்டில் நடப்பதில்லை.

பலதேவன் :—அப்படியானல் நாட்டில் நடப்பவையோ, இவை?

குமுதா :—இல்லையென்று நீங்கள் சொல்வீர்களோ?

பலதேவன் :—புலியும், நரியும் சேர்ந்திருக்கின்றன. இது நடக்கக்கூடிய காரியமா?

குமுதா :—மலை நாட்டிலேயே, இந்தக் காட்சியை நான் காட்டமுடியும்.

பலதேவன் :—இதோ-புலியும் நரியும் ஒரு மானை விரட்டுகின்றன.

குமுதா :—இது இந்த நாட்டில் சர்வ சாதாரணம்-இங்கே இரண்டு ஊர்கள் இருக்கின்றன. அவைகளைப் பார்த்து விட்டால், இந்தப் படங்களோடு நீங்கள் பேசுவீர்கள்—அந்தப் படங்களும் உங்களோடும் பேசும்.

பலதேவன் :—இரண்டு ஊர்களா?

குமுதா :—ஆமாம், ஒன்று புலியூர், இன்னொன்று நரியூர்.

பலதேவர் :—விசித்திரமாக இருக்கின்றன பெயர்கள்.

குமுதா :—அவைகளுக்கு வேறு பெயர்களும் உண்டு.

பலதேவன் :—அப்படியா?

குமுதா :—ஒன்றின் பெயர் அரண்மனை—அங்கு போனல் மகேந்திரன் என்ற புலியிருக்கும்.

பலதேவன் :—என்ன?

குமுதா :—இன்னொன்றின் பெயர் அனுமார் கோவில்—அங்குபோனல் குரு கோவிந்தானந்தர் என்ற நரியிருக்கும்.

பலதேவன் :—மான் எங்கிருக்கும்?

குமுதா :—மலைநாடு முழுவதும் மான் கூட்டந்தானே!

பலதேவன் :—அம்மா, நீ இப்படிப் பேசினால், ராஜத்வேஷக் குற்றம் சாட்டுவார்களே!

குமுதா :—சாட்டட்டும்—ஆனால் மலைநாட்டு மக்கள் விசுவாசம் காட்டுவார்கள்.

பலதேவன் :—புதுமாதிரியாகப் பேசுகிறாய் அம்மா.

குமுதா :—புது மாதிரியாக அல்ல—புது அறிவோடு பேசுகிறேன்.

பலதேவன் :—புது அறிவு-இந்தப் படங்கள் தந்தவையோ?

குமுதா :—இந்தப் பேசும் படங்களோடு, தினம் பேசிப் பேசிப்பெற்ற பகுத்தறிவு.

பலதேவன் :—பேசும் படங்களைத் தந்தவர்?

[அப்பொழுது குமணன் வெளியில் வருகிறான்.]

குமுதா :—அதோ, அந்தப் பேசாத படம்!

[குமுதா அழுகிறாள்.]

பலதேவன் :—அழவேண்டாம் அம்மா-உன் மனம் மிகவும் பெருந் துக்கத்தால் தவிக்கிறது என்பது புரிகிறது—பிறிதொரு முறை வருகிறேன்.

[பலதேவன் வெளியேறுகிறான்.]

## காட்சி 56

இடம் : காலை. காலம் : பகல். இருப்போர் : மலைநாட்டு மக்கள்.

ஒருவன் :—நல்ல படங்கள்! அதைவிட நல்ல பாடங்கள்!!

மற்றவன் :—அந்தப் படங்களிலே எது தப்புன்னு, எவன் சொல்லுவாண்ணேன்.

மூன்றுமவன் :— இந்த ராஜாங்கக்காரனுவ எல்லாம் போய்ப் பார்க்கணும்.

ஒருவன் :— அவங்களுக்கு எங்கேடா நேரமிருக்கப் போகிறது? ஒருத்தனை ஒருத்தன் எப்படி ஒழித்துக் கட்டுவது என்று திட்டம்போடுவதற்கே நேரம் சரியாகிவிடுமே!

நான்காமவன் :—இந்தப் படங்களை ராஜா பார்க்கணும்—ராணி பார்க்கணும், ராஜகுரு பார்க்கணும்—ராஜப் பிரதானியர்

பார்க்கணும்—குடும்பம், குடும்பமா பார்க்கணும்—அவங்க அப்பன், பாட்டன், முப்பாட்டன் பரம்பரை எல்லாம் பார்க் கணும்!...

ஒருவன் :—இவைகளைப் பார்த்தாத்தான் நல்ல புத்தி வந்துடுமே—மன்னருக்கு அதிகாரம் மகேசனில்லே கொடுத் தாராம்!

மற்றவன் :—ஆமாம், ஆளு நீ, மாளட்டும் மக்கள்னு. மகேசன் தூக்கி இவர் கையிலே கொடுத்தாராமா?

மூன்றுமவன் :—மந்தி கையிலே மாட்டிய மாலையாயிட் டோம் நாம்—மமதை கொண்டவங்க அதிகாரத்திலே சிக்கி சீரழிகிறோம்.

நான்காமவன் :—வறுமையின்னு, ராஜகுரு பொறுமை யென்கிறரு—ராஜா வரியின்னாலும், அதற்கும் சரியின்கிறரு— இதை எங்கே போய் சொல்வது?

ஒருவன் :—கொலைகாரனும். கொள்ளைக்காரனும் தான் கொலு மண்டபத்திலே குந்திக்கிடக்கிறான்க—வேறென்ன பின்னே சொல்லுவாங்க?

மற்றவன் :—என்னண்ணே கொலை, கொள்ளை?

ஒருவன் :—ராணி மரகதவல்லி பின்னே எப்படியப்பா செத்தாள் —கோயிலிலே முருகப்பர் மாண்டு கிடந்தாரு— கோயிலிலே ஜோதியடிச்சுது, அரண்மனையிலே இருட்டு குதிச்சுதோ?

மற்றவன் :—ஆமாண்ணே, இல்லாட்டா, காணமல் போச்சாமே பொண்ணு, அது எங்கேண்ணன் போயிருக்கும்.

ஒருவன் :—ஜோதியிலேதான் மறைஞ்சு போச்சோ—அப் படிச் சொல்லி ஊரை ஏமாத்தரானுவ.

மற்றவன் :—ஏண்ணேன், இவன் குட்டு வெளிப்பட்டு விடும்னுதான் அந்த ஓவியரை ஊரைவிட்டே விரட்டி விட்டானுங்க.

ஒருவன் :—அதிலே வேறே சந்தேகமா?

நான்காமவன் :—மலைநாட்டு ஆட்சி போறபோக்கு சரி யில்லை—இதுக்கு நாம் ஒருவழி செய்தாகணும்.

ஒருவன் :—அதுக்குக் காலம் வெகு வேகமாக வந்துகிட்டு தான் இருக்கு—அப்போ எல்லாம் வழியும் பிறக்கும், பழியும் ஒழியும்!

இடம் : குரு கோவிந்தானந்தர் மாளிகை. **காலம் :** பகல். இருப்போர் : குரு கோவிந்தானந்தர், குலசேகரன், வேலையாட்கள் இருவர்.

கோவிந்தானந்தர் :—ஏண்டா, மலைநாட்டுக் கோட்டை மதிலோரம், எவனோ ஒருவன் ஓவியக்காட்சி நடத்துகிறானே—பார்த்தயா?

ஒரு வேலையாள் :—பார்க்காதவர் யார் சுவாமி?

கோவிந்தானந்தர் :—நீ பார்த்தாயாடா?

ஒரு வேலையாள் :—நான் எப்படிப் பார்ப்பது சுவாமி?

கோவிந்தானந்தர் :—ஏண்டா?

ஒரு வேலையாள் :—அங்கே ஒரு பெண்ணிருக்கிறாளாம்—அவ, மதகுருன்னு திட்ராளாம்! மகராசான்னு தீயாய் மாறி தகிக்கிறாளாம்.

(மற்றொரு வேலைக்காரனை விசாரிக்கிறார்.)

கோவிந்தானந்தர் :—ஏண்டா, நீயாவது பார்த்தயா?

மற்றொருவன் :—பார்த்தேன் சுவாமி—எனக்குச் சந்தேகமாக இருக்குதுங்க.

கோவிந்தானந்தர் :—என்ன சந்தேகம்?

மற்றவன் :—துடுக்குத் தனமாகப் பேசும் அந்தப் பெண். பழக்கமானவ மாதிரி தெரியுதுங்க—அந்த ஆள் மட்டும் பேசறதே இல்லீங்க.

கோவிந்தானந்தர் :—ஆமாண்டா, அதனால்தான் விசாரிக்கிறேன்—அவள் ஒரு வேளை கோயிலிலிருந்து ஓடிப்போன குமுதாவாகவும், அவன் நாடு கடத்தப்பட்டவ......

மற்றவன் :—அந்தக் கேடுகெட்டவனாகத்தா னிருக்க வேண்டும்.

கோவிந்தானந்தர் :—குமணனாக இருந்தால் அவனை உடனே கைது செய்து காவலில் வைக்கவேண்டும்.

மற்றவன் :—மன்னரிடம் கூறினால் உடனே, அரசாங்க சிப்பாய்கள் பறந்திடமாட்டாங்களா?

கோவிந்தானந்தர் :—மன்னனையும், என்னையும் குறை கூறிக்கொண்டு ஒருமதியிலி, மலைநாட்டில் திரிகிறான்—என்ன

ஆணவம்—அந்த ஆணவக்காரனின் கொட்டத்தை அடக்கு வேன்.

மற்றவன் :—அவனை அடக்காவிட்டால், இன்னும் கொஞ்ச நாட்களில் நாம் வெளியில் நடக்கவே முடியாது.

கோவிந்தானந்தர் :—ஆகட்டும், பார்க்கிறேன்.

## காட்சி 58

**இடம் :** மோகினிதேவியின் மாளிகை. **காலம் :** மாலை. **இருப்போர் :** மோகினி, மகேந்திரன்.

[மோகினி அழுகிருள். மகேந்திரன் தேற்றுகிருன்.]

மோகினி :—என்னுல்தானே, உங்களுக்கு இவ்வளவு அவமானமும்? நான் சாகிறேன்.

மகேந்திரன் :—மோகினி, என்ன வார்த்தை கூறுகிருய்—நீ சாவதா? ஏன் மோகினி, உன்னை இழித்தும் பழித்தும் பேசிய வன் குடும்பததோடு சாவதைக் கண்டு மகிழ வேண்டிய நீ சாவதா—மோகினி, மகேந்திரனைக் கோழை என்று நினைத்துக கொண்டாயா? நாளையே, போர் தொடுக்க, படை திரட்ட உத்திரவு பிறப்பித்திருக்கிறேன். கண்ணே—நீ கலங்கினுல், நான் சங்கடப் படுவேன்—எங்கே, புன்முறுவலுடன், போர் தொடுங் கள் என்று கூறியனுப்பு.

[மோகினி சிரிக்கிருள். மகேந்திரன் மகிழ்கிருன்.]

## காட்சி 59

**இடம் :** குரு கோவிந்தானந்தர் மாளிகை. **காலம் :** பகல். **இருப்போர் :** குலசேகரன், கோவிந்தானந்தர்.

குலசேகரன் :—குருமகானே, நம் திட்டங்கள் அத்தனையும் அம்பலத்திற்கு வந்துவிடும் போலிருக்கின்றன—வரவிருக்கும் பேராபத்தை உடனே தடுத்தாக வேண்டும்.

கோவிந்தானந்தர் :—குலசேகரா, காலங் கடத்துவது நம்மை நாமே படுகுழியில் தள்ளிக்கொள்வது போலாகும்.

குலசேகரன் :—உடனே, அந்தப் படங்காட்டியைப் பிடித் தாக வேண்டும்.

கோவிந்தானந்தர் :—படங்காட்டி பழைய ஆள்தான்—நள்ளிரவில் வந்து குரங்காட்டம் காட்டினுனே, அதே குமணன் தான்.

குலசேகரன் :—அது மட்டுமில்லே சுவாமி, அந்தக் குட்டியும் அவனேடு வந்து சேர்ந்து விட்டாளாம்-இனி வெளியில் விட்டு வைப்பது, தீப்பந்தத்தை வைக்கோல் போரில் ஒளித்து வைப்பதாகும்.

கோவிந்தானந்தர் :—அதற்கான ஏற்பாட்டை உடனே செய்தாக வேண்டும்.

குலசேகரன் :—ஏற்பாடு செய்வதாவது—இப்பொழுதே அதற்கான புறப்பாடுதான்—உம், எழுங்கள் சுவாமி, ஆபத்து மலேபோல வருகிறது, நீங்கள் சிலேபோல உட்கார்ந்திருக்கிறீர்-புறப்படுங்கள், மன்னனேக் காண்போம் — நிலேமையை விளக்குவோம்.

## காட்சி 60

**இடம் :** மன்னன் மாளிகை. **காலம் :** மாலே. **இருப்போர் :** மன்னன், மகேந்திரன், பலதேவன், கோவிந்தானந்தர், குலசேகரன்.

[மன்னன் அமர்ந்திருக்கிருன். எதிரில் பலதேவன் நிற்கிருன்.]

மகேந்திரன் :—பலதேவரே, கடல் நாட்டின் மீது படையெடுக்க வேண்டும். அதற்கு உடனே படைகளேத் தயார் செய்ய வேண்டும்.

பலதேவன் :—என்ன, அமைதி அவை அமைக்கச் சென்றீர்கள்—போரிடப் புறப்பாடு என்கிறீர்கள்.

மகேந்திரன் :—கடல் நாட்டுக் காவலன், கருணுகரனின் கொட்டம் அடக்கியாக வேண்டும்-மலேநாட்டுப் போர் வீரரின் திறம் அறியாமல் பேசிவிட்டான்-அவன் சிரமறுந்து வீழ்ந்தது என்ற செய்தி இன்னும் எட்டே நாட்களில் என் செவிக்கு எட்டச் செய்ய வேண்டும்.

பலதேவன் :—போர் என்பது வேந்தர்களிருவர் செய்யும் வேடிக்கையல்ல, மன்னவா—ஆகவேதான் நீங்கள் யோசிக்க வேண்டுகிறேன்.

மகேந்திரன் :—யோசனேயா? கிடையாது பலதேவா! மலே நாட்டு மீது, நம் படைகள் பாயட்டும்!

பலதேவன் :—(கோபமாக) மலேநாட்டுத் தளபதி கேட்கிறேன்-போர் என்பது தங்களுக்குப் பொழுதுபோக்காக இருக்கலாம். ஆனுல் போர் என்பது ஆயிரக்கணக்கான உயிர்களின்

பிரச்சினை-வெறும் வாளும். வேலும், ஈட்டியும் மட்டும் புறப்படு வதல்ல-அவைகளைத் தாங்கிய வீரர்கள் கிளம்ப வேண்டும். அவர்களுக்குக் குடும்பம் உண்டு. அன்பு மனைவியர் உண்டு. ஆசைக் குழந்தைகள் இருக்கின்றன. பெற்ற தாய், தந்தை, உற்ற நண்பர்கள், வற்ற தங்கை, அண்ணன்மார்கள் உண்டு. இத்தனைப் பேரும், போருக்குப் போய்வா என்று அனுப்பி வைக்க மாட்டார்கள். கண்ணீர்த் தடாகத்தைக் கடந்து இரத்தத் தடாகத்திற்கு அவர்கள் செல்ல வேண்டும். அதில் எதிரியின் தலையை மிதக்கவிட்டாலும் விடுவார்கள்—தாங் களே மிதந்தாலும் மிதப்பார்கள். அந்தப் போரொழிந்த அமை தியரசை நிலை நாட்டுவதே சாலச் சிறந்தது என்று கண்டேன்— தாங்களும் அதற்காகவே அயல் நாடு செல்வது காணப் பெருமகிழ்வு கொண்டேன். ஆனுல் போர் என்கிறீர்கள்— காரணம் வேண்டுகிறேன்—காவலா.

மகேந்திரன் :—காரணம் தேவையில்லை—காரணம், என் கட்டளை தான்.

பலதேவன் :—மன்னன் கட்டளைக்காக படையெடுப்பு கிடையாது.

மகேந்திரன்:—என்ன? மன்னன் என் கட்டளையைத் தள்ளி நடப்பவர், மலைநாட்டில் தளபதியாக இருக்க முடியாது!

பலதேவன் :—தளபதியென்ற பதவியைத் தாராளமாக எடுத்துக் கொள்ளுங்கள். ஆனுல் மலைநாட்டுப் படைவீரன் ஒருவனைக்கூட, உம் விருப்பத்தின் படி நடக்கவைக்க முடியாது.

மகேந்திரன் :—பலதேவரே, அதையும் பார்க்கிறேன்— உமது தளபதி பதவியை இந்த நிமிடத்தோடு இழக்கிறீர்.

[பலதேவன் வேகமாக வெளியேறுகிருன்—மகேந்திரன் குகையில் புலி உலவுவது போல, இங்கும் அங்கும் உலவியபடியிருக்கிருன். அப்பொழுது அவசரம் அவசரமாக, குருவும், குலசேகரனும் வருகிருர்கள். குருவுக்கு, ஆசன மளித்து எல்லோரும் அமர்கின்றனர்.]

கோவிந்தானந்தர் :—மன்னு, பிரளய காலமே வந்து விட்டது. அனுமன் விசுவரூபம் எடுத்து விடுவான் போலிருக் கிறது.

மகேந்திரன் :—என்ன சுவாமி?

கோவிந்தானந்தர் :—குலசேகரா, பார்த்திரா—மன்னர் எவ்வளவு நிதானமாகக் கேட்கிருர்.

மகேந்திரன் :—சொல்லுங்கள், சுவாமி—கேட்கிறேன.

கோவிந்தானந்தர் :—அரச கட்டளை மீறப்படுகிறது—ஆண்டவன் ஆணை கேலி பேசப்படுகிறது.

மகேந்திரன் :—எங்கு ?

கோவிந்தானந்தர் :—மகேந்திரன் ஆளும் மலைநாட்டில்.

மகேந்திரன் :—என் கட்டளையும், ஈசன் கட்டளையும் மீறப்படுகிறதா ? மீறத் துணிந்தவர்கள் இன்னமும் உயிருடன் வாழ்கிருர்களா ?

கோவிந்தானந்தர் :—மீறியவர்கள் வாழ்கிருர்கள்-அதுவும். மீறுகிறவர் மீறிக்கேட்பவரிடம் சீறுகிருர்கள்—அவர்கள் பக்கம் சேர்பவர்களும் உன் நாட்டில் இருக்கிருர்கள்.

மகேந்திரன் :—மீறியவர்கள் யாரவர்கள் ?

கோவிந்தானந்தர் :—அவன் நாடுகடத்தப்பட்டவன்-அவள் தப்பியோடிப் போனவள்.

மகேந்திரன் :—நாடுகடத்தப்பட்டவன் நம் நாட்டின் எல்லையில் அடிவைப்பதே, அரசகட்டளையை மீறுவதாகும். தப்பியோடியவள், என்ன மண்டைக் கர்வமிருந்தால் திரும்பி வந்து, இப்படித் தாறுமாருக நடப்பாள் ?

கோவிந்தானந்தர் :—எல்லைக்குள் வந்து கடவுள் இல்லையாம், காக்கை குருவிகளெல்லாம் உங்களுக்குக் கடவுள்களா, குரங்கைக் கடவுளென்று கூசாமல் கூறுகிருர்களே என்று பேசுகிருளாம் அந்தக் குட்டி—அவன் படமெழுதிக் காட்டி ஏசுகிருனும்.

மகேந்திரன் :—குலசேகரா, அந்த மதிகேடர்கள் யார்? இத்தனை நாட்கள் அவர்களை விட்டு வைத்ததேன் ?

குலசேகரன் :—மன்னு, அவன்தான் குமணன்—அவள் குமுதா—மாறு வேடத்தில் திரிந்தார்கள்—இப்பொழுதுதான் நமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

மகேந்திரன் :—அவர்களை ஏன் கைதி செய்யவில்லை?

குலசேகரன் :—முடியவில்லை !

மகேந்திரன் :—முடியவில்லையா, குலசேகரா, இதென்ன வேடிக்கை ?

குலசேகரன் :—அவனைத் தொட்டால், மக்கள் தொடுபவனை வெட்டிவிடுவார்கள்.

மகேந்திரன் :—மன்னன் கட்டளையை மீறி, மலைநாட்டின் எல்லைக்குள் வந்த அந்தக் குமணனையும், அவன் கூட்டத்தையும், நாளையே கைதி செய்யுங்கள்—தடுப்போரையும் பிடித்துச் சிறையில் தள்ளுங்கள்.

[குரு வெளியேறுகிறார்-மற்ற இருவரும் பிரிகின்றனர்.]

## காட்சி 61

இடம் : ஓவியக்காட்சி இடம். காலம் : பகல். இருப்போர் : குமணன், குமுதா, நல்லப்பன், மலை நாட்டார்.

[அரசாங்க ஆட்கள், திபுதிபுவென உள்ளே நுழைகிறார்கள்—குமணனையும், குமுதாவையும் கைதி செய்ய முற்படுகிறார்கள்.]

நல்லப்பன் :—அவர்களைத் தொடாதே—அவர்களைக் கைது செய்ய விடமாட்டோம் !

சிப் :—எங்களைத் தடுக்க நீ யார் ?

நல்லப்பன் :—மக்களின் பிரதிநிதி !

சிப் :—சீ, எட்டிப் போ !

மலை :—சும்மா, திரும்பிப் போங்க—

நல்லப்பன் :—வீண குழப்பம் வேண்டாம்-போய்விடுங்க—ஆமாம், அவ்வளவுதான் சொல்வேன்.

சிப் :—போடா, மடப் பயல்களா !

[தடுப்பவர்களைத் தள்ளுகிறான் சிப்பாய்-கலகம் ஆரம்பமாகிறது. குமுதா வந்து தடுக்கிறாள்.]

குமுதா :—அக்கிரமத்திற்குப் பெயர்போன மலைநாட்டு மன்னனின் ஆட்களே, நீங்கள் திரும்பிச் செல்லுங்கள்-எங்கள் வழக்கை நாங்கள் மக்கள் முன் வைக்கிறோம். அவர்கள் தான் எங்களை விசாரிக்க ஏற்றவர்கள்—அவர்கள், வழங்கட்டும் நீதி !

[மலைநாட்டு மக்கள், சிப்பாய்களை விரட்டிவிடுகின்றனர்.]

## காட்சி 62

இடம் : பாசறை. காலம் : பகல். இருப்போர் : படை வீரர்கள், பலதேவன்.

பலதேவன் :—படைவீரர்களே, என் உயிர்த்தோழர்களே நான் தளபதி—ஆனால், உங்கள் தளராத உள்ளங்கள் தந்த

பதவி இது. இதனை, இன்று மன்னன் பறித்துக் கொண்டதாக மார் தட்டுகிறான்.

வீரர்கள் :—இல்லை, இல்லை !

பலதேவன் :—படையெடுக்க வேண்டு மென்றான்—யார் மீதென்றேன்—கடல் நாட்டு மீதென்றான்—ஏன் என்றேன்—அப்படி நான் கேட்பதே கூடாதாம்—போரிடப் புறப்பட வேண்டியதுதானும்.

வீரர்கள் :—முடியாது, முடியாது !

பலதேவன் :—படையெடுக்க முடியாது என்று முடிவாகக் கூறிவிட்டேன்—பதவியிழந்தீர் என்றான்—சிரித்துவிட்டு உங்களிடம் வந்துவிட்டேன். படை வீரர்களே, களம பல கண்டும் கலங்காத எஃகு உள்ளம் கொண்டவர்களே, படையெடுப்பு வேண்டாம், கடல் நாட்டின்மீது—ஆனால், மனம்போல மக்களை ஆட்டிவைக்கும் மமதை கொண்ட, இந்த நாட்டின் மன்னன் மீது படையெடுக்க வேண்டும்—அவன் மமதையொழிந்து மதி பெறவேண்டும்—ஆம். அந்த அறப்போருக்கு நீங்கள் தயாரா என்று கேட்கிறேன்.

வீரர்கள் :—தயார் ! தயார் !!

பலதேவன் :—வீரர்களே, வெற்றித் தோழர்களே, புறப்படுங்கள்—உங்கள் வாட்களை எடுங்கள்—ஈட்டிகளைத் தீட்டிக் கொள்ளுங்கள்—அணிவகுத்துச் செல்லுவோம்—மமதை மிக்க மன்னனைச் சந்திப்போம்.

[போர்வீரர்கள் அணிவகுத்து நிற்பதும், அவர்கள் ஒவ்வொருவராக வாளையும், ஈட்டியையும் எடுப்பதும் நிழற் காட்சியில் தெளிவாகத் தெரிகிறது.]

பலதேவன் :—புரட்சி......

வீரர்கள் :—ஓங்குக !......

## காட்சி 63

இடம் :—மக்கள் கூட்டம். **காலம் :** மாலை. **இருப்போர் :** குமணன், குமுதா, மற்றும் பலர்.

['புரட்சி ஓங்குக' 'மக்களாட்சி மலர்க' என்று முழங்குகின்றனர். ஆரவாரம் அதிகமாகிறது—பிறகு அடங்குகிறது. நல்லப்பன், ஒரு பலகையை எடுத்து வைக்கிறான். அதில் ஒரு நாக்கறுந்து, இரத்தம் ஒழுக, ஒழுக ஒருவன். அந்த

இரத்தத்தைத் தொட்டபடி எழுதுவதாகப் படம் தீட்டப்பட்டிருந்தது. அவன் எழுதும் வாசகங்கள் தெளிவாகத் தெரிந்தன.]

அவ் வாசகங்கள் :

நாக்கை யறுத்துவிட்டாய், காவலா.

கரமிருக்கிறதே !

கரமிருக்கும்வரை எழுதுவேன்.

உன் ஆணவம் ஒழியும்வரை எழுதுவேன்.

அந்தக் குருவின் கொட்டம் அடங்கும்வரை எழுதுவேன் !

(குமணன் எழுந்து நின்று அந்த வாசகங்களைக் காட்டுகிருன்.)

குமுதா :—(கோபமாக) மலை நாட்டோரே, மதி மிக்கவரே, பாருங்கள்—உங்களுக்காகப் பரிந்து பேசினவருக்கு அன்ருேர் நாள் பாதகர்கள் அளித்த பரிசை! நாக்கையறுத்து விட்டார்கள், நயவஞ்சகர்கள்—ஒரு நாக்குப் போய்விட்டால், தாங்கள் உயிர் பிழைதது விடலாம் என்று மனப்பால் குடிக்கிருர்கள்—ஒரு நாக்குப் போயிற்று-இதோ ஒரு இலட்சம் நாக்குகள் உண்டாகி விட்டனவே! இவைகளையும் மன்னன் அறுத்து விடுவானு? (அழுதபடி) இதோ பாருங்கள், என் பொற் சித்திரத்தை—அது பேசாது. ஐயோ, என் ஆசைக் காதலரின் இனிய குரலை என் செவிகள் கேட்க முடியவில்லையே! ஐயோ, கொடுமை, கொடுமை இது! உங்கள் தங்கையின் காதலனின் நாக்கை யறுத்து விட்டார்கள் கயவர்கள். கணவனுக்கு ஏற்பட்ட இந்தக் கொடுமையைக் கண்டு கண்டு கண்ணீர் வடிக்கும் உங்கள் தங்கையைப் பாருங்கள். என் அருமை அண்ணன் மார்களே, என் கண்ணீர் துடைக்க மாட்டீர்களா? மலை நாட்டார் மலையொத்த தோளர் என்ற புகழ், அலைகடல் தாண்டியும் சென்றிருக்கிறதே, அந்த வீரம் இன்று மங்கி விட்டதோ? (ஆத்திரமாக) என் காதலரை நாக்கையறுத்து நாடு கடத்திஞனே, இந்தக் காதகன்—ஏன் தெரியுமா? அரண்மனைச் சதிகளை, அனுமார் பக்தரின் அட்டகாசங்களை அம்பல மாக்கி விடுவார் என்ற பயத்திஞல்தான்—அரசாங்கத்தின் நாறிப் போன சேதிகளை எங்கே என் நாதர் வெளியாக்கி விடுவாரோ என்ற அச்சத்திஞல்தான்—(மிகவும் ஆவேசத்தோடு) மன்னன் மனைவியைக் கொன்ருன்—மரகதவல்லியை மன்னனே கொன்ருன் !—மோகினி, ஒரு காமக்குரங்கு—என் கணவரையே கைப்பிடித்திழுத்த கள்ளி—அவர் இணங்காததால் மன்னனைத்

தூண்டி நாடு கடத்திய கள்ளி—குரு கோவிந்தானந்தன், என்னைக் களவாடி, மன்னனுக்குக் கொடுக்க, தோஷம் என்று வேஷம் போட்ட விஷ வியாபாரி—இன்னும் இந்த அரண்மனைக் காட்டில் எத்தனையோ கெட்ட விலங்குகள்-இவைகள் அத்தனையும் விரட்டியடிப்போம்—நாட்டிற்குள்ளே காடு கூடாது. காடு கொன்று நாடாக்குவோம்—நாட்டிலே, மக்களாகிய நாம் நடத்துவோம் நல்லாட்சி—வாரீர், வாரீர் !

புரட்சி ஓங்குக !

மக்களாட்சி மலர்க !

(எல்லோரும் அதையே முழக்க மிடுகின்றனர்.)

## காட்சி 64

**இடம்** : சாலை. **காலம் :** மாலை. **இருப்போர் :** மக்கள், குமணன், குமுதா—மற்றும் பலர்.

[கையில் கிடைத்த ஆயுதங்களுடன், மக்கள், புரட்சி ஓங்குக, மக்களாட்சி மலர்க என்று முழங்கியபடி செல்கின்றனர். இத்துடன் ராணுவப் புரட்சியாளரும் சேர்கின்றனர்.]

## காட்சி 65

**இடம் :** மோகினி தேவி அரண்மனை. **காலம் :** இரவு. **இருப்போர் :** மோகினி.

[புரட்சி ஓங்குக, மக்களாட்சி மலர்க என்ற முழக்கம் கேட்டபடியிருக்கிறது—மோகினி பதறிப்போய் இங்குமங்கும் ஓடுகிருள் ]

மோகினி :—முல்லை, முல்லை......அடி முல்லை......நீயும் இல்லையா ? ஆம், இனி மோகினி தேவிக்கு வேலையில்லை......

[பக்கத்திலிருந்த அலமாரியைத் திறக்கிருள். அதிலிருந்த விஷப் பெட்டகத்தை எடுக்கிருள்—அருந்துகிருள்—சிறிது நேரத்தில் சாய்கிருள்.]

## காட்சி 66

**இடம் :** அனுமார் கோவில். **காலம் :** இரவு. **இருப்போர் :** குரு கோவிந்தானந்தர்.

['புரட்சி ஓங்குக ! மக்களாட்சி மலர்க !' என்ற முழக்கம் கேட்டபடியிருக்கிறது-குரு பயந்தபடி ஓடிவருகிருர்.

அனுமார் சிலேயைச் சாய்க்கிருர். அனுமார் சிலே தலேகீழாக விழுகிறது. அடியில் பதுக்கி வைத்திருந்த தங்கத்தை மூட்டை கட்டுகிருர்.]

கோவிந்தானந்தர் :—ஐயோ, மானம் போச்சு, மரியாதை போச்சு, எல்லாம் போச்சு—என்ன மிச்சம்—இந்தத் தங்கம் மிச்சம்—இதை எடுத்துக்கொண்டு இப்பொழுது பிடிக்கவேண்டியதுதான் ஓட்டம்.

[புரட்சிக்கார கூட்டம் உள்ளே நுழைகிறது—நல்லப்பன் குருவைப் பிடித்துக் கொள்கிருன்.]

நல்லப்பன் : குரு மகானே, வாங்க, வாங்க-வம்பு பண்ணுதீங்க—வீணுய் உடம்பைப் புண்ணுக்கிக்காதீங்க—ஆமாம், அவ்வளவுதான் நான் சொல்லுவேன்.

## காட்சி 67

இடம்: மன்னன் மாளிகை. காலம்: இரவு. இருப்போர் :—மன்னன், குலசேகரன்.

[‘புரட்சி ஓங்குக ! மக்களாட்சி மலர்க’ என்ற முழக்கம் கேட்டபடியிருக்கிறது. இருவரும் ஏதும் பேசாமல் இப்படியப்படி நடந்தபடியிருக்கின்றனர். புரட்சிக் கூட்டம் உள்ளே நுழைந்து விடுகிறது—பலதேவன், குமணன், குமுதா ஆகியோர் வாளுடன் வருகின்றனர்.]

குமுதா :—மன்னு, மக்களின் சக்தியைப் பார்த்திரா, மமதை கொண்டு திரிந்தீரே, இப்பொழுதாவது புரிந்தீரா—புறப்படும் குலசேகரா, அட குணங் கெட்டவனே—ஓடாதே—உடன் வா—மக்கள் அவைக்கு—அங்கே உங்களுக்குத் தக்க தண்டனே கிடைக்கும்.

## காட்சி 68

இடம்: ஓவியக் காட்சி இடம். காலம்: காலே. இருப்போர் : மக்கள் கூட்டம், குமணன், குமுதா, பலதேவர், மன்னன். குரு, குலசேகரன்—இன்னும் எல்லோரும்.

குமுதா :—மக்கள் அவைக்கு முன்னுலே, மக்களே மதியாத மமதையாளர்கள் நிறுத்தப் பட்டிருக்கிருர்கள்—அந்த மதிகேடரை, விசாரித்து, தீர்ப்பளிக்க வேண்டியது மக்கள் அவையின் கடமை.

மக்களின் மதியிருண்ட காலம் மலையேறிவிட்டது, மன்னா— இனி உனக்கு மணிமுடி கிடையாது.

[மணிமுடி பறிக்கப்பட்டு கீழே வீசப்படுகிறது.]

செங்கோல் கிடையாது.

[செங்கோல் வீசியெறிப்படுகிறது.]

தங்க ஆசனம், தனியான அரண்மனை—எதுவும் கிடையாது நீ, மனிதரிலே ஒரு மனிதன்—

(மன்னன் தலையைத் தொங்க விட்டுக்கொண்டு நிற்கிறான்.)

குரு மகானே, குரங்குப் பிரபுவே—மக்களின் மதிமயக்கம் மறைந்துபோய் விட்டது—இனி உம் குரங்காட்டம் விட்டு, மக்களுக்குத் தொண்டு செய்யும் நல்ல மனம் வேண்டும்.

அதற்கு இந்த வேடம் தேவையில்லை—குருபீடம் என்ற ஆடம்பர இடம் வேண்டாம்—உள்ளத்திலே அன்பு பிறந்து விட்டால் தொண்டு செய்யலாம்.

நீர் குரு அல்ல, இனி—மக்களாட்சியிலே சீடனாக சிலகாலம் இரு—பிறகு அறிய முடியும் மக்களாட்சியின் மகத்துவத்தை.

மன்னா, மதகுரு—அதோ பாருங்கள்.

(ஓவியக் காட்சியிலே சுற்றி வைக்கப்பட்டுள்ள படங்களைக் காட்டுகிறாள்—அது மக்களாட்சி மலர்ந்த கதையைக் கூறும் படங்களின் வரிசை.)

மக்களை மதியாத மமதையாளர்களின் கதியை—அந்தக் கதியை இதோ பெற்றுவிட்டீர்கள்! இந்தக் கதி உங்களுக்குவர வழி வகுத்தது—இந்தப் பேசும் ஓவியங்கள்தான்—மன்னா, நீ பேசாமல் செய்தாயே—அந்தப் பேசாத ஓவியம் தீட்டிய பேசும் ஓவியங்கள் தான்!

மக்களாட்சி மலர்க!

எல்லோரும் :—மக்களாட்சி மலர்க!

முற்றும்.

# மொழி பெயர்ப்பு நாவல்கள்

## நாநாவின் தாய்

உலகப் பிரசித்தி பெற்ற இலக்கிய மேதையான எமிலி ஜோலாவின் பிரபல நாவலான 'நாநா'வை விட, இந்த 'நாநாவின் தாய்' அதிகமாக விற்பனை யாகியிருக்கிறதென்றால் இதன் சிறப்பைப் பற்றி வேறு சொல்லத் தேவையில்லை.

இந்த நாவலில்தான் அக் காலத்தில் பாரீஸ் நகரின் போதைகளுக்குக் காரணமான நாடகக் கணிகை நாநாவின் ஆரம்ப வாழ்க்கை சித்தரிக்கப்படுகிறது. சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழும் ஒரு சாதாரணப் பெண்ணின் வாழ்வையே நாநாவின் தாயான ஜெர்வேஸியின் மூலம் ஆசிரியர் சித்தரித்துள்ளார்.

மொழிபெயர்ப்பு : *ரா. ஆறுமுகம்.* விலை ரூ. 4—0—0

## சுரங்கம்
### (ஜெர்மினல்)

பிரஞ்சு மேதை எமிலிஜோலா எழுதிய மகத்தான நாவல் இது! உலகத்தில் எந்த மொழியிலுமே இதற்கிணையான புதினம் இன்று வரை வெளிவந்ததில்லை என்ற பாராட்டைப் பெற்ற அதியற்புத சிருஷ்டி இது! தொழிலாளர்களின் சகலவிதமான அரசியல் கருத்துகளையும், பிரச்னைகளையும், புரட்சிப் போராட்டங்களையும், நடைமுறை வாழ்க்கையையும், காதல் துறைகளையும் அலசி ஆராயும் அலாதியான நூல் இது! இந்நாவல் நெடுகிலும் நெஞ்சைத் தொடும் தத்ரூபமான காதல் சித்திரங்களும் உயிரோட்டமும் ஊடுருவி நிற்கின்றன. தொழிலாளர்களுக்கும், தலைவர்களுக்கும் ஒரு பாடப் புத்தகத்தைப் போலவும், காதலர்களுக்கு நூதனமான காவியம் போலவும் விளங்கும் இந்த மகத்தான இலக்கியம் இப்போது முதன் முதலாக எஸ். பி. ராமச்சந்திரன் அவர்களின் இனிய தமிழில் மலர்ந்துள்ளது! **விலை. ரூ. 3 0 0**

## அழகு ராஜா

***பிரபல பிரெஞ்சு மேதை மாபஸான் எழுதிய சிறந்த நாவல்.***

பாரீஸ் பட்டணத்தின் தெருக்களில் பராரியாகத் திரிந்த இதன் கதாநாயகன், பல ரகப் பெண்களின் 'அழகு ராஜா' வாகி, பெரிய இடத்து வட்டாரங்களிலே வட்டமிட்டுச் செல்வத்தின் சிகரத்தை எட்டிப் பிடித்து, பட்டணத்திலேயே பெரிய மனிதனாகி விடுகிறான். ஆனால்......

காதற் சுவையும் நகைச் சுவையும் விரவிய, சமூகப் பிரச்னைகள் நிறைந்த, ஒரு உன்னதமான மனோதத்துவ சிருஷ்டி! மனித சமுதாயத்திற்கு ஒரு படிப்பினையாகப் பயன்படக் கூடிய ஒரு சமூகச் சித்திரம்.

தமிழாக்கம் : *காரை. ஏ. எம். அலி.* விலை ரூ. 3—0—0

**பிரேமா பிரசுரம் : : சென்னை-24**

# சிந்தனையாளர் வரிசை

[ஒவ்வொரு சிந்தனையாளரின் வரலாறும், அவருடைய சிந்தனைகளும், அவர் எழுதிய நூல்களின் சுருக்கங்களும், பொன் மொழிகளும் ஏராளமான விளக்கப் படங்களும் அடங்கிய நூல் வரிசை.]

**1. டார்வின்** [மூன்றும் பதிப்பு]

'குரங்கினமும் மனித இனமும் ஒரு பொதுவான மூதாதை இனத்திலிருந்து உண்டாயின' எனக் கூறிச் சிந்தனைப் புரட்சி செய்து விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்தார் டார்வின்.

*— ஜெகசிற்பியன் எழுதியது*

**2. பிளேட்டோ** [இரண்டாம் பதிப்பு]

புரட்சிகரமான சிந்தனைகள் அனைத்திற்கும் மூலவேர் என உலகம் முழுதும் கருதப்படுபவர் பிளேட்டோ.

*— அரு. ராமநாதன் எழுதியது*

**3. கார்ல் மார்க்ஸ்**

பொருளாதார விடுதலையே மனித குல மாண்பு எனப் பொது உடைமைப் பொருளாதாரப் புரட்சி செய்தவர் மார்க்ஸ்.

*— ரா. தணலன் எழுதியது*

**4. ரூஸோ**

பிரெஞ்சுப் புரட்சிக்கு மூல காரணமானவர் எனவும், சுதந்திரத்தின் தந்தை எனவும் புதுமையைச் சிருஷ்டிக்கப் பிறந்தவர் எனவும் உலகம் போற்றிப் புகழும் சிந்தனையாளர் ரூஸோ.

*— கோமேதகவேலு எழுதியது*

**5. பெஞ்சமின் பிராங்ளின்**

அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் சுதந்திரப் புரட்சியின் போது விடி வெள்ளியாக விளங்கியவர்பெஞ்சமின் பிராங்ளின். தனி மனிதனின் முன்னேற்றத்தையும் தேச முன்னேற்றத்தையும் பற்றிச் சிந்தித்தவர்.

*மார்கரெட் கசின்ஸ்— அரு. ராமநாதன் எழுதியது*

**6. அரிஸ்டாடில்**

சுமார் 2400 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய கிரேக்க தத்துவ ஞானியான அரிஸ்டாடிலின் சிந்தனைகள் உலக வளர்ச்சிக்கு உரமாக விளங்கி வருகின்றன. சிந்தனை ஏன் என்பதைப் பற்றியும் சிந்தித்த மாபெரும் சிந்தனையாளர் அவர்.

*கிருஷ்ணன்பாலா எழுதியது*

**7. இங்கர்சால்.**

பகுத்தறிவு ஏன் எனச் சிந்தித்தவர்—அவருடைய வரலாறு, நூற்சுருக்கங்கள், சிந்தனைகள் அனைத்தும் அடங்கியது]

*இராதாமணாளன் எழுதியது*

**ஒவ்வொன்றின் விலை ரூபாய் 1—4—0**

## புதிய வெளியீடுகள்

### துப்பறியும் நாவல்கள்

1. எமகாதகன்
   'மேதாவி' எழுதியது ரூ. 1 4 0
2. சந்தனபுரி மர்மம்
   'மேதாவி' எழுதியது ரூ. 1 8 0
3. புலிப்பாண்டியன்
   வேலவன் எழுதியது ரூ. 1 8 0
4. மாயச் சமாதியில் மர்மப் புதையல்
   'மேதாவி' எழுதியது ரூ. 1 8 0
5. புல் புல் ரம்பா
   சிரஞ்சீவி எழுதியது ரூ. 1 8 0
6. பாதாள பவனம்
   'மேதாவி' எழுதியது ரூ. 1 8 0
7. சவுக்கடி சாந்தப்பா
   'மேதாவி' எழுதியது ரூ. 1 8 0
8. குல்மால் குபேரன்
   சிரஞ்சீவி எழுதியது ரூ. 1 8 0
9. பாரிஸ்டர் பரிமேலழகர்
   'மேதாவி'எழுதியது ரூ 1 8 0
10. மடிந்தவளின் மர்மக் கடிதங்கள்
    'சேரன்'எழுதியதுரூ. 1 0 0
11. திரிசங்கு சொர்க்கம்
    'மேதாவி' எழுதியது ரூ. 1 8 0
12. கவிழ்ந்த ரயிலில்
    'சந்திரமோகன்' எழுதியது ரூ. 1 0 0

# புதுமுறைத் துப்பறியும் நாவல்கள்

**பேய் வீடு** (இரண்டாம் பதிப்பு) — சிரஞ்சீவி எழுதியது

[மாலதியின் கணவன் காட்டுப்பாதையில் ஒரு சூனியக்காரக் கிழவியைச் சந்திக்கிருன் — ஒரு பேய் வீட்டிற்குள் மாலதியும் துப்பறியும் ராஜாமணியும் அகப்பட்டுக் கொள்கிருர்கள். முடிவு என்ன?] ரூ. 1-8-0

**ரகசிய அறை** (இரண்டாம் பதிப்பு) — 'மேதாவி' எழுதியது

[காதலுக்காக நடிகையாக மாறும் மனோரமாவிற்கு இரு பயமுறுத்தல் கடிதங்கள் வருகின்றன. ஒன்றை எழுதியவன் கொலைப்படுகிருன். இன்னொருவன் அவளைத் தூக்கிச் செல்ல முயல்கிருன்.] ரூ. 1-8-0

**துப்பறியும் காதலி** (2-ம் பதிப்பு) — 'மேதாவி' எழுதியது

[குறும்புக்காரியான லீலா பயங்கரச் சதிக்கூட்டத்தைத் துப்பறியப் புறப்படுகிருள். ராயபுரம் கடற்கரையில் அடையாளம் தெரியாத பெண்ணின் பிரேதம் ஒன்று மிதக்கிறது! கடைசியில்...?] ரூ. 1-8-0

**மர்மத் தீவு** (மூன்ரும் பதிப்பு) — சிரஞ்சீவி எழுதியது

[மனித வாடை தட்டுப்படாத மாயத் தீவிலே, 'மர்மக்குரல் மாயமனிதன் குறளி வித்தை குமரி ஆசை, இவற்றிடையே அடுத்தடுத்து மர்மக்கொலைகள் நிகழ்கின்றன.] ரூ. 1-4-0

**காதலன் கொலை வழக்கு** (2-ம் பதிப்பு) — சிரஞ்சீவி எழுதியது

[தத்ரூபமான கோர்ட் நடவடிக்கைகளுள்ள முதல் பாகமும் துப்பறிபவரின் புலன் விசாரணையுள்ள இரண்டாவது பாகமும் அடங்கியது] ரூ. 1-4-0

**ரத்தப் பசி** (இரண்டாம் பதிப்பு) — சிரஞ்சீவி எழுதியது

[சிறைஇருளுக்குள்ளே, இராவணன் முடி, மாயா ஜாலத் திருடன் மாலி முதலிய பயங்கர அத்தியாயங்களை உடையது.] ரூ. 1-4-0

**இரட்டைக் கொலை** (2-ம் பதிப்பு) — ஜெகசிற்பியன் எழுதியது

['அபாய அறிவிப்பு' பத்திரிகாசிரியர் படுகொலை செய்யப்பட்ட மர்மத்தின் முடிவு திடுக்கிடக்கூடியது. யாரும் எதிர்பார்க்க முடியாதது] ரூ. 1-4-0

**கொலைப்பித்தன்** — 'வேலவன்' எழுதியது

[இரண்டு ரகக் காதலிகளுக்கிடையே திண்டாடும் கதாநாயகனுக்காகப் பன்னிரண்டு வருஷங்களுக்குமுன் நடந்த கொலையை மறுவிசாரணை செய்து பிரமிக்க வைக்கிருர் துப்பறியும் கேசவன்] ரூ. 1-4-0

**மர்மக் கொலை** (நான்காம் பதிப்பு) — சிரஞ்சீவி எழுதியது

[பலரின் நெஞ்சைக் கவர்ந்த மர்ம நாவல்] ரூ. 1-0-0

**நீதி மயக்கம்** (மூன்ரும் பதிப்பு) — சிரஞ்சீவி எழுதியது

[கணவன் கொலையுண்டு கிடந்தான். காதலன் குற்றவாளியாகக் கருதப்பட்டான். ஆனல் முடிவு என்ன?] ரூ. 1-0-0

**துப்பறியும் ராஜு** (2-ம் பதிப்பு) — 'மேதாவி' எழுதியது

[அக்காள் மரணத்தைக் கண்டுபிடிக்கப் பிராணபத்தான, மர்மங்களிலெல்லாம் புகுந்து புறப்படுகிருன் தம்பி ராஜு] ரூ. 1-0-0

# புதுமுறைத் துப்பறியும் நாவல்கள்

## மர்ம மனைவி

காளி கோயில் அருகே, கனத்த இருளிலே ஒருவன் மர்மமாக மடிகிறான். துப்பறியும் நாவலாசிரியர் மர்மம் தப்பி ஓடுகிறார். அவருடைய மனைவி மர்மமாக மறைகிறாள். தாளிட்ட அறைக்குள்ளே தனியாக ஒருவனை குத்துண்டு கிடக்கிறான், அதைத் துப்பறியப் போனவர் தம் காதலியின் கத்திரிக் கோலில் ரத்தக் கறையைக் கண்டு திகைக்கிறார். மிகவும் விறுவிறுப்பான நாவல். விலை ரூ. 1 8 0

## சவப் பெட்டி — சிரஞ்சீவி

மூன்று அயோக்கியர்களும் ஒரு பேராசைக்காரனும் சேர்ந்து, வெகு சாதுர்யமாக பிரமாண்டமான ஒரு குற்றத்தைச் செய்தார்கள். கொள்ளைப் பணம் கிடைத்தது. ஆனால்......? முற்றும் புதுமையான நாவல் இது. விலை ரூ. 1 8 0

## கல் நெஞ்சன் — சிரஞ்சீவி

இந்தத் துப்பறியும் நாவலில் சிரஞ்சீவி என்ன புதுமையைக் கையாண்டிருக்கிறார் என்றால் இது துப்பறிபவர் இல்லாத துப்பறியும் நாவல்! விலை ரூ. 1 8 0

## ரயிலைத் திருடியவள் — 'மேதாவி'

கிழக்கிந்தியக் கும்பினியார் காலத்தில் நடந்த, ரயில் திருட்டைத் துப்பறியப் புறப்பட்டவர், காதலுக்கும் கடமைக்கும் இடையே ஊசலாடுகிறார். விலை ரூ. 1 8 0

## மலையாளச் சீட்டின் மர்மம் — 'மேதாவி'

மங்கள சமாஜத்தின் மரணச்சீட்டு......மலையாளத்துப் பெண்ணுக்கு விசித்திரமான பெயர்......இருளில் பைசாசச் சிரிப்பு......வீரிட்டலறும் பெண் குரல்......

இத்தனை மர்மங்களும் ஓர் அழகான பெண்ணைச் சுற்றிச் சுற்றி வருகின்றன. அவளைச் சுற்றிச் சுற்றி வருகிறார் துப்பறியும் குமார்! விலை. ரூ. 1 8 0

## சூரக் கோட்டை மர்மம் — 'மேதாவி'

மர்ம நாவல். அத்தியாயத்துக்கு அத்தியாயம் பிரமிப்பூட்டும் சம்பவங்கள் மனதிற்குத் திகைப்பூட்டும். விலை ரூ. 1 8 0

## பச்சை மாளிகை மர்மம் — 'மேதாவி'

பட்டினத்திலிருந்து பதினைந்து மைல் தொலைவிலுள்ள பச்சை மாளிகையில் மர்ம நடமாட்டம்—என்று ஆரம்பித்தால் முடிவுவரை மர்மத்துக்குமேல் மர்மம் பின்னும் இனிய நாவல். அழகிய மூவர்ண ஜாக்கெட்டோடு கூடியது. விலை ரூ. 1 4 0

## மாய மனிதர்கள் — 'மேதாவி'

'இன்ன தேதியில் இன்ன நேரத்தில் இன்னதற்காகப் பழி தீர்த்துக் கொள்ளப் போகிறோம்' என்ற முன் எச்சரிக்கையுடன்; சொன்னபடியே செய்து காட்டுபவர்கள் மாய மனிதர்கள். விலை ரூ. 1 4 0

K.B
25.5.71

# சுவையான புத்தகங்கள்

## சிந்தனையாளர் வரிசை

[ஒவ்வொரு சிந்தனையாளரின் வரலாறும், நூற் சுருக்கங்களும் சிந்தனைகளும், சித்திரங்களும் அடங்கிய நூல் வரிசை ; ஒவ்வொன்றும் விலை ரூ. 1-4-0]

1. டார்வின் (ஜெகசிற்பியன்)
2. பிளேட்டோ (அரு. ராமநாதன்)
3. கார்ல் மார்க்ஸ் (ரா. தணலன்)
4. ரூஸோ (கோமேதகவேலு)
5. பெஞ்சமின் பிராங்ளின் (அரு. ராமநாதன்)
6. அரிஸ்டாடில் (கிருஷ்ணன் பாலா)
7. இங்கர்சால் (இராதாமணாளன்)

## ஆராய்ச்சி :

1. ரேடியோ நாடகம் எழுதுவது எப்படி?
2. நீங்கள் உயரமாக வளர்வது எப்படி?
3. மேடையில் பேசுவது எப்படி?
4. இலாகிரிப் பொருள்களா? எமதூதர்களா? ஒவ்வொன்றும் விலை. ரூ. 1-8-0
5. புதுமணத் தம்பதிகளுக்கு விலை ரூ. 2-4-0
6. பறக்கும் தட்டு ரூ. 2-0-0

## நாவல்கள்

1. சுரங்கம் (எமிலி ஜோலா) ரூ. 3-0-0
2. அழகுராஜா (மாபஸான்) ரூ. 3-0-0
3. நானாவின் தாய் (எமிலிஜோலாவின் நாவல்) ரூ. 4-0-0
4. எதிர்வீட்டு ஜன்னல் (காதல் நாவல்) ரூ. 1-0-0
5. சிலந்திக் கூடு ('தங்கமணி'யின் பாலர் நாவல்) ரூ. 1-0-0
6. ஒற்றைக் கண்ணன் ('தங்கமணி'யின் பாலர் நாவல்) ரூ. 1-0-0
7. ஆசை வெள்ளம் ('சுகி'யின் காதல் நாவல்) ஒவ்வொன்றும் ரூ. 0-12-0

## அரு. ராமநாதன் எழுதியவை

1. கதாநாயகி
2. அம்பிகாபதி
3. பழையனூர் நீலி
4. கோழிப் பந்தயம்
5. வேதாளம் சொன்ன கதைகள் (ஒவ்வொன்றும்) ரூ. 1-4-0
6. இராஜராஜசோழன் (சரித்திர நாடகம் ரூ. 2-4-0)

## பொன்மொழிகள் வரிசை

1. ஔவையார்
2. விவேக சிந்தாமணி
3. பைபிள் 4. குர்ஆன்
5. பஞ்சதந்திரம்
6. புத்தர் 7. சங்கரர்
8. காந்தி (ஒவ்வொன்றும் 0-8-0)

**பிரேமா பிரசுரம் : சென்னை-24.**

MADURAI UNIVERSITY LIBRARY
25 MADURAI.
58547

## இந்த நூல்



தில்லை வில்லாளன் தீட்டிய
தீஞ்சுவைக் கருத்தோவியம்

ஆசைவலை விரிக்கும் ஆடலரசியின் அழகு வெறி; ஆதிக்க வலை விரிக்கும் அரசர் பிரானின் அதிகார வெறி; அவர்களை ஆட்டிப்படைக்கும் ஆனந்தரின் குலவெறி— இவற்றிற்குப் பலியான மாபெரும் ஓவிய னுக்காகப் பரிந்துபேசி மலை நாட்டில் மக்க ளாட்சியை மலர்வித்த ஒரு மங்கையின் கதைதான்—

பேசும் ஓவியம்

பிரேமா பிரசுரம் :: சென்னை-24.

PREMA ART PRINTERS, MADRAS-24